
ஜூன். 22- ஜூன். 28, 2008 June 22 - June 28, 2008 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



# சர்வதேசத்திடம் இலங்கை மீண்டும் தலைகுனியுமா?

# சர்வதேசத்திடம் இலங்கை மீண்டும் தலைகுனியுமா?

இலங்கை அரசின் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற தொனியிலான யுத்தம் தீவிரமாகிக் கொண்டிருக்கும் நிலையில்-

இலங்கைக்கு எதிராக சர்வதேசமட்டத்தில் இருந்து வரும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் இலங்கையை தலை குனியவைத்துள்ளன.

சர்வதேசத்தின் நடுநிலையான அமைப்பான ஐ.நாவின் மனித உரிமைகள் கமிஷனின் கூட்டத் தொடரில் இரண்டாவது தடவையாக இலங்கை தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேசத்தில் இருந்து வரும் குற்றச்சாட்டுக்களை மறுத்துவந்த இலங்கை அரசு இப்போது அதற்கு புது வியாக்கியானம் கூறியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முன்னெடுக்கப்படும் போது மனித உரிமை மீறல் சம்பவங்களும் இடம் பெறத்தான் செய்யும் என இலங்கை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

பயங்கரவாதம் என அரசாங்கம் பிரகடனம் செய்வது ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு செயற்பாடாகவே இருக்கின்றது.

தமிழர்களைத்தான் கடத்துகிறார்கள்; தமிழர்களைத்தான் கொலை செய்கிறார்கள்;




தமிழர்களைத்தான் கைது செய்து சிறைகளில் அடைத்து சித்திரவதை செய்கிறார்கள்.

ஒட்டுமொத்தத் தமிழர்களையும் பயங்கரவாதிகளாக எடை போட்டு, தமிழர்களுக்கு எதிரான பயங்கீரவாதப் போரை அரசு முன்னெடுக்கின்றது.


பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரமாக்கியுள்ள அரசு, யுத்தத்தில் சம்பந்தப்படாத, யுத்தம் நடக்கும் பிரதேசத்துக்கு வெளியே உள்ள தமிழர்களை ஏன் துவம்சம் செய்கின்றது என்று கேட்கிறார்கள் தமிழர்கள்.

பயங்கரவாத அழிப்பு என்ற பேரில் இன அழிப்புப் போரையே அரசு முன்னெடுக்கின்றது என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

தொழில் வாய்ப்புக்காகவும், மேல் கல்வி வாய்ப்புக்காகவும் தெற்கில் வதியும் தமிழ் இளைஞர்களை களையெடுக்கும் நடவடிக்கையைத்தான் அரசு முன்னெடுக்கின்றது என்கிறார்கள் அவர்கள்.

தமிழர்கள் எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் அரச இயந்திரத்தின் செயற்பாடு மேலும் பலர் விடுதலைப் போராட்டத்தில் இணைய உதவும் வகையில் அமைகிறது என்கின்றனர் நோக்கர்கள்.

கடந்த கால அரசுகள் தமிழர்களின் கல்வியில், தொழில் வாய்ப்பில் காட்டிய ஓரவஞ்சகப் போக்குத்தான் விடுதலைப் போராட்டம் முகிழக் காரணம் ஆயிற்று. இன்று மீண்டும் பயங்கரவாதம் என்று கூறிக் கொண்டு தமிழ் இளைஞர்களை வேட்டையாட முனைவது விடுதலைப் போராட்டத் துக்கு மேலும் உரம் சேர்க்கும் செயல் என்பது சிங்களத் தலைமைகளின் தலையில் ஏறவில்லை என்று கூறுகிறார்கள் தமிழ் அரசியல் வாதிகள்.



தமிழர்கள் எல்லோருக்கும் பயங்கரவாதிகள் என்ற நாமம் சூட்டி, சிங்களத் தலைமைகள் செயற்பட முனையுமானால் இலங்கைக்கு எதி ரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குவியத் தான் போகின்றன.

கடந்த கால வரலாற்றைசற்றுப் பின்நோக்கிப் பார்த்தால்-

1983 கலவரத்தின் போது சரி, செம்மணிப் படுகொலையின் போது சரி, கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகளின்போது சரி, ஆயிரக் கணக்கான தமிழர்கள் காணாமற் செய்யப்பட்ட போது சரி இலங்கை மீது சர்வதேசம் அழுத்தங்களையோ, ஆலோசனைகளையோ முன்வைக்க முன்வரவில்லை.

அப்போது இலங்கை விவகாரம் சர்வதேசமயப் படுத்தப்படவில்லை. சர்வதேசம் இலங்கை விவகாரங்களில் உள்நுழைய விரும்பவில்லை.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் - தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளும், அங்கீகரிக்கப் பட்ட பிரதிநிதிகளுமான விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்ட பின்னரே சர்வதேசத்தின் பிரசன்னம், உள்நுழைதல் அதிகரித்தன.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கின்றது.

**யாழவன்**

அவர்களுக்கு உரிமைகளை வழங்காது அவர்களை அடக்கி வைத்து ஆள சிங்களத் தலைமைகள் முனைகின்றன என்ற உண்மை சர்வதேசத்துக்கு புரிய ஆரம்பிக்கிறது.

அதன் விளைவாகவே தற்சமயம் இலங்கை மீதான சர்வதேசத்தின் கரிசனை அதிகரித்துள்ளதுடன் இலங்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிவும் சர்வதேசத்துக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னர் ஒருபக்க - அரசின் பக்க நியாயங்களை நம்பி பயங்கரவாத அமைப்பாக தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை பிரகடனம் செய்தது சர்வதேசம்.

இலங்கை அரசின் தமிழ்மக்களுக்கு எதிரான போக்கை நன்கு உணர்ந்துள்ள சர்வதேசம் இலங்கைக்கு எதிராக போர்க் கொடி தூக்கி நிற்கின்றது.

இலங்கையில் கடத்தல்கள், கொலைகள், காணாமற்போகச்செய்தல், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் என இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் காரணமாக ஐ.நா. மனித உரிமைக்கவுன்சிலில் அங்கத்துவத்தை இலங்கை இழந்தது.

கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நடந்த தேர்தலில் இந்நிலை இலங்கைக்கு ஏற்பட்டது.

கவுன்ஸிலின் ஆசியபிராந்தியத்துக்கான பிரநிதித்துவத்திற்கான தேர்தலில் 13 வாக்குகளால் இலங்கை தோல்வியைச் சந்தித்தது.

இலங்கையின் மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் காரணமாக, சர்வதேசம் வெளிப்படுத்திய எதிர்ப்புக் காரணமாக இலங்கை வகித்து வந்த அங்கத்துவத்தையே இழந்தது. இதன் மூலம் சர்வதேசம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது.

இந்தத் தோல்வியின் பின்னாவது இலங்கை திருந்துமா என சர்வதேசம் எதிர்பார்த்திருந்தது. ஆனால் சர்வதேசத்துக்கு தோல்வியே மிஞ்சியது.

சர்வதேசம் எதிர்ப்பைக் காட்டிய போதும், தெற்கில் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என தினமும் 5, 6 பேர் கடத்தப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தினமும் பொலீஸ் நிலையங்களிலும் கண்காணிப்புக் குழுவிலும் செய்யப் படும் முறைப்பாடுகள் தினமும் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் ஆள்கள் காணாமற் போகச் செய்யும் கொடுமை திடீரென அதிகரித்துள்ளதாக பலவந்தமாக அல்லது சுயவிருப்பின்றி காணாமற்போகச் செய்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு கடந்த 12 ஆம் திகதி கருத்து வெளியிட்டு மறுநாள் 13 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை விவகாரம் எடுக்கப்பட்டது.

இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சுக்கு புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ரஜீவ விஜயசிங்க நீண்ட அறிக்கை ஒன்றை அங்கு சமர்ப்பித்தார்.

இலங்கை அரசுக்கு எதிராக கை வைக்க வேண்டாம் என அந்த அறிக்கையில் கோரிய போதும், இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகளும், மனித உரிமைகள் அமைப்புகளும் அங்கு உரக்கக் குரல் கொடுத்துள்ளன.

இலங்கை மனித உரிமை நிலைவரத்துக்கு எதிராக 50 சதவீதமானவர்களும் ஆதரவாக 50 சதவீதமானவர்கள் குரல் கொடுத்தனர்.

டென்மார்க், சுவீடன், கனடா, அல்ஜீரியா ஆகிய நாடுகளும் மனித உரிமை அமைப்புக்கான சர்வதேச மன்னிப்புச் சபை, கியூமன் ரைட்ஸ்வோச், இன்ரபெயித் சர்வதேசம் போன்ற அமைப்புகளும் இலங்கைக்கு எதிராக குரல் கொடுத்தன. ஜப்பான் முழுமையாக எதிர்க்காவிட்டாலும் மனித உரிமை நிலை தொடர்பாக ஐ.நா. வின் சிபார்சுகளை இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியது.

இலங்கையில் மனித உரிமை நிலை சீராகவேண்டுமானால் ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழு கிளை ஒன்று இலங்கையில் அமைக்கப்பட வேண்டும் என அவை கோரின.

ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளான கட்டார், சீனா, பகரின், இந்தோனேசியா போன்ற நாடுகள்



இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்தன.

இந்த விவாதத்தின் பின்வெளியிட்ட அறிக்கையில் ஐ.நா. இலங்கையிடம் முக்கிய கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல் ஆகியன குறித்த முறைப்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட பொறுப்பு மிக்க தரப்பினர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. இலங்கைப் பிரதிநிதிகளை கேட்டுக் கொண்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இரண்டாவது தடவையும் இலங்கை தலை குனிந்துள்ளது.

மீண்டும் தலை குனியாமல் இருக்க நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்குமா? அல்லது யுத்த வெறியில் கண்மூடித்தனமாக நடந்து நாட்டின் நற்பெயரைக் கெடுக்கப்போகிறதா? பொறுத்திருந்து பார்ப்போம்.

PUBLIC LIBRARY
JAFFNA

# சைவசமயம் மறுமலர்ச்சி காண அயராது உழைத்த ஆன்மீக அன்னை

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது 83ஆவது வயதில்- இம்மாதம் 15ஆம் திகதி காலமானார்.

அவரது மறைவு- தமிழுக்கும் சைவசமயத்துக்கும், தமிழ்ச்சமூகத்துக்கும் ஒரு பாரிய இழப்பாகும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக மட்டுமன்றி யாழ்.வாழ் இறுதி 11 வருடங்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியையாக இருந்து 1976இல் ஆசிரியை தொழிலிலிருந்து இளைப்பாறினார்.

அதன் பின்னர் முழுமூச்சாக சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்ற தன்னை முயற்சியை மனதில்கொண்டு- சிவத்தமிழ் செல்வி, துர்க்கா துரந்தரி போன்ற பட்டங்கள் அவரைத்தேடிவந்தன.

வழிபாட்டுக்கு மட்டுமல்லா மல் சமூக கலாசார விழிப்புணர்வுக்கும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் ஓர் இலக்காக மிளிர்ந்தது.

சமயப் பணிகளுடன் ஆற்றிய மகத்தான சமூகப்பணி மகளிர் இல்லத்தில் ஆகும். உண்மையிலேயே இவரது சமய, சமூகப்பணிகளே இவரை ஒரு தெய்வீக நிலைக்கு உயர்த்தின.

சைவத் தமிழ் ஆய்வு நூலகம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னை இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி அன்னசத்திரம், துர்க்காபுரம் மகளிர்





தமிழ்மக்களின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராகவும் கற்றோர் போற்றும் ஒரு பெரு மகனாகவும் எந்த இடரிலும் மனம் தளராத அஞ்சாமை உடையவராகவும் நிர்வாகத்தில் சிறந்த ஆளுமை உடையவராகவும் பிறந்த மண்ணுக்கும் தனது சகோதர, சகோதரிகளான தமிழ்மக்களுக்கும் இடையறாது அனைவரும் வியக்கும் வண்ணம் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

1925 ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி இந்த உலகில் உதித்த அம்மையார் அவர்கள் இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்றார். 1945 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக தொழில் ஆரம்பித்தார். தமிழிலும்

## அருள்

சைவசமயத்திலும் பெரிதும் ஆர்வம் கொண்டு- இரண்டினையும் செவ்வனே கற்று 1952இல் பண்டிதை என்ற பட்டத்தை பெற்றார். இவரது ஆர்வம் மேலும் தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1958இல் 'சைவப்புலவர்' என்ற பட்டத்தைப் பெற்றார். தனது 31 வருட ஆசிரியை வாழ்க்கையில்- அர்ப்பணித்தார். 1950-60 கால கட்டத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சைவசமய சொற்பொழிவுகள் நிகழாத கோயில்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லை என்று சொல்லலாம்.

அவரது அழகு தமிழ் நடையை யும் ஆழம்மிக்க கருத்துக்களையும்- கணீரென்ற குரலில் கேட்காத தமிழ் நெஞ்சங்கள் இல்லை என்றே சொல்ல லாம்.

1970 ஆரம்ப கால கட்டங்களில் அவரது வாழ்க்கை ஒரு திருப்பு முனையை சந்தித்தது. துர்க்கை அம்மனுக்கு தெல்லிப்பளையில் ஒரு மாபெரும் ஆலயம் அமைக்க வேண்டும் என்று திருப்பணியை அக்காலகட்டத்தில் ஆரம்பித்தார். சாதாரண ஓலைக்குடிலில் அவரது கிராமமான தெல்லிப்பழையில் குடிகொண்டிருந்த துர்க்கை அம்மனுக்கு ஆலயம் அமைக்கும் திருப்பணிக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தார். இன்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஒரு சக்தி வாய்ந்த தெய்வமாகவும்-துர்க்கை அம்மன் கோவில் உலகத் தமிழரிடையே பிரசித்திபெற்று இருப்பதற்கும்- அம்மையாரின் சளைக்காத உழைப்பே முக்கிய காரணமாகும். அவரது ஆலயத்திருப்பணி

இதனைத் தொடர்ந்து- துர்க்கா புரம் மகளிர் இல்லம், ஆதரவில் லாத பெண்குழந்தைகளின் காப்பக மாக உருவாகியது.

நோயாளர்கள், வயோதிபர், ஆதர வற்றோர், அநாதைகள், அகதிகள் என்போரின் வாழ்க்கை வளம்பெற தெல்லிப்பளை ஆலயம் மூலமாக பெரும் பணியாற்றினார் அம்மையார்.

தமிழும் சைவமும் வளர்வதற்கு நூலகங் களை உருவாக் கினார்.



எத்தனை யோ அரிய நூல்கள் அச்சு வாகன மேற உதவிகள் புரிந்தார். சைவம், தமிழ் என்பவ ற்றில் இவரது பாண்டித் தியம் கண்டு கௌரவ கலா நிதிப் பட்டம் அளித்து யாழ்ப் பாண பல் கலைக் கழகம் பெருமை தேடிக் கொண் டது. சமூக சேவை அமைச்சு 1991இல் 'கலாசூரி' விருதை அன்னாருக்கு வழங்கியது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இல்லம் போன்ற நிறுவனங்கள் அம்மையாரின் சமூக சேவைக்கு கட்டியங்கூறி விளங்குகின்றன.

''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் சுவாமி விவேகானந்தர். வயிற்றுக்குச் சோறிட வேண்டும், வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து பாரினை உயர்த்திட வேண்டும்'' என்றார் மகாகவி பாரதியார்.

இவற்றின் பொருள் அறிந்து கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 இல் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை ஆரம்பித்தார். ஆயினும், 25வருட காலத்தில் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக அன்னை தனது மனவலிமையினால் குழந்தைகளை இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலைக்கு எடுத்துச்சென்று மகளிர் இல்லத்தைக் காப்பாற்றினார். இடப்பெயர்வு ஏற்பட்ட காலத்தில் உசன் கந்தசுவாமி கோயில் பரிபாலகர் இல்லத்தில் மகளிர் இல்லத்தை நடத்தி பிள்ளைகள் குறைவின்றி வாழ வழிவகுத்தார்.

சைவம், தமிழ், சமூகம் என்ற மூன்று வழிகளில் பெரும் தொண்டாற்றி மறைந்து போன செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை தமிழ் சமூகம் என்றென்றும் மறக்காது.




குழந்தையை மாமியார் வசம் விட்டுப்போகும் மருமகள் மாலையில் வேலையால் வீடு திரும்பியதும் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுகிறாள்.

"என்ன கண்ணா சாப்பிட்டாயா? தூங்கினாயா?" என்றெல்லாம் பாசத்துடன் கேட்கிறாள். (அந்தக் குழந்தைக்குப் பேசத் தெரியாவிட்டாலும்) இது தாய்மையின் இயல்புதான்.

ஆனால், நாளெல்லாம் குழந்தையை கவனமாகப் பார்த்துக்கொண்ட மாமியாரிடம், ''அம்மா, நீங்கள் சாப்பிட்டீர்களா? கொஞ்சமாவது தூங்கினீர்களா? என்று கேட்டால் அந்தத் தாய்க்கு எவ்வளவு சந்தோஷம்? அதனால் அவரின் இயங்கு சக்தி மேலும் அதிகரிக்கும் அல்லவா! இதைப் பெரும்பாலான மருமகள்கள் மறந்துவிடுகிறார்களே!

# ஆப்பிழுக்கத் தயாராகும் பொன்சேகா

எல்லோரும் ஏறிவிழுந்த கழுதையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கிவிழுந்தாராம் என்ற நக்கல் மொழி ஒன்று எம்மக்களிடையே வழக்கத்தில் உள்ளது.

பிரபாகரனைப் பிடிக்கப்போகிறோம் என்று கூறிக்கொண்டு வடக்கில், மேல்வெடி வைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்காவின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் அண்மைக்கால அறிக்கைகளைப் பார்த்தால் இவர் இராணுவத் தளபதிகள் வரிசையில் அடுத்த சக்கடத்தார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

சிங்கள தேசமும் அதன் படைகளும் எதனை எல்லாம் புரிந்து வைத்திருக்கின்றன என்பதனை நோக்குவதை விட எவற்றை எல்லாம் இன்னமும் புரியாமல் இருக்கின்றன என்பதனை பார்க்கும்போது வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது.

தற்போது விடுதலைப் புலிகளின் பெரும் கோட்டையாக விளங்குவது வன்னி. இதனை முற்றாகப் பிடித்துவிட்டால் புலிகளும் அவர்களின் தலைவர் பிரபாகரனும் அவ்வளவுதான். இதில் எந்த ஐயமும் இல்லை. இதனை கொழும்பில் இருந்துகொண்டு அரசின் ஊடகப்பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல போன்று பேசலாம் அல்லது காகிதத்தில் எழுதி வைத்து அழகுபார்க்கலாம். ஆனால், யதார்த்தத்தில் இது நடக்கக்கூடியதா? சாத்தியமானதா என்று பார்த்தால்தான் உண்மைநிலை புரியும்.

கடந்த சில மாதங்களாக மன்னாரில் நின்று பூச்சாண்டி காட்டிய கதைபோன்று வன்னிக் கதையையும் தமது ஊடகங்களில் அளந்து தள்ளி சிங்கள மக்களின் காதுகளில் பூச்சுற்றுவதற்கே பொன்சேகா தலைமையிலான அரசபடைகள் பெரும் பிரயத்தனம் செய்கின்றன.

உண்மையில் வடபோர் முனையில் புலிகளின் தந்திரோபாயங்கள் என்ன என்று சற்று ஆராய்ந்தால்தான் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியின் எதிர்பார்ப்புக்களும் அதில் உள்ள பாரிய சிக்கல்களும் புரியும்.

மன்னார் எனப்படுவது இராணுவ ரீதியில் பார்க்கப்போனால், புலிகளுக்கு தமது கடற்பலத்தை உறுதி செய்வதற்கான இடமாகவே ஆரம்பம் முதல் கருதப்பட்டு வந்த ஒன்று.

தமிழீழ கடற்பரப்பு என்று பார்க்கையில் கிழக்கு முதல் வடக்கு ஊடாகச் சுற்றிவந்து மேற்குவரை பெரும்பாங்கான கடலை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எந்தப் பெரிய போருக்கும் பெரும் பக்கபலமாக அமையும் என்பதில் புலிகள் என்றுமே அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஆனையிறவு யாருக்குச் சொந்தமோ அவர்களுக்குத்தான் யாழ்ப்பாணம் சொந்தம் என்று தளபதி பிரிகேடியர் பால்ராஜ் கூறியது எவ்வளவு உண்மையோ தமிழீழத்தின் கடற்பரப்பு யாருக்குச் சொந்தமோ அவர்களுக்குத்தான் தமிழீழம் சொந்தமானது என்பதும் மறுக்க முடியாத உண்மை

அந்தவகையில், மன்னார் கடல் எனப்படுவது கடந்தகாலங்களில் புலிகளின் ஸ்ரீலங்காவின் தென்பகுதி நோக்கிய நகர்வுக்கு நீர்கொழும்பு, புத்தளம் பகுதிவரை தடையின்றி பயன்படுத்தப்பட்டு வந்தமை அரச படைகள் ஒன்றும் அறியாதது அல்ல. இருந்தும், அவர்களின் கண்ணில் மண்தூவிவிட்டு கனகச்சிதமாக தமது காரியங்களை புலிகள் அரங்கேற்றி வந்தனர்.

இராணுவம் கைப்பற்றி விட்டதாக அறிவித்துவிட்ட பின்னரும் மன்னார் எருக்கலம்பிட்டி பிரதேசத்திற்கு கடல்வழியாகச் சென்று தாக்குதல் நடத்தி முகாமை இரண்டு மணிநேரம் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்துவிட்டு அங்கிருந்து ஆயுதங்களையும் அள்ளிவந்துள்ளனர் என்றால் அது மன்னார் கடலில் புலிகளின் கை எவ்வளவு ஓங்கியுள்ளது என்பதற்கு சரியான சாட்சி.

மன்னாரில் கடந்தகாலங்களில் 90கள் முதல் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் மற்றும்முறியடிப்பு எல்லாமே படையினருக்கு பாரிய இழப்பை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டவையே தவிர அங்கு தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டவை அல்ல. அவ்வளவுக்கு மன்னார் இராணுவ ரீதியில் புலிகளுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ, பல்லாயிரக் கணக்கான போராளிகளை நிறுத்தி வைத்து அவசியம் தக்கவைத்திருக்க வேண்டிய பிரதேசமாகவோ இருக்கவில்லை.



இதுகடந்தகால படை நடவடிக்கைகளிலேயே தெளிவான விடயம்.

புலிகள் தமது படையணிகளை இப்பகுதிகளில் நிறுத்துவதும் பின்னர், பிரதான படைநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போது அங்கிருந்து அப்புறப்படுத்தி வடக்கு களமுனைகளுக்கு அனுப்புவதும் காலகாலமாக நடந்துவந்த ஒன்று.

அந்தவகையில், இன்று புலிகள் மன்னார் விடயத்தில் பேணிவரும் இராணுவ உபாயமும் அதுவே.

தாம் கைப்பற்றிய பகுதிகள் என்று இராணுவம் மார்தட்டிக் கொண்டிருக்கும் மன்னார் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை நோக்கி நாளையே புலிகள் அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டாலோ அல்லது மன்னார் இராணுவத்துக்கான பிரதான வழங்கல் பாதையாக இருந்துவரும் வவுனியா - மன்னார் வீதியை ஊடறுதது ஒரு தாக்குதலை மேற்கொண்டாலோ நாளை மறுநாள், இராணுவம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் எங்கு நின்றதோ அங்குபோய் சரணாகதி அடைந்துவிடும்.

இராணுவத்தைப் பொறுத்தவரை ஒரு பற்றாலியன் பின்வாங்கி ஓடினால் அடுத்தடுத்த பற்றாலியன்கள், முதல் பின்வாங்கிய பற்றாலியனுக்கு முன்னரே இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்துவிடும்.

இந்த விடயம் இராணுவத்துக்கும் தெரியும். அதனால்தான் ஜெயசிக்குறு காலத்தில் தாம் விட்ட பிழையை மன்னார் விடயத்தில் விட்டு விடக் கூடாது என்ற அச்சத்துடன், தாம் கைப்பற்றிய பிரதேசங்களை தக்க வைத்துக்கொள்ளவும் அதன் பாதுகாப்பை முடிந்தளவு உறுதி செய்துகொள்ளவும் புதிய புதிய படைகளை களம் இறக்கியுள்ளது.

செயலணிப்படை 2 என்றும் 61 ஆவது படையணி என்றும் தப்பியோடிய இராணுவத்தினரை அழைத்து வந்து ஒருங்கிணைத்து புதிய படையணிகளாக்கி அவற்றை, தாம் கைப்பற்றிய இடங்களில் நிறுத்தி வைத்திருக்கிறது.

ஆனால், இங்கு அரசு தமது படைகளை குவிக்கும் அளவுக்கு புலிகள் தரப்பில் எந்த அசுமாத்தமும் காட்டப்படவில்லை.

ஏனெனில், படையினருக்கு பாரிய இழப்பை கொடுக்கும் அளவுக்கு அங்கு ஸ்ரீலங்காவின் முக்கிய படைகளின் செறிவு இல்லை. மன்னாரை நோக்கி அரசு தனது முக்கிய படையணிகளை நகர்த்தி அங்கு தனது முழுக்கவனத்தையும் திசைதிருப்பினால் புலிகளின் பதில் வேறு மாதிரி அமையலாம்.

புலிகளின் இந்த உபாயத்தின் பின்னணியில் இன்னொரு காரணமும் உண்டு.

அதாவது, இராணுவத்தின் மன்னார் நடவடிக்கை என்பது, பெயரளவில் இராணுவ நடவடிக்கை என்று கூறப்படுகின்றபோதும், அது தெற்கில் அரசியல் நடத்துபவர்களின் வாய்களுக்கு பொரி கடலையாக நடத்தப்படும் ஓர் அரசியல் நடவடிக்கை ஆகும்.

ஆட்கள் இல்லாத குடாநாட்டை கைப்பற்றிவிட்டு, யாழ்.செயலகத்தில் தனது மாமனார் கொடியேற்ற கொழும்பில் இருந்து எப்படி சந்திரிகா அம்மையார் புளகாங்கிதம் அடைந்தாரோ அதே போன்று, புனித தலமான மடுவைக் கைப்பற்றிவிட்டு அதனை தெற்கில் காட்டி அரசியல் நடத்தவேண்டும் என்பது மகிந்தவின் நீண்டநாள் ஆசை.

மகிந்தவின் மடு ஆசை இன்று நேற்று வந்தது அல்ல; அது அவர்

**ப.தெய்வீகன்**

ஆட்சிக்கு வரும்போது கூடவே வந்தது. (மகிந்த முன்னர் மடுவுக்குப் போக புலிகளிடம் அனுமதி கேட்டதும் அதற்கு தமது பகுதிக்குள் வந்தால் அவருக்கு தமது பாதுகாப்பே அளிக்கப்படும், அரச படைகளின் பாதுகாப்போடு வரமுடியாது என்று புலிகள் அறிவித்தவுடன் தனது மடுப்பயண கனவை மகிந்த மூட்டை கட்டி வைத்ததும் பழைய கதைகள்)

ஆகவே, ஸ்ரீலங்காவின் தென்பகுதியில் இவ்வாறு அரசியல் நடத்துவதற்காக நடத்தப்படும் இந்த இராணுவ நடவடிக்கைகளை எல்லாம் எதிர்த்து சமரிட்டு, முக்கியத்துவம் இல்லாத மன்னாருக்காக தமது போராளிகளை பலிகொடுக்க புலிகள் தயார் இல்லை. அதில் புலிகள் நூற்றுக்கு இருநூறு சதவீதம் உறுதியாகவே உள்ளனர்.

ஆனால், இதே போன்றதொரு களமௌனத்தை மணலாற்றிலோ முகமாலையிலோ வவுனியாவிலோ புலிகள் பேணுகிறார்களா என்பதனைப் பார்த்தால் புலிகளின் சமச்சீரற்ற இராணுவ அணுகுமுறையும் அதனுள் இராணுவத்தினருக்கு விரித்துள்ள வலையும் தெளிவாகப் புரியும்.

மன்னார் போன்றுதான் கடந்தமாதம் முகமாலையில் இருந்து இராணுவத்தினர் பெரும் எடுப்பில் முன்னேறினர். நடந்தது என்ன?

அடிக்கடி மணலாற்றிலும் வவுனியா குஞ்சுக்குளம் பகுதியாலும் இராணுவம் இவ்வாறான நடவடிக்கைகளில் தான் முனைப் படைந்துபோய் உள்ளது. நடப்பது என்ன?

முகமாலையில் ஒரே நாளில் நடந்தது. மணலாற்றிலும் வவுனியா விலும் தவணை முறையில் நடக்கிறது. அவ்வளவு தான் வித்தியாசம். படையினரின் உடலங்கள் தெற்கிற்கு அனுப்பப் பட்டவண்ணமே உள்ளன.

ஆனையிறவை மீண்டும் கைய கப்படுத்தும் இராணுவத்தின் நப்பாசை அக்கினிச்சுவாலையில் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து கொண்டே உள்ளது. அதற்கு அகரம் எழுதும் வகையில் முகமாலையால் அடம் பிடித்துக்கொண்டிருக்கும் படையினருக்கு புலிகள் வைத்திருக்கும் மருந்து மன்னாருக்கு ஏன் தேவையற்றது என்பது தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு புரிய வாய்ப்பில்லைதான்.

அதேபோன்றுதான் மணலாறும், மணலாற்றால் முன்னேறி முல்லைத் தீவுக்குள் கால்பதித்து விடலாம் என்பது படையினரின் அடுத்த திட்டம்.

புலிகள் மணலாற்றிலிருந்து திருப்பி ஒரு தாக்குதல் தொடுத்தால் அங்கு குடியமர்த்தப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களின் கதி என்ன என்பதை எல்லாம் கணக்கெடுக்காமலேயே இராணுவம் அங்குநின்று அடம் பிடித்துக்கொண்டுள்ளது.

மணலாற்றுக்குள் கால்வைத்த இந்தியப்படைகள் உட்பட எல்லாப் படைகளும் புலிகளிடம் நல்லபாடம் கற்றுத் திரும்பியதே வரலாறு.

மணலாறு காட்டுக்குள் விதைக் கப்பட்டிருந்த கண்ணிவெடிகளினால் தாம் பட்டபாடு குறித்தும் புலிகளின் காடு சார்ந்த இராணுவ உபாயங்களுக் குள் எப்படி அகப்பட்டோம் என்பது பற்றியும் பிரபாகரனை பிடிப்போம் என்று புறப்பட்டு வந்த பல முன்னாள் இந்திய இராணுவத் தளபதிகள் இன்றும் புத்தகம் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

இராணுவம் கூறுவதனைப் போன்று வன்னிக்குள் வந்துவிடுவது அவ்வளவு சுலபம் என்றால் ஜெயசிக்குறு நடவடிக்கை ஏன் இரண்டு வருடங்கள் நடந்தது என்பதை பொன்சேகா அன் கொம்புனி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆனையிறவை கையில் வைத்துக் கொண்டே வன்னிக்குள் வர இரண்டு வருடங்களாக தவில் அடித்தவர்கள் கடைசியில் புலிகளின் பதிலடியில் ஒருவாரத்தில் வவுனியாவிலும் யாழ்ப் பாணத்திலும் போய்நின்றார்கள்.

இன்று எந்தக் கேந்திர முக்கியத் துவமும் இல்லாத மன்னாரை பின்னணியாக வைத்துக்கொண்டு முல்லைத்தீவை பிடித்து புலிகளின் தலைவரை பிடிக்கப்போவதாக அறிக்கை விடுகின்றனர்.

ஆகவே, புலிகளின் இராணுவத் தந்திரோபாயம் என்பது ஆளணி ரீதியான இழப்பை கூடியளவுக்கு குறைத்துக்கொள்வதை அடிப்படை யாகக் கொண்டதே தவிர, எந்தத் திட்டமிடலும் இன்றி தென்னிலங்கை அரசியல்வாதிகள் நடத்தும் போருக்கு எல்லாம் பதில் சொல்லும் நிலையில் இல்லை.

இந்தவகையில், மகிந்த சகோதரர்களின் கைப்பொம்மையாக களத்தில் நின்றுகொண்டு மன்னார் பற்றியும், மணலாறு பற்றியும் நகைச்சுவை அறிக்கைகளை அள்ளிவீசும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மகிழ்ச்சியடையலாம். மகிந்த வீட்டில் பாற்சோறு பொங்கலாம்.

ஆனால், வன்னிக்குள் கால்வைத்த படைகள் ஆப்பிழுத்த குரங்காக அடிவாங்கும்போதும் காலிவீதியில் இரத்மலானைக்கும் கொழும்பு மருத்துவமனைக்கும் இடையில் அம்புலன்ஸ் வாகனங்கள் ஓடும்போதும் தான் விடயங்கள் அம்பலத்துக்கு வரும். சிங்கள தேசத்துக்கு உண்மைகள் புரியும்.

நன்றி தமிழ்நாதம்.

PUBLIC LIBRARY JAFFNA

# ராமதாஸ் - கருணாநிதி மோதல் உச்சக்கட்டம்!

## உறவு முறிந்தது



தி.மு.க.- பா.ம.க. உறவு முறிந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பா.ம.க. தலைவர் ராமதாஸ் இடைவிடாமல் - தி.மு.கவை வசைபாடி வந்ததால் தி.மு.க. தலைமையும் தொண்டர்களும் கொதித்துப்போய் இருந்தனர். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பா.ம.கவை கூட்டணியிலிருந்து கழற்றினாலே நிம்மதி கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது.

### பக்கத்து வீடு

கருணாநிதி ஆட்சிக்கு மதிப்பெண் வழங்கி அறிக்கைவிட்டார் ராமதாஸ். பதிலடியாக கடலூரில் நடந்த தி.மு.க. மகளிர் அணி மாநாட்டில் கனிமொழி, கலைஞருக்கு மதிப்பெண் வழங்க ஒருவர் பிறந்து வரவேண்டும் என காட்டமாக பேசினார். எதிர்க்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே ராமதாஸ் எதிர்த்து அறிக்கை விடுவதாக தி.மு.க. தலைமை கருதுகிறது. எப்படியோ அடுத்த லோக்சபா தேர்தலில் பா.ம.கவானது பாரதிய ஜனதாவுடன் அணிசேர்வது உறுதியாகி விட்டது. ஆனால், அதே பாரதிய ஜனதாவுடன் தி.மு.கவும் கூட்டணி சேர நேர்ந்தால் என்ன நிலைமை என்பதுதான் சிக்கலான பிரச்சினை. காரணம் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வருவதால் பாரதிய ஜனதாவுடன் கூட்டணி சேர்ந்தால் என்ன என்ற நப்பாசை தி.மு.கவின் சில தலைவர்களுக்கு உள்ளது. தி.மு.க., அ.தி. மு.க. இரண்டு கட்சிகளிலுமே காங்கிரஸுக்கு ஆதரவான கூட்டமும் பி.ஜே.பிக்கு ஆதரவான கூட்டமும் உள்ளது. அதேபோல காங்கிரஸிலும், பி.ஜே.பியிலும் தி.மு.க. அனுதாபிகளும் அ.தி.மு.க. அனுதாபிகளும் என இரு பிரிவுகள் உள்ளன. இப்பிரிவினர் தத்தமக்கு வாய்ப்பான தேசிய அல்லது மாநில கட்சிகளுடன் கூட்டணி சேருமாறு தத்தமது கட்சிகளை நிர்ப்பந்திப்பது வழமை. உதாரணமாக காங்கிரஸ் கட்சியில் தங்கபாலு கோஷ்டியினர் அ.தி.மு.கவின் அனுதாபிகளாவர். இவர்கள் எப்படியாவது காங்கிரஸ் கட்சியை அ.தி.மு.கவுடன் பிணைத்துவிடவே முயல்கின்றனர். தி.மு.க. - காங்கிரஸ் உறவு ஓரளவு வலுவாக இருந்தாலும் சமீபகாலமாக உரசல் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் தி.மு.கவுக்கு பி.ஜே.பியுடன் அடுத்த

**எஸ்.சுரேந்திரஜித்**

தேர்தல் கூட்டணியில் இணைய இஷ்டமுண்டு. ஆனால், அதற்கு குறுக்கே நிற்பது பா.ம.க.வாகும். பா.ம.க. பி.ஜே.பியுடன் இணைந்த நிலையில் தி.மு.க.வும் அங்கு போய்ச்சேர்ந்தால் அந்தக் கூட்டணியிலும் பா.ம.கவும் தி.மு.கவும் குத்து வெட்டுப்படும் நிலை உருவாகும். பா.ம.க. இவ்வாறு தி.மு.க.வை சாடிக்கொண்டே இருக்க காரணம் தி.மு.க.வினதும் பா.ம.கவின தும் வாக்கு வங்கிகள் ஒன்றேயாக இருப்பதே. பா.ம.கவும் தமிழ்மொழி அபிமானம், சினிமா எதிர்ப்பு, நாத்திகம், சிகரெட், சாராய எதிர்ப்பு என ஓரளவு முற்போக்குச் சிந்தனைகளை வலியுறுத்தும் கட்சியாகும். தி.மு.கவும் இதே கருத்துக்களைக் கொண்ட கட்சியே தான். சினிமா வெறிபிடித்த பாமரமக்களின் வாக்குகளை வசீகரித்துக்கொண்ட கட்சிகள் அ.தி.மு.கவும் தே.மு.தி.கவும் ஆகும். ஆக டாக்டர் ராமதாஸின் நீண்டகால நோக்கம் தி.மு.க. வாக்குவங்கியை கைப்பற்றுவதே. தமிழநாட்டில்

(24ஆம் பக்கம் பார்க்க)


# STUDY IN EASTERN EUROPE
## MEDICINE & ENGINEERING

Colombo Ads





Group of Sri Lanka Students at Vitebsk State Medical University

**Belarus இல் உள்ள மாநில பல்கலைக் கழகங்களில் அனுமதி**

- இலங்கை மருத்துவ சபை, உலக சுகாதார ஸ்தாபனம் ஜி.எம்.சி. பிரித்தானியா, அமெரிக்கா, மற்றும் 150நாடுகளில் அங்கீகாரம் பெற்றது-
- உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் செய்யப்படும்.
- 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருத்துக்களை பரிசீலிக்கலாம்.
- மருத்துவத்துறையில் PHD/ சிறப்பு கற்கை

விசா - 100% உத்தரவாதம்

**To register & for information - 0773017883**

PATHE

# PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

**Head Office**
37 School Lane (Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel: 3327752/2502012 2591271

**Overseas Student Placement Department**
111-1/2, Maya Avenue, Colombo 6.
Tel: 0112586418

www.patheacademy.org

# VISA GUARANTEED

**UK, USA, CANADA, AUSTRALIA, ITALY, FRANCE, NEW ZEALAND, RUSSIA, GERMANY, SWISS, BELARUS, POLAND, UKRAINE, KRUGYZTAN**
**ஆகிய நாடுகளுக்கான STUDENT, VISIT, BUSINESS, MIGRATION மற்றும் SETTLEMENT, WORKING HOLIDAY MAKER ஆகியவற்றுக்கான VISA ஒழுங்குகள் மற்றும் DOCUMENTATION செய்து தரப்படும்**

Sigapore, Malasiya and India ஆகிய நாடுகளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ( பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை ) அனுமதிபெற்றுத்தரப்படும் பெற்றோருக்கும் (VISA) பெற்றுத்தரப்படும்

Visa Application நிரப்ப Personal Statement மற்றும் Documentation செய்வதற்கும் UK Visa மறுக்கப்பட்டவர்களுக்கு Appeal மூலமாகவோ அல்லது Re- Application மூலமாகவோ Visa பெறுவதற்கு மற்றும் Visa தொடர்பான சகல சந்தேகங்களுக்கும் ஆலோசனை வழங்கப்படும் .

**குறிப்பு :**

- எமது நிறுவனத்தின் சகல விசா செயற்பாடுகளும் அனுபவம் வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் சட்டத்தரணிகளால் செய்து தரப்படுகின்றன.
  எமது நிறுவனத்தின் மூலம் Visa விண்ணப்பம் செய்தவர்களும் அல்லது Appeal செய்தவர்களும் பரிபூரணபலனையே அடைந்திருக்கின்றார்கள்.
- இதுவரை எம்மூலம் தொடர்பு கொண்ட எவருக்கும் நிராகரிக்கப்பட்டதில்லை.
- இதுவே எமது நிறுவனத்தின் வெற்றி எனவே Visa மற்றும் Appeal செயற்பாடுகளில் பரிபூரண பலனை அடைய எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**எம் மூலம் விண்ணப்பித்து பூரண பலனை அடைந்தவர்களின் விபரங்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.**

# PARANAN ASSOCIATES PRIVATE LIMITED

**No - 403 1/1, Galle Road, Colombo -06. Tel : 2551241, Mobile : 0777 370292**
**Fax : 2507932, Web : www. paranan.com , Email : parananassociates@gmail.com**

சுடர்ஒளி
ஜூன் 22- ஜூன் 28 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

# சர்வாதிகாரப் பாதை

தலைநகர் கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் ஆள் கடத்தல் சம்பவங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளன. இம்மாதம் முதல் இரண்டு வாரங்களில் மட்டும் கொழும்பில் 20இற்கும் அதிகமான கடத்தல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கடத்தப்பட்டவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரைத் தவிர அத்தனை பேரும் தமிழர்களே.

வெள்ளைவானில் பொலிஸ் உடையில் அல்லது இராணுவ உடையில் அல்லது சிவில் உடையில் வருவோர் விசாரணைக்கு என்று ஆட்களைக் கொண்டு செல்கின்றனர். அதன் பின்பு அவர்கள் பற்றி தகவல் ஒன்றும் தெரிய வருவதில்லை.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இம்மாதம் 15 ஆம் திகதி வரை இப்படிக் கடத்தப்பட்டோர் 128 பேர். இவர்களில் ஐவர் மட்டும் முஸ்லிம்கள், மூவர் சிங்களவர், ஏனையோர் அனைவரும் தமிழர்கள்.

இப்படி கடத்தப்பட்டோரில் 32 பேர் கடுமையான சித்திரவதைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் 13 பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் 83 பேர் பற்றி தகவல் எதுவும் இல்லை என்றும் மலையகமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

ஆகவே இப்படியான சம்பவங்கள் ஜனநாயக உரிமைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் பெரும் சவால் ஆகும்.

ஐ.நா.மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச ரீதியில் மனித உரிமைகளுக்கு குரல்கொடுக்கும் அமைப்புகள் இலங்கை அரசாங்கத்துக்கு இதுதொடர்பாக இதுவரை கொடுத்த அழுத்தங்கள் எதுவித பயனையும் அளிக்கவில்லை.

அனேக கடத்தல் சம்பவங்கள் தலைநகரில் மிகவும் நெரிசலான பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

கடத்துவோர் இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வெள்ளைவானில் பொலிஸ் உடையில் அல்லது இராணுவ உடையில் அல்லது சிவில் உடையில் வருகிறார்கள்.

கடத்திக் கொண்டு அத்தனை காவலரண்களையும் தாண்டிச் செல்கிறார்கள். இது குறித்து கடத்தப்பட்டோரின் குடும்பத்தவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தால் எந்தவித நடவடிக்கையும் இல்லை. வெள்ளை வானின் இலக்கத்தை தெரிவித்தாலும் அது குறித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கப் பின் நிற்கின்றார்கள் என்கின்றார்கள் கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள்.

கடந்த வருடம் கடத்தப்பட்டவர்களிலும் ஒருவரைக் கூட பொலிஸாரினால் கண்டுபிடித்துக் கொடுக்க முடியவில்லை. அதனால் தான் கடத்தல்களின் பின்னணி தெளிவாகத் தெரிகிறது.

வட பகுதி மக்கள் கொழும்பு வருவது பாதுகாப்பானது அல்ல என்றார் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இதற்கு பதில் அளிக்கு முகமாக வடபகுதி மக்கள் கொழும்பு வரத் தடையில்லை என்றது அரசு. அப்படியானால் கொழும்பு வரும் தமிழ் மக்களுக்கு - கொழும்பில் தங்கி இருக்கும் தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியுமா ?

சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்கோ அல்லது பயங்கரவாத குற்றத் தடுப்புப்பிரிவின் விசாரணைக்கோ கைது செய்யப்படுவதை எவரும் ஆட்சேபிக்கப் போவதில்லை.

ஆனால் பாஸிச ஆட்சியின் பாணியில் கடத்திக் செல்லப்படுவதும், காணாமல் போவதும் நாட்டை சர்வாதிகாரப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

# தீகவாபி சர்ச்சையாக மாற்றப்பட்டிருக்கும் நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம்

அஸ்லம் எஸ். மௌலானா

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் உயிர் உடைமைகள் மற்றும் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியடைந்த கரையோர முஸ்லிம்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வீடுகளை அம்மக்களுக்கு வழங்க விடாமல் தடுத்து வைத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் நடவடிக்கையானது முஸ்லிம்கள் தொடர்பில் சிங்கள பேரின சக்திகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பதை நன்கு உணர்த்தியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவினரின் இந்நடவடிக்கையானது அவர்கள் வழிபடுகின்ற புத்தரின் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமான செயற்பாடு என்பதை அவர்கள் அறியாமல் இல்லை.

**நிர்வாணமாகிப் போன பௌத்த சித்தாந்தம்!**

உண்மையில் இதனை காவி உடை அணியாத - பௌத்ததுறவிகள் அல்லாத வேறு அரசியல் சக்திகள் செய்திருக்குமாயின் அதற்கு வேறோரு வடிவம் கொடுக்க முடியும்.

ஆனால், பௌத்த மதத்தின் உயிர் நாடிகளாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் காவி உடை அணிந்த பிக்குகள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதன் மூலம் பௌத்த சித்தாந்தமே இன்று முழு நிர்வாணமாகிப் போயுள்ளது.

இதனால்தான் அமைச்சர் டிலான் பெரேரா போன்ற பௌத்தர்கள் வெட்கித் தலைகுனிந்து - பௌத்த சித்தாந்தத்திற்கு ஏறபட்டிருக்கும் அவமானத்தை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இனவாத வெறியில் ஊறித் திளைத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய பிக்குகளின் பிற்போக்குத்தனமான செயற்பாடுகளில் உண்மையான பௌத்தர்களுக்கு உடன்பாடில்லை என்பதையே அமைச்சர் திலான் பெரேராவின் நிலைப்பாடு வெளிப்படுத்தி நிற்கிறது.

**புலிகளின் சுனாமி பொதுக் கட்டமைப்பு?**

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி பேரனர்த்தத்தினால் மிக அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் அம்பாறை மாவட்டமே என்பதை உலகே அறியும். அதே வேளை அங்குள்ளகரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் தமிழ், முஸ்லிம் பகுதிகளேயாகும்.

அங்கு சுனாமியால் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் பலியானதுடன் பல்லாயிரக்கணக்கானோர் தமது சொத்துக்களையும் வீடு வாசல்களையும் இழந்து நிர்க்கதியடைந்தனர். பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள், வைத்தியசாலைகள் பலவும் முற்றாக அழிவுற்றன.

சுனாமி அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட போதிலும் அப்பகுதி மீள்கட்டுமானப்பணிகளுக்கு அரசு முன்னுரிமை கொடுக்கவில்லை.

பொதுவாக, இதன்போது தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கு மாநிலம் சிங்கள ஆட்சியாளர்களினால் புறக்கணிக்கப்பட்டமையினாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள், சுனாமி மீள் நிர்மாண பொதுக்கட்டமைப்பு அதிகார அலகைக் கோரி வலியுறுத்தினர்.

**தென்பகுதிக்கு முன்னுரிமை**

விடுதலைப் புலிகளின் இத்தகைய கோரிக்கையிலுள்ள நியாயங்களை ஏற்றுக்கொண்ட சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களின் பேரில் அவ்வாறான பொதுக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு சந்திரிகா அரசு முன்வந்த போதிலும் அந்த அரசில் அப்போது அங்கம் வகித்த ஜே.வி.பி. அதனைக் கடுமையாக எதிர்த்ததுடன் நீதிமன்றம் சென்று தடையுத்தரவையும் பெற்றுக் கொண்டது.

ஜே.வி.பி.யின் அத்தகைய நடவடிக்கை சந்திரிகா அரசுக்கு நல்ல தொரு வாய்ப்பாக அமைந்து விட்டது. உலகின் நாலா பகுதிகளிலும் இருந்து வந்து குவிந்த நிதியுதவிகள் அம்பாந்தோட்டை, காலி உட்பட தென்னிலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

இந்த சூழ்நிலையில் - 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, தென்னிலங்கைக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுத்து- சுனாமி மீள்கட்டுமானம் என்ற போர்வையில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார்.



சுனாமியால் அழிவடைந்த பகுதிகளின் மீள் நிர்மாண வேலைகளுக்காக சர்வதேச சமூகம் மனிதாபிமான அடிப்படையில் வாரி வழங்கிய நிதியுதவிகள் மூலம் தனது சொந்த இடமான அம்பாந்தோட்டை மற்றும் காலி, மாத்தறை போன்ற மாவட்டங்களைக் கட்டியெழுப்புவதிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடிய அக்கறை எடுத்து செயற்பட்டார் என்பது மிகையான கருத்தல்ல.

**சிங்கள தேசத்தின் பாரபட்சம்**

சிங்கள தேசத்தின் திட்டமிட்ட புறக்கணிப்பு - பாரபட்சம் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானப்பணிகள் மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் புனரமைப்புப் பணிகள் மிகவும் பின்னடைவான நிலையிலேயே இப்போதும் இருந்து வருகின்றன. சில பாடசாலைகளினதும் வைத்தியசாலைகளினதும் மீள் நிர்மாணப் பணிகள் இன்னும் பூர்த்தியடையவில்லை. சில வேலைத்திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சில நேரடியாகக் களத்தில் குதித்து - அங்கேயே முகாமிட்டு - நிர்மாணப் பணிகளிலும் வாழ்வாதார உதவித் திட்டங்களிலும் மும்முரம் காட்டியதன் பயனாகவே அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்கள் இன்று ஓரளவு முன்னேற்றம் கண்டு வருகின்றன.

எவ்வாறாயினும் முஸ்லிம் பகுதிகளில் நிலவும் நிலப் பற்றாக்குறை காரணமாக சுனாமியால் வீடுவாசல் களை இழந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு மாற்று வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதில் பெரும் சிக்கல்நிலை தோன்றியது.

தமிழ்ப் பிரதேசங்களில் போதியளவு அரச மற்றும் தனியார் காணிகள் இருக்கின்றமையால் அரச சார்பற்ற நிறுவனங்கள், அவ்வப்பிரதேச தமிழ் மக்களுக்கு அங்கேயே வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளன.

**மயோனின் வற்புறுத்தல்**

அதுவும் அரசின் நீண்டகால இழுத்தடிப்புகளுக்குப் பின்னரே அரசசார்பற்ற நிறுவனங்களினால் அப்பணிகளைமேற்கொள்ளமுடிந்தது. ஆனால், முஸ்லிம் பிரதேசங்களில் நிலவும் பாரிய நிலத் தட்டுப்பாடு பிரச்சினை காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்களினால் எதுவும் செய்ய முடியவில்லை.

வீடுகளை நிர்மாணித்துத் தருவதற்கு இடங்களை அடையாளம் காட்டுமாறு அவை வலியுறுத்தியபோதிலும் - மக்களின் கோரிக்கையை ஏற்று - அதன்படி செயலாற்ற அரசு முன்வரவில்லை. முஸ்லிம் அமைச்சர்கள் அதற்கு அழுத்தம் கொடுக்கவுமில்லை.

விவசாயம் செய்யப்படாமல் கைவிடப்பட்டிருக்கும் வயல்காணிகளை அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து கொள்வனவு செய்து -- அவற்றை மண் போட்டு நிரப்பி -- அப்பகுதிகளில் வீடமைக்கமுடியும் என்ற கருத்தை முன்வைத்த பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா அதனைக் கடுமையாக வலியுறுத்தி வந்தார். நாடாளுமன்றத்திலும் செய்தி ஊடகங்களிலும் அதற்காக அவர் குரல் எழுப்பினார்.

ஆனால், அப்போது அவர் எதிர்க்கட்சி எம்.பியாக இருந்தமையினால் அவரது கோரிக்கையை ஏற்றுச்செயற்படுத்தும் விடயத்தில் அரசு அவ்வளவு கரிசனை செலுத்தவில்லை. குறித்த வயற்காணிகளை கொள்வனவு செய்வதற்கும் அவற்றை மண்போட்டு நிரப்புவதற்கும் மிகக் கூடுதல் நிதி தேவைப்படும் எனக் கூறி கைவிரிக்கும் நிலைப் பாட்டையே அரசு வெளியிட்டது.

**பேரியலின் முயற்சி**

என்றாலும் கடந்தவருடம் ஜனவரி மாதம் அவர், அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றபின்னர் அத திட்டம் சாத்தியமாக்கப்பட்டது. அதன பிரகாரம் கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது போன்ற இடங்களில் வயல் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு - அவை மண் போட்டு நிரப்பப்பட்டு - இப்போது வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடமைப்புப் பணிகள் கூட மிகவும் மந்த கதியிலேயே இடம் பெற்று வருகின்றன என்பது வேறு விடயம். எவ்வாறாயினும் இங்கு நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகள் போதுமானவையாக இல்லை.

அதனால், சம்மாந்துறை, மஜீத்புரம், வளத்தாப்பிட்டி போன்ற இடங்களிலும் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதுபோலவே அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நுரைச்சோலை எனும் இடத்தில் சவூதி அரேபியாவின் நிதியுதவியுடன் 500 வீடுகளைக் கொண்ட ஒரு வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்களின் முயற்சி காரணமாக - அவரது வழிகாட்டுதலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இவ்வீடமைப்புத் திட்டத்தில் 400 வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடைந்து விட்டன.

**புனித பூமி ஆக்கிரமிப்பு?**

இந்நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய இவ்வீடமைப்புத்திட்டத்தை தீகவாபி சர்ச்சையாக மாற்றியுள்ளது. முஸ்லிம்களுக்கு இவ்வீடுகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் தீகவாபி புனித பூமியை ஆக்கிரமிப்பதற்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப் முயற்சிக்கிறார் எனத் தெரிவித்தே ஜாதிக ஹெல உறுமய தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு மாத்திரம் வீடுகள் பகிர்ந்தளிக்க ஏற்பாடு, தீகவாபி புண்ணிய பூமிக்குட்பட்ட பகுதியில் அத்துமீறிய முஸ்லிம் குடியேற்றம், அது தீகவாபி விகாரைக்கே ஆபத்தாக அமைந்து விடும் என்கின்ற வாதங்களின் பிரகாரமே எல்லாவல மேதானந்த தேரர் உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவைப் பெற்றுள்ளார்.

முஸ்லிம்களுக்கான இவ்வீட்டுத் திட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடும், அதற்குச் சாதகமான வாதங்களும் முற்றிலுமே ஓர் இன விரோத- கடும் போக்குவாத செயற்பாடுகள் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

ஜாதிக ஹெல உறுமயவின் வாதம் எவ்வித அடிப்படையுமற்ற- உண்மைக்குப் புறம்பான-குதர்க்கம் நிறைந்த-- திட்டமிட்ட இனவாதமிக்க நச்சுக்கருத்துக்களே என்பதை அமைச்சர் திலான் பெரேராவின் கடிதமும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

**நேருக்கு ஏன் இந்தக் குதர்க்கம்?**

தீகவாபி என்பது அட்டாளைச்சேனை முஸலிம் பெரும்பான்மை பிரதேச செயலக ஆளுகைக்கு உட்பட்ட ஒருபகுதியாகும். அதேவேளை குறித்த வீடமைப்புத்திட்டம் அமைந்திருக்கும் நுரைசோலைப் பிரதேசம் அக்கரைப்பற்று முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலகப் பிரிவுக்குள் வருகின்ற ஓர் இடமாகும்.

தீகவாபியும்,நுரைச்சோலையும் இரு வேறு ஆளுகைப்பிரிவுக்குட்பட்ட வெவ் வேறு பகுதிகளாகும். ஆனால், ஹெல உறுமய தலைவர் மேதானந்த தேரர், நுரைச்சோலையை தீகவாபிக் குட்பட்ட ஒரு பகுதியாகக் காட்ட எத்தனிக்கின்றார்.

இப்படி அவரது வாதங்களில் நிறையவே குளறுபடிகளும், குதர்க்கங்களும் காணப்படுகின்றன. முஸ்லிம் விரோத சிந்தனையும்,கிழக்கு முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமிக்கும் பேரினவாதத் திட்டமும், சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சூழ்ச்சியும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு நடவடிக்கையாகவே ஹெல உறுமயவின் இத்தகையசெயற்பாட்டை அவதானிக்க முடிகிறது.

தீகவாபி சர்ச்சையாக மாற்றப் பட்டிருக்கும் நுரைச்சோலை வீடமைப்பு, அது தொடர்பிலான வழக்கு நிலைவரம், தீகவாபி சர்ச்சையின் பின்னணி உள்ளிட்ட இன்னும் சில விடயங்களை அடுத்த வாரக் கட்டுரையிலும் ஆராயமுடியும்.

# தமிழ்த் தேசியம்

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழீழ மக்கள், தமது தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக, அளித்து வருகின்ற ஆதரவின் சக்தி மிகப் பலம்வாய்ந்த ஒன்றாகும். தங்களது தார்மீகக் கடமையின் அவசியம் குறித்தும், முக்கியத்துவம் குறித்தும் அவர்கள் மிக நன்றாகவே அறிந்தும், புரிந்தும், தெளிந்தும் உள்ளார்கள். ஆகவே, புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் தார்மீக கடமையின்




அவுஸ்திரேலியா மெல்பேர்னிலிருந்து
**சபேசன்**

அவசியம் குறித்தும், முக்கியத்துவம் குறித்தும் நாம் இன்றைய தினம் தாக்கிக்க முன்வரவில்லை, மாறாக! புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழீழ மக்கள் கொண்டுள்ள வலிமையின் பரிமாணத்தை வேறொரு தளத்தில் நின்று தாக்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்த் தேசியம் என்கின்ற சொல்லாக்கம் குறித்துப் பலவிதமான கருத்துருவாக்கங்கள் தாக்கிக்கப்பட்டு வருகின்றன. இன்றும் ஸ்ரீலங்காவின் சிங்களப் பேரினவாதம் பல தாக்கங்களை வெளியிட்டு வருகின்றது. உலகளாவிய வகையில் தமிழ்த்தேசியம் என்கின்ற கருத்துருவாக்கம் அதிக அளவில் விவாதிக்கப்பட்டும் வருவதை நாம் காண்கின்றோம். தமிழ்த்தேசியம் குறித்து ஓர் எளிமையான விளக்கத்தை நாம் அளிப்பதன் மூலம் இந்தக் கட்டுரையின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தலாம் என்று எண்ணுகின்றோம்.

தேசியம் என்கின்ற சொல்லாக்கம் வெறும் உணர்வுகளால் மட்டும் உருவானது என்றும் அந்த உணர்வுகளால் கட்டப்படுகின்ற மனக்கோட்டைதான் தேசியம் என்கின்ற கருத்து என்றும் - தேசியத்திற்கு எதிரான தாக்கங்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது தேசியம் என்பது ஒரு கற்பனையாகும். அதற்கு அடித்தளமாக, ஆதாரமாக எதுவும் இல்லை என்று உலகளாவிய ரீதியில் நீண்டகாலமாகவே தேசியத்திற்கு எதிரான கருத்துகள் தாக்கிக்கப்பட்டு வருகின்றன. கற்பனையான ஒன்றின்மீது கட்டப்பட்டு எழுகின்ற வெறும் வெற்று உணர்வுகள்தான் தேசியம் என்று தேசியத்திற்கு எதிரானவர்கள் கூறிவருகின்றார்கள்

தேசியம் ஒரு கற்பிதச் சமூகம் என்று பெனடிக்ட் அண்டர்சன் என்பவர் வாதிடுவார்.

இந்தக்கூற்றை நாம் முற்றாக மறுக்கின்றோம். தாயக நிலப்பகுதி, இனக்குழு வழிப்பட்ட இரத்த உறவிலிருந்து தொடங்குகின்ற மனித ஒற்றுமை, அதன் மொழி,

(22 ஆம் க்கம் பார்க்க)


## மனோதத்துவ வைத்தியம்
**(GENERAL PSYCHOTHERAPHY)**

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபக மறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோதத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம், நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின் போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்**
அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2008 ஜூலை 05, 06, 07, 08 வரை
(முன்கூட்டியே தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்)
**Vanni Inn,**
2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா,
Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**கொழும்பில்...**
2008 ஜூன் 22 முதல் 28 வரை
**New Ahmed Tourist Inn,**
BangBang Building
2-2/2, Bankshall Street, Colombo - 11.
Tel No. 5368426, 5368427
**Hot Line: 0777 569205**

யாழ்ப்பாணம்... (பின்னர் அறிவிக்கப்படும்)

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவுசெய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஒடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும்
ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road,
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.



## இலங்கையில் முதல் முறையாக உயர்கல்வி ஊக்குவிப்புக்காக.....

**(Asian Pearl Institute of Media and Management )**
**( Govt . Regd. No : PV 63192 )**

**APIMM**

நவீன கணணி இயந்திரம் ஒன்றை இலவசமாக வழங்குகிறது. அத்தோடு பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் நிருபர்கள் மற்றும் அறிவிப்பாளராகும் அரிய சந்தர்ப்பம். நேரடி மற்றும் தபால் மூலம் கற்கை நெறிகள், மிகக் குறைந்த கட்டணம். அதை தவணை அடிப்படையிலும் செலுத்தலாம், அந்த அதிஷ்டசாலி நீங்களாகவும் இருக்கலாம், மேலும் ஆங்கிலம் தமிழ் மற்றும் சிங்கள மொழி கற்கை நெறிகள் வயது வித்தியாசமின்றி எவரும் கற்கலாம், கணணியுடன் செல்லலாம். வீட்டிலிருந்தே பட்டம் பெறும் வாய்ப்பு அங்கீகாரம் பெற்ற தரம்வாய்நத சான்றிதழ்.

எமது நேரடி தபால் மூல கற்கை நெறிகளாவன :

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Mass Media | 6 Month | 8,500/= + VAT |
| Diploma in Journalism | 3 Month | 7,500/= + VAT |
| Diploma in Braodcasting | 3 Month | 6,500/= + VAT |
| Diploma in Professional Camera Handling | 40 Hours | 10,900/= + VAT |
| Diploma in Management | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Marketing | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Sociology | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Geography | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Philosophy | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Psychology | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Education Psychology | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Law | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Human Rights | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Political Science | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in Herbal Studies | 6 Month | 9,500/= + VAT |
| Diploma in English | 3 Month | 6,500/= + VAT |
| Diploma in Computer Application | 6 Month | 6,500/= + VAT |

**இவ் இலவச கணனி திட்டத்தில் பங்கு கொள்வதற்கும் கற்கை நெறியை பதிவு செய்து கொள்வதற்கும் நீங்கள் செய்யவேண்டியது இதுதான்**

எமது காரியாலத்தில் நேரடியாக பதிவு செய்யலாம் அல்லது பயில விரும்பும் கற்கைநெறியை குறிப்பிட்டு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பமொன்றை தயாரித்து உங்கள் சுய முகவரி எழுதிய ( 15/- முத்திரை ஒட்டப்பட்ட ) இரண்டு நீளமான கடித உறைகளுடன் பதிவுக் கட்டணம் ரூபா 450/- க்கான மணியோடரையும் இணைத்து எங்களுக்கு அனுப்புங்கள்
மணியோடர் **Dr.Y.L.N. Hyther**- பணிப்பாளர் **APIMM** என்ற பெயருக்கு எடுத்து தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு......

எமது காரியாலயமான : The Director Asian Pearl Institute of Media and Management,69/208/1/1, Vystwyke Road, Crow Island, Mattakkuliya, Colombo -15, எனும் முகவரிக்கு உடனே எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள். மேலதிக விபரங்களுக்கு : 0115 747120, 0115 723934, 0775 724845, 0786 056164
E- mail - apimmeducation@gmail.com / director apimm@gmail.com Web : www.apimm.com

எமது உயர் கல்வி நிறுவன ஊடக பிரிவின் ..... மற்றுமொரு இமையத்தை எட்டும் இமாலய முயற்சி .

நிலா இணைய வானொலி இலங்கையிலிருந்து உலகமெங்கும் மிக விரைவில்

குறிப்பு : எமது உயர்கல்வி நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்படும் சகல டிப்ளோமா பாடநெறிகளுக்கும் முழு நேர மற்றும் பகுதி நேர விரிவுரையாளர்கள் / போதனாசிரியர்கள் மற்றும் நிறுவன முகாமையாளர்கள் , இலிகிதர்கள்,Computer Operators, வரவேற்பு உத்தியோகத்தர் ஆகியோர்கள் உடனடியாக தேவை தகுதியுள்ள ஆண் பெண் இருபாலாரும் உடனே விண்ணப்பிக்கவும் அல்லது வார நாட்களில் அலுவலக நேரத்தில் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும் சம்பளம் பேசித்தீர்மானித்து கொள்ளலாம்.

DR. Y.L.N. ஹைதர் நிறைவேற்றுப்பணிப்பாளர்

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

தாங்கள் தவண்டை அடிப்பது மணமக்கள் பற்றிய தகவலுக்கா?... வேல்அமுதனின் சுயதெரிவுமுறையில் தகவல்ஜாஸ்தி!.. மேலதிக விபரங்களுக் குத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளிற் சுயதெரிவுமுறைமுன் னோடி, மூத்தபுகழ்பூத்த சர்வதேச சகல ருக்குமான திருமண ஆற்றுப்படுத்து நர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் விசாரித்தறிக! வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலை பேசி:-2360488, 2360694, 4873929.

---

இலவசமாக தொடர்பு கொள்ள முடி யும். இலவசமாக பதியமுடியும். 4,000 Hindu, Christians, Muslims மணமக் களின் பதிவுகள். மாதந்தோறும் 10,000 பேர் 24 நாடுகளிலிருந்து பார்வையிடு கின்றனர். இலகுவானது www.subamangalam.com.

## தேவை

நிறுவனமொன்றிற்கு Computer Type Setters உடனடியாகத் தேவை. அத் துடன் கொழும்பு வீதிகளில் நன்கு பரிச்சயமுள்ள சாரதி ஒருவரும் தேவை. சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 83-D, Hampden Lane, Wellawatte, Colombo 06. Tel:2366042.

---

Wanted Female Computer Typist for www.thaalee.com. Better Salary Av-ailable. Phone:2523127, 2520619

---

வீட்டுப் பணிப்பெண், காவலாளி, சாரதி, பராமரிப்பாளர், சமையற்காரர், வீட்டுப்பையன் கொழும்பு பங்களா க்களில் வேலைக்குத் தேவை. சம்பளம் 8000/= - 12000/=க்கு இடையில் அரச அனுமதி பெற்ற சமித் ஏஜென்சி, 53/F, கொஸ்இன்னவத்தை, கட்டுவாவல, பொரலஸ்கமுவ 011 4868554, 011 5620304 புறக்கோட்டை - பிலியந்தலை, 120 வீதி, கட்டுவாவல 10 ஆம் கட்டை சந்தியில் இறங்கவும்.

---

பேக்கரி பாஸ்மார்கள் உதவியாளர்கள் மற்றும் கவுண்டர் பையன்கள் (Sales Boys) வெய்ட்டர்மார்கள் உடனடியாக தேவை. கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில்வரவும். 23, காலி வீதி தெஹி வளை. The French Bakers, No. 23, Galle Road, Dehiwala. நகர சபைக்கு அருகாமையில். 077 3477887.

---

கொழும்பில் இயங்கும் பிரபல ஹாட் வெயார் கொம்பனிக்கு பில் எக்கவுன்ட்ஸ் கிளார்க் ஆகவும் வெளிவேலை செய் யக்கூடிய ஒருவரும், கடை வேலைக்கு இரண்டு வேலையாட்களும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். நேரில் வர வேண்டாம். 43 1/1, புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13. 071 6356904 2432919.

---

Dispensary உதவியாளர்கள்/Nursing Assistants தேவை. க.பொ.த.சா.தரம் சித்தியடைந்தவர்கள். Bio-data, NIC உடன் நேரில் வரவும். தங்கும் வசதியுண்டு. Medical Centre, இல.12, தெமட்டகொட பிளேஸ், கொழும்பு - 09. Phone:0777 777792.

---

Retired Field Clerk Wanted.Permanent Residents of Colombo, Apply with Contact Telephone Number To:- Sea line Trading Company, No.53, Maliban Street, Colombo 11. Tel.No.2348559.

---

Hotel Top Form க்கு வேலையாட்கள் தேவை. Driver, Cashier, Waiter, Temporary Cook Helper, Chinese Helpers, நல்ல சம்பளம், தங்குமிட வசதி கொடுக் கப்படும். I.D. Copy உடன் நேரில் வர வும். 150, E, High Level Road, Nugegoda.

---

மாத்தளையில் ஹோட்டல் ஒன்றுக்கு சமையல் அரவை T மேக்கர் தேவை. சமையலறை உதவியாட்கள் ஆகியோர் உடனடியாக தேவை. ஆவணங்களு டன் நேரில் வரவும். இல. 78, பிரதான வீதி, மாத்தளை.

---

Urgently Need: Computer Graphic Designer - (Female / Male) with Know-ledge of Corel Draw & Photoshop. Please Contact: Rizan Holdings (Pvt) Ltd., No.66-1/1, Prince of Wales Avenue, Colombo 14. HotLine:0773 526447. E-mail:rizanholdings-@sltnet.lk, Fax:4616466.

---

Female Accountant, Accounts Clerk Book-Keeper, Computer Lecturers, Operators, Receptionist, Secretary, Salesgirl, Driver, Peon பதவிகள் காலியாக உள்ளது. D 55/77, NHS, Maligawatte. 077 3595969.

---

Wedding Cards, Printing papers விற் பனை நிலையத்திற்கு ஆண் Sales Assistants தேவை. Motor Bike Dri ving லைசன்ஸ் அவசியம். உரிய ஆவ ணங்களுடன் நேரில் வரவும். No.33, Maliban Street, Colombo 11. Tel:2451487.

## வாடகை

வெள்ளவத்தையில் A/C, Non A/C அறைகள் 2/3 Bedrooms வீடுகள் சகல தளபாட வசதிகளுடன் நாள்/மாத/ வருட வாடகைக்கு உண்டு. தொடர்பு: 18/3, Station Road. 2556125 2581441.

---

வெள்ளவத்தை Arethusa Lane Luxury Full Furnished Apartment 2 Bed rooms, 2 Bathrooms, A/C, Hot Water, Car Park சகல வசதிகளுடனும் வீடு வருட வாடகைக்கு உண்டு. 0777 849853 255 9119.

---

வெள்ளவத்தை ரோகினி வீதியில் வெளி நாட்டிலிருந்து விசேட வைபவங்களுக்கு வருபவர்களுக்கு 3 அறைகளுடன் A/c, Non A/C சகல விதமான வசதிகள் Full Luxury Full Furnished வீடு நாள், மாத வாடகைக்கு கொடுக்கப்படும். Tel:0777 631299, 011 2556954.

---

601/3, Havelock Road, Pamankade, Colombo 6. Eross படமாளிகைக்கு அண்மையில், சகல வசதிகளுடனும் Annex வாடகைக்கு உண்டு. Family Only, No Brokers, சனி, ஞாயிறு மற் றும் விடுமுறை தினங்களில் மட்டும் பார்வையிடலாம். 071 6301305.

---

ஒரு அறை நில வீடு வெள்ளவத்தை Boswell Place இல் வாடகைக்கு உண்டு. Seperate Kitchen, Fully Equiped, Fully Furnished bed Room, Fully Furnished Dining room, fully Furni shed Sitting room, With Verandah. மாத வாடகை 18,000/= ஒரு வருட முற் பணம். மாதம் வாடகை செலுத்த வேண்டிய தில்லை. தொடர்பு: 071 4275384.

---

வெள்ளவத்தையில் வெளிநாட்டி லிருந்து வருபவர்களுக்கும் விசேட வைபவங்களுக்கும் உகந்த 3 Rooms, A/C, சகல வீட்டுத் தளபாடங்களு டனான வீடு வாடகைக்கு (நாள், மாத) உண்டு. தொடர்பு: 2360224.

---

தெஹிவளையில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும்/திருமண மற்றும் விசேட வைபவங்களுக்குமான 1 ஹோல், 4 அறைகள், 3 குளியலறைகள், A/C மற்றும் சகல வசதிகளுடனான தனி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 36/1, Initium Road, Dehiwala. Tel::2714413.

---

வெள்ளவத்தையில் பிரதான குடியிருப் புப் பகுதியில் 3 அறைகள் 2 அறைகளுடன் இரண்டு தொடர்மாடி Luxury மனை கள் Vehicle Park வசதியுடன் உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 377516, 0777 146696.

---

Hall 3 Rooms மற்றும் சகல வசதிகளு டன் வாடைகைக்கு. தொடர்பு : 385/39, Aluthmawatha Road, Colombo -15. Tel : 078 5600504.

---

வெள்ளவத்தை W.A. Silva Mawatha யில் வெளிநாட்டிலிருந்தும் தூர இடங் களிலிருந்தும் வருபவர்கள் தங்குவ தற்கு சகல வசதிகளுடன் Fully Furni-shed வீடு கிழமை, மாத, அடிப்படை யில் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 2594935 077 9416617.

---

கல்கிசையில் New Tiles 1500 sqft, 1st Floor 3 Bedrooms / 3 Bathrooms , A/C, H/W, Separate unit with Parking வாடகைக்கு உண்டு. இந்துக்கள் விரும்பப்படும். 071 3011990

---

2 படுக்கை அறைகள் Pantry room, Kitchen, TV Lounch, Full Furnished House for Rent, தொடர்புகொள்ளவும், 2366139, 2508666. 56, Pamankade Lane, Colombo 6.

---

கொழும்பு கொட்டஞ்சேனை 3 மாடி Luxury Full Furnished, A/C & Non A/C வீடு மாத, கிழமை முறையில் வாட கைக்கு விடப்படும். வெளிநாட்டிலி ருந்து விடுமுறைக்கு வருபவர்கள் விரும்பத்தக்கது. Vijayamala Jewellers, 213 & 215,Sea Street , Colombo 11 . Tel : 2331616, 0777 382916, 2452949.

---

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசனு க்கு அருகாமையில் விவேகானந்தா றோட்டில் நிலதள வீட்டில் 2 அறை யுடன் மற்றும் வசதிகள் Telephone வசதியுடன் பிரத்தியேக பாதையுடன் சிறிய குடும்பத்திற்கு மிகவும் பாது காப்பு வசதியும் உண்டு. மாத வாடகை நீர், மின்சாரம் உட்பட 23,000/= தொடர்பு : 34/1, விவேகானந்த றோட், வெள்ள வத்தை.

---

காலி வீதிக்கு அருகாமையில் புதிய தொடர்மாடியில் 2 அறைகளுடன் இணைந்த குளியல் அறை, தனிவழிப் பாதையுடன் அனைத்து தளபாட மின் சாதனங்களுடன் நாள், வார, மாத வாட கைக்கு ( A/C or Non A/C Luxury ) 0777 386371.

---

Bambalapitiya வில் மிகவும் அமைதி யான பாதுகாப்பான சூழ்நிலையில் சகல வசதிகளும் கொண்ட 2 மற்றும் 3 அறைகள் கொண்ட தனி வீடுகள் வாடகைக்குண்டு. 20,000/=, 30,000/= Tel: 071 5888054, 060 2150782.

## கல்வி

வெளிநாட்டு மொழிகள் (Dutch), ஜேர்மன் (German), பிரான்ஸ் (French), ஆங்கிலம் (English) தராதரம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் , உள்நாட்டு மொழிகள் சிங்களம்(Sinhala), தமிழ் (Tamil) இடம்: Dutch Lanka Academy, 69-1/4, Galle Road, Dehiwala. Tel:011 2718811.

---

Spoken English - வெள்ளவத்தையில் இலகுமுறை ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி அடிப்படை இலக்கணம் + பேச்சு பயிற்சிகள் வெளிநாடு செல்வோருக்கு குறுகிய கால வகுப்புகள் Cell. 078 6216463. Mrs. Georgo. கட்டணம் 1,500/= மட்டுமே.

---

G.C.E.A/L 2009/2010, London (A/L), G.C.E.(O/L) வகுப்புகளுக்கான இணைந்த கணிதம் என்பன Tamil, English Medium இல் பல்கலைக்கழக கணித விரிவுரையாளரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். அழையுங்கள்: 077 3655694.

---

IELTS Exam preparation Class (பரீட் சைக்கு தயார்படுத்தும் வகுப்புக்கள்) Qualified & Experienced ஆசிரிய-ரி-னால் தனியாகவும் குழுவாகவும் கற்-பிக்கப்படும். Result Guaranteed. Contact:- 077 3063855.

---

Karnatic Music classes (Vocal) வெள்ளவத்தையில் இந்திய இசைக் கல்லூரி 'கலாஷேத்ரா'வில் பட்டம் பெற்ற ஆசிரியையினால் குழுவாகவும் அல்லது தனியாகவோ கர்நாடக சங்கீதம் கற்பிக்கப்படுகின்றது. Tel:071 2208808.

---

English and Maths Classes for Grade 1-6 மாணவர்களுக்கான International and Local Syllabus இல் திறமையான ஆசிரியரினால் கற்பிக்கப்படும். (English Medium) Contact: 077 3063855.

---

London (O/L, A/L) Accounting, CIMA Foundation Subjects & FATP, FA & MAPE Classes Conducted by Experienced Lecture. Results Assured. 077 3557276.

---

B.A., G.A.Q. A/L, Grade 6-11 மாண வர்களுக்கான Geography, Tamil, Hindu Culture மற்றும் தேவைக்கேற்ப English (Grammar, Literature, Spoken) கற்பிக்கப்படும். தொடர்பு: 077 6525371.

---

அழுகுக்கலை பயில்பவர்கள் பயிற்சி பெறுபவர்களுக்கு 3 மாதம் அக்கு பிரஷர், ரிபிலெக்ஸ் ஒலஜி, இயற்கை மருத்துவம், தமிழில் வீட்டிலிருந்து கல்வி பயில அங்கீகரிக்கப்பட்ட College இல் Diploma முடிவில் பயிற்சியும் வழங்கப்படும். Reiki தியான மருத்துவ வகுப்புகள் நடைபெறுகிறது. Overseas Educational Consultant. 077 6259032, 060 2314378.

---

Australian Education Foundation வழங்கும் புலமைப்பரிசில்கள். Com-puting, IT and English Language ஆகிய துறைகளில் இலங்கையில் கல்வி பயில்வதற்கு சந்தர்ப்பம். வெளிநாடுகளிலும் சென்று கல்வி கற்கும் வசதி செய்து தரப்படுகின்றது. தொடர்பு:077 6965076.

---

English, Sinhala பேச பயமா, தயக்கமா, தெரிந்தும் வெட்கமா? 6 மாதத்தில் உங்கள் வீடு வந்து சரளமாக பேச கற்பிக்கப்படும். (British Pronunciation. Contact: 077 4453398.

## சேவை

உங்களுக்கு தேவையான Printing ஓடர்கள் அவசர Certificates, Business Cards, Rubber Stamps, நினைவுமலர் கள் Leaflets பிறப்பு / இறப்பு சான் றிதழ் மற்றும் ஏணைய மொழிபெயர்ப்பு கள் ஆங்கில கடிதங்கள் அனைத்தும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும். Call:078 6533433, 4851199.

---

நோயுள்ள, நோயற்றவர்களுக்கான சகல வசதிகளுடன் கூடிய கௌரவமான, நம்பிக்கையான இடத்தில் 24 மணிநேர தாதிய வைத்திய பராமரிப்பு. பம்பலப் பிட்டியில் அரச டாக்டரினால் நடத்தப்படு கின்றது. தொடர்பு: 071 5640013.

---

தனிமையில் வாழும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Friends Club இல் நீங்களும் இணைந்து ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுங்கள். வயது, ஜாதி, மதம் என்ற வேறுபாடுகள் இல்லை. விபரங்கள் முற்றிலும் இல வசம். தொடர்பு:071 5924799.

---

Type Setting, Graphic Designing, Creative Ad's Album designing என்ப வற்றை உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ற வாறு பெற்றுக்கொள்ள அழையுங் கள். 071 5941433.

---

வயோதிபர்களுக்கு தங்கும் இடவசதி யுண்டு. தாதிமார் கவனிப்போடு. தொழில்ரீதியாக தகைமை பெற்ற சேவையாளர்கள். 072 3649972 034 2222808.

---

Aroma Body Therapy Ballines, Body Therapy Done by Well Trained Model Guy Including Hotwater A/C Room. 071 6379338.

---

Satellite Channels, KTV, Sun, Sports Channels, Vijay TV மற்றும் இது சம்பந்தமான வேலைகள் தரமான முறையில் மலிவாக செய்து தரப்படும். ரிசீவர் Satellite, டிஸ் வகைகளும் உண்டு. 0773910690.

## பழுது பார்த்தல்

சகலவிதமான தொலைக்காட்சிப் பெட்டிகள் (TV) உங்கள் வீடு களுக்கு வந்து துரிதமாகவும் உத்தரவாதத்துடனும் திருத்திக் கொடுக்கப்படும்.தொடர்புகளுக்கு: (St.Jude Electronics) S.டிலான், 104/37, சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13. Tel: 2388247, 072 2199334.

---

எல்லாவகையான குளிர்சாதனப் பெட்டிகள் (Fridge) சகலவிதமான தொலைக்காட்சிப் பெட்டிகள் (TV), A/C திருத்த வேலைகள் வீட் டுக்கு வந்து உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். ஜூட் பர்னாந்து (Master of A/C), 104/37, சங்க மித்த மாவத்தை, கொழும்பு 13. Tel:2388247 072 2199334.

---

Electrical, Wiring, Plum bing, Washing Machine, Fridge, Water Motor, Grinder, Fan Etc... என்பன வெள்ளவத்தை பம்பலப்பிட்டி உட்பட கொழும்பின் அனைத்துப் பாகங்களுக்கும் வந்து செய்து தரப் படும். E-Electrical Service, Sasi-077 9220271, 011 5712356.

---

கொழும்பு, கண்டி பிரதேசங்களில் வீட்டுக்கு, காரியாலயங்களுக்கு நேரில் வந்து குறைந்த விலையில் Computer Repair செய்து கொடுக்கப்படும். Hardware, Software, Formatting, In stallation, ADSL Internet Configuration and Virus Card Installation. தொடர்பு: முரளி 077 3920739 077 4412699.

---

Computer, Monitor, Printer Repairs Service, Mainten-ance & Upgrading, Net 2 Phone, Network, Software Installation ஆகியன தங்கள் இடத்திற்கு வந்து செய்துதரப்படும். தொடர்புகளுக்கு: 071 4448855.

---

Computer Problem ?????? Solution @ Your Doorstep by an Experienced Tech-nician. ADSL/Internet & E-mail Solutions. கிருஷ்ணா PC Care, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு 13. 071 4888995, 077 9888995. (Home/Office Visit)

---

சகல விதமான TV, Radio, CD Player மற்றும் Electronic பொருட்கள் உத்தரவாதத்துடன் திருத்தித் தரப்படும். வீட்டுக்கு வந்து திருத்தப்படும். தியாகு T.Tech Electronic, 2 1/1, Sri Raman-athan Mawatha, Colombo 13. Tel: 072 5445075.

20. நீரின் தன்மைகளில் ஒன்று,
1) பனிக்கட்டி. 2) குளம். 3) ஆறு. 4) கடல்.

21. சாரதி அனுமதிப்பத்திரம் பயன்படுத்தாதவர்,
1) துவிச்சக்கரவண்டி ஓட்டுனர். 2) கார் ஓட்டுனர்.
3) முச்சக்கரவண்டி ஓட்டுனர். 4) பேருந்து ஓட்டுனர்.

22. வாகனச் சாரதியின் ஒழுக்கம் அல்லாதது,
1) வீதி விதிகளைக் கடைப்பிடித்தல்.
2) போதையில் வாகனம் செலுத்துதல்.
3) சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
4) வேகமாக வாகனம் செலுத்தாமை.

23. வீட்டுத்தோட்டத்தில் பயிரிடக்கூடிய பயிர்,
1) தேயிலை. 2) பாகல். 3) நெல். 4) சணல்.

24. சூடடிக்கும் களத்தில் சூடடிக்கும் மாட்டை எவ்வாறு அழைப்பர்?
1) குல்லம். 2) மடுவான். 3) பொலிக்கடா. 4) பொலி.

25. மண்ணின் கூறுகளில் ஒன்று,
1) மணல்மண். 2) அடையல். 3) செம்மண். 4) நன்மண்.

26. சேதனப் பசளைகளில் ஒன்று,
1) மாட்டெரு. 2) யூரியா.
3) அமோனியா. 4) பொட்டாசியம்.

27. கொத்தன் எனப்படுபவர்,
1) தளபாடம் செய்பவர். 2) கட்டடம் கட்டுபவர்.
3) சலவைத் தொழிலாளி. 4) மூட்டை தூக்குபவர்.

28. கிராமியப்பாடல் பாடி செய்யப்படும் வேலை,
1) குளித்தல். 2) அருவிவெட்டுதல்.
3) விறகு வெட்டுதல். 4) சமைத்தல்.

29. உடலொலிபெருக்கியின் பயன்,
1) எமது குரலின் சத்தத்தை அறிதல். 2) உடல் ஒலியினை அறிதல்.
3) இதயத்துடிப்பை அறிதல். 4) பாடலின் ஒலியை அறிதல்.

30. கோள்களில் மிகப்பெரியது,
1) புதன். 2) வியாழன்.
3) புளூட்டோ. 4) நெப்தியூன்.

31. நீர்த்தாங்கி ஒன்றினை நிரப்புவதற்கு காலை 11.45 மணியளவில் நீர் இறைப்பு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2 மணித்தியாலம் 25 நிமிடங்களில் தாங்கி நிரம்பியது எனில், எத்தனை மணிக்கு நீர்த்தாங்கி நிரம்பியிருக்கும்?
( ................................ )

32. 350 கிராம் சீனியின் விலை 17 ரூபா 50 சதம் எனின், 4கிலோகிராம் 250கிராம் சீனியின் விலை யாது? ( ................................ )

33. மோட்டார்சைக்கிள் ஒன்றின் பெற்றோல் தாங்கியில் ஏற்கனவே 2லீற்றர், 500 மில்லிலீற்றர் பெற்றோல் இருந்தது. மேலும் தாங்கியில் 5லீற்றர் 750மில்லிலீற்றர் ஊற்றப்பட்டது எனில் தற்போது பெற்றோல் தாங்கியில் உள்ள பெற்றோலின் அளவு யாது? ( ................................ )

34. 56 மீற்றர் உயரம்கொண்ட கம்பம் ஒன்றின் 3/8 பங்குக்கு சிவப்பு நிறமும், 2/8 பங்குக்கு மஞ்சள் நிறமும் பூசப்பட்டது. மீதிக்கு நிறம் பூசப்படவில்லை எனில், நிறம் பூசப்படாத கம்பத்தின் நீளம் எத்தனை மீற்றர்?
( ................................ )


35. 4, 9, 16, 25, ....... அடுத்துவரும் எண்கள் இரண்டைத் தருக.
( ................................ )

36. 10/16 - 2/4 = .............

37. 0.21 + 10.29 = .............

38. ஒரு கொப்பி 10 ரூபாப்படி 10 டசின் கொப்பிகளை வாங்கிய கடைக்காரர் ஒருவர், ஒரு கொப்பியை ரூ. 10.50 படி விற்றார் எனில், அவருக்குக் கிடைக்கும் மொத்தலாபம் எவ்வளவு? ( ................................ )

தரம்-05 இன் இரண்டு பிரிவுகளிலும் உள்ள மாணவர்கள் விரும்பும் பாடங்கள் பற்றிய தரவுகள் கீழுள்ள வரைபில் குறித்துகாட்டப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக்கொண்டு 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு விடைதருக.




○ - சமயபாடத்தை விரும்புபவர்கள்
× - கணிதபாடத்தை விரும்புபவர்கள்
□ - ஆங்கிலபாடத்தை விரும்புபவர்கள்
△ - தமிழ்ப்பாடத்தை விரும்புபவர்கள்


39. இரண்டு பிரிவுகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடுக. ( ................................ )

40. கூடுதலான மாணவர்கள் விரும்பும் பாடம் எது? ( ................................ )

சில பறவையினங்களின் இருப்பிடங்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு பொருத்தமான பறவைகளின் பெயர்களை அதன் கீழுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.

41. 
..............................................

42. 
..............................................

43. 
..............................................

44. 
..............................................

சுதந்திர இலங்கையின் ஜனாதிபதிகள் சிலரின் நிழற்படங்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன. நிழற்படங்களுக்கு உரியவர்களின் பெயர்களைக் கீழேயுள்ள புள்ளிக் கோடுகளில் எழுதுக.


45. 
..............................................

46. 
..............................................

47. 
..............................................


48. 
..............................................

49. பின்வரும் உருவில் நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு யாது?



(சிறிய சதுரம் ஒன்றின் ஒருபக்க நீளம் 2செ.மீ)
( ................................ )

50. அருகில் தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?
செங்கட்டி ஒன்றின்,
நீளம்-2சென்ரிமீற்றர்
அகலம்-1சென்ரிமீற்றர்



( ................................ )

நீர் புலமைப்பரிசிற் பரீட்சை ஒன்றை எழுதிமுடித்து பெறுபேறை எதிர்பார்க்கும் மாணவன். நாளை புலமைப்பரிசில் பெறுபேறு வெளியாகவுள்ளது என அறிவிக்கப்பட்டது. இச்செய்தியைக் கேட்டவுடன் உமது மனதில் தோன்றும் உணர்வுகளை ஆறு வாக்கியங்களில் எழுதுக. வாக்கியங்கள் ஒவ்வொன்றும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருப்பதோடு திருத்தமான எழுவாய், பயனிலைத் தொடர்புடையதாகவும் இருத்தல்வேண்டும்.

51. ..........................................................................................
52. ..........................................................................................
53. ..........................................................................................
54. ..........................................................................................
55. ..........................................................................................
56. ..........................................................................................

**தரம்-05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்**

## விசேட மாதிரிவினாத்தாள் - 03

**ஆசிரியர்:- து.திலீப்குமார்**

**( விவேகானந்தாக்கல்லூரி, கொழும்பு. )**




# தேகம் பருத்தல், முகத்தில் மயிர் வளர்தலுக்கு சூலகத்திற்கும் ஏதாவது தொடர்புள்ளதா?



கேள்வி: . எனக்கு வயது 30. ஆண். தூக்கத்திலிருக்கும்போது திடீரென்று தாங்கிக் கொள்ளமுடியாத தலைவலி அடிக்கடி வருகின்றது. அவ் வேளைகளில் தலைவலி உள்ள பக்கத்தின்- கண் இமைகள் மூடி விடும். மூக்கடைப்பு சிலவேளை களில் ஏற்படும். தடிமல், பால் மூக்கு சிந்தும். கண்களிலிருந்து கண்ணீர் வரும். இந்த வலிவந் தால் தொடர்ந்து ஒருவாரம் இருக் கும். பின்னர் பல மாத காலம் எது வித பிரச்சினையும் இராது. இது என்ன வியாதி ? பரிகாரம் கூறவும்.

பதில்: நீங்கள் தந்திருக்கும் நோய்களை வைத்து பார்க்குமிடத்து உங்களுக்கு ஏற்பட்டிருப்பது CLUSTER HEADACHE எனப்படும் ஒருவகை தலைவலி. அநேகமாக இளவயது ஆண்களிடம்தான் இந்தப் பிரச்சினை அதிகமாக காணப்படுகிறது. ஆனாலும், உங்கள் தலைவலிக்கு வேறு காரணம் உள்ளதா என்பது அறியப் படவேண்டும். நரம்பியல் மருத்துவர் (NEURULOGIST) ஒருவரின் ஆலோசனை இங்கு அவசியம். அவர் (EEG, CT SCAN, MRI SCAN) போன்ற பரிசோதனைகள் மூலம் உங்கள் தலைவலியின் காரணத்தை கண்டறிவார். உங்களுக்கிருப்பது (CLUSTER HEADACHE) வகை தலைவலி என்றால் வலிநீக்கும் மாத்திரைகளும், இரத்த நாடிகளின் பிடிப்புகளை (SPASM) நீக்கும் மாத்திரைகளும் உங்களுக்கு சுகம் தரும்.

கேள்வி: வயது 50, எனக்கு இரத்த அழுத்தமோ கொலஸ்ட்ரோல் அதிக அளவோ, நீரிழிவு வியாதியோ எதுவுமில்லை. நான் தினமும் ஒரு முட்டை சாப்பிடுவதால் தீங்கு ஏற்படுமா? நீரிழிவுக்காரர்கள் முட்டை சாப்பிடலாமா? சாதாரண மனிதர் ஒருவாரத்துக்கு எத்தனை முட்டைகள் சாப்பிடலாம்? விரிவான பதில் தருக.

பதில்: பொதுவாகவே முட்டை ஒரு முழுமையான உணவாக கருதப் படுகின்றது. ஆனால், முட்டையில் உள்ள கொலஸ்ட்ரோல் காரணமாக முட்டை அதிகமாக உண்பதை தவிர்க்கவேண்டியுள்ளது. முதலில் முட்டை பற்றி நடந்த சமீபகால ஆய்வுமுடிவுகளை தருகின்றேன். இந்த ஆய்வுகள் யாவும் மேலைநாட்டில் நடைபெற்றபடியால் உணவில் புரத அளவு குறைவாக உள்ள நமது நாட்டில் இவை எந்தளவில் சரியாகும் என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாகும்.

நடுத்தர வயதினர் தினமும் ஒருமுட்டையை உணவில் சேர்த்துவந்தபோது - அவர்களை சாதாரண உணவு உட்கொள்பவர்களுடன் ஒப்பிட்டபோது - மரணவீதம் அதிகரித்து, அதுவும் குறைந்தவயதில் ஏற்படுவது கண்டறியப்பட்டது. அதுபோல் நீரிழிவுக்காரர்களும் அதிகளவில் முட்டையை உணவாகக் கொண்டபோது மரணவீதம் அதிகரித்தது தெரியவந்துள்ளது.

முட்டை முழுமையான புரத உணவாக இருந்தாலும் அளவுக்கு மீறினால் அதுவும் நஞ்சாகிவிடுவதுபோல் அதனது தீமையான விஷயங்கள் வெளிப்படுகின்றன.

நமது நாட்டைப் பொறுத்த வரையில் கொலஸ்ட்ரோல் கோளாறு இல்லாதவர்கள் வாரம் இருதடவை முட்டையை உபயோகிக்கலாம் என்று உணவுயியல் மருத்துவர்கள் (NUTRITIONIST) பரிந்துரைக்கின்றார்கள். அதுபோல் குழந்தைகள் விஷயத்திலும் முட்டை ஒரு முக்கிய உணவாக கருதப்படுகின்றது. குழந்தைகளின் பால் மறக்கும் பருவத்தில் (WEANING PERIOD) முட்டையை உணவில் அறிமுகப்படுத்த குழந்தைநோய் நிபுணர்கள் சிபார்சு செய்கிறார்கள். முட்டையை குழந்தைகளின் உணவில் சேர்க்கும்போது முதலில் வெள்ளைக் கருவைத்தான் உபயோகிக்க வேண்டும். பின்னர் படிப்படியாக மஞ்சள் கருவை அறிமுகப்படுத்தலாம். மஞ்சள் கருவில் இரும்புச்சத்து இருப்பதால் குழந்தையின் உணவில் இது முக்கியமாகக் கருதப்படுகின்றது.

உங்களைப் பொறுத்த வரையில் வாரம் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை உணவில் சேர்க்கலாம்.

கேள்வி: வயது 60. திருமணமாகி மனைவியோடு வாழ்கின்றேன். எனக்கு கடந்த சில மாதங்களாக ஆண்மைக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? பரிகாரம் என்ன?

பதில்: ஆண்மைக்குறைவுக்கான காரணம் உடல் சார்ந்ததாகவோ, மனம் சார்ந்ததாகவோ இருக்கலாம். வயதாகும்போது விறைப்புத்தன்மை ஏற்பட நீண்டநேரம் பிடிக்கலாம். அடுத்தடுத்து உறவுகொள்ள இயலாமை ஏற்படலாம். இது சாதாரணமாக மனிதருக்கு வயதாகும் போது ஏற்படும் இயற்கையான மாற்றமே என்றாலும் பக்கவாதம், இருதய நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் என்பவற்றால் கூட ஆண்மைக்குறைவு ஏற்படலாம்.

அதிகமாக மதுஅருந்துபவர்களுக்கு ஆண்களுக்குரிய (TESTOSTERONE) சுரப்பு குறைவதால் ஆண்மைக்குறைவு ஏற்படுகின்றது.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை**
**'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்**
**டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்**
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
**இலவச மருத்துவ ஆலோசனை**
**'சுடர் ஒளி'**
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.

அதிகளவில் புகைப்பது, புகையிலை உபயோகிப்பது என்ற செயல்கள், போதைப்பொருட்கள், கஞ்சா, அபின் பாவனை என்பவை கூட நரம்புத்தளர்ச்சியை ஏற்படுத்தி ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும்.

அதிகமான உழைப்பு, உடற்சோர்வு என்பவை உளவியல் ரீதியாக உணர்ச்சிகளை - உறவு சம்பந்தமான எண்ணங்களை - ஏற்படுத்தாததால் ஆண்மைக் குறைவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

உளவியல் ரீதியில் தன்னம்பிக்கை இன்மை, அவமானம், இழப்பு, தோல்வி, தாழ்வு மனப்பான்மை என்பவற்றால் கூட குடும்ப உறவில் நாட்டம் குறைந்து ஆண்மைக்குறைவு ஏற்படும். மேலும் குற்ற உணர்வு, மனச்சோர்வு, மன இறுக்கம் என்பனவும் உடலுறவு எண்ணத்தைக் குறைக்கும்.

இதுதவிர அதி உயர் இரத்த அழுத்தத்திற்கு உபயோகப்படுத்தும் மன இறுக்கத்திற்கு உபயோகிக்கும் மருந்துகளைப் பாவிப்போருக்கு இந்த மருந்துகளின் பக்கவிளைவாக ஆண்மைக்குறைவு ஏற்படும்.

எனவே, உங்களுக்கு ஏற்பட்டிருப்பது எந்த வகையைச் சேர்ந்தது என்பதை அறிந்து அதற்கேற்ற சிகிச்சை முறைகளை பின்பற்றவேண்டும். உளவியல் காரணமாக இருப்பின் மருந்துகளோடு உளவள ஆலோசனை எனப்படும் (COUNSELLING) தேவைப்படும்.

கேள்வி: பெண். வயது 25. எனது மாதவிலக்கு கிரமமாக வருவதில்லை. சிலவேளைகளில் பல மாதங்கள் தள்ளிப்போவதுமுண்டு. முகத்தில் பருக்கள் ஏற்படுகின்றன. ஆண்கள் போல் முகத்தில் மயிர்களும் முளைக்கின்றன. எனது மாதவிலக்கு ஒழுங்காக வருவதற்கும் மற்றைய பிரச்சினைகளுக்கும் சிகிச்சை கூறவும்.

பதில்: நீங்கள் திருமணமானவரா, குழந்தைகள் உள்ளனவா என்பதுபற்றி தெரிவித்திருந்தீர்களானால் ஓரளவு சரியாக உங்கள் நோய்பற்றி நிதானித்திருக்கலாம். நீங்கள் தந்துள்ள தரவுகளை வைத்துப் பார்க்கும்போது உங்களுக்கு (POLYCYSTIC OVARY SYNDROME) என்ற கோளாறு இருக்கலாம் என்று நம்புவதற்கு இடமுண்டு. இந்தக்கோளாறு உள்ள பெண்கள் இலகுவில் கருத்தரிப்பதில்லை.

சூலகம் மாதாமாதம் முட்டைகளை வெளிவிடுகின்றது. இந்தச் செயலில் பிரச்சினை ஏற்படும்போது முட்டைகள் வெளியேவராது முழுமையடையாமல் சூலகத்தின் வெளிப்புறத்தில் கட்டிகளாக- நீர்க்கட்டிகளாக (CYST) உருவாகும். இதனையே (POLYCYSTIC OVARY) என்று மருத்துவ உலகில் கூறப்படுகின்றது. இதனை வயிற்றை (SCAN) செய்வதன் மூலம் கண்டறியமுடியும். முட்டைகள் சரிவர உற்பத்தியாகாததால் இந்தக் கோளாறு உள்ள பெண்கள் கருத்தரிப்பது கஷ்டம். மேலும் இதனால் ஏற்படும் ஹோர்மோன் மாற்றங்களால் இத்தகைய பெண்களின் தேகம் பருத்துக்காணப்படும். முகத்தில் மயிர் வளரும்.

இந்தக் கோளாறு ஏன் ஏற்படுகின்றது என்பதற்கு நிரூபிக்கப்பட்ட காரணங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. பரம்பரை அலகுகளினால் சில குடும்பங்களில் இந்தக் கோளாறு காணப்படுவதாக தெரிகின்றது. அதேவேளையில், மாசடையும் சூழல், புகைத்தல் பழக்கம், நீரிழிவு, பரம்பரை, பருத்த தேக அமைப்பு என்பவை கூட இந்தக் கோளாறுக்கு காரணங்களாக கருதப்படுகின்றன. தற்பொழுது லேசர்முறையில் பெண்நோயியல் நிபுணர்கள் இந்தக் கட்டிகளை கரைப்பதாக அறியப்படுகின்றது. எதற்கும் தாங்கள் (GYNAECOLOGIST) எனப்படும் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது உசிதம் என்று நான் கருதுகின்றேன்.







## இரண்டாவது உலக மகாயுத்தம்...

உலகிலேயே மிகப்பெரிய அளவில் பணத்தைத் தண்ணீராக வாரியிறைத்து நடத்தப்பட்ட யுத்தம் 1939 முதல் 1945 வரை நடைபெற்ற இரண்டாம் உலக மகாயுத்தமாகும். போர் நடந்த ஆறுஆண்டுகளுக்குள் இந்தப் போருக்கென உலகநாடுகள் செலவழித்த மொத்தத் தொகை சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய்!

## பீங்கான்



இன்று நாம் பானங்களை அருந்துவதற்கு பீங்கான் முதல் பல்வேறு உலோகங்களிலான கோப்பைகளைப் பயன்படுத்துகிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் முதன்முதலில் பயன்படுத்திய கோப்பை எது தெரியுமா? மனித மண்டை ஓடுதான்!

## சங்கு....



சங்குமட்டுமல்ல...உங்கள் வீட்டிலுள்ள வெற்று டம்ளரைக் காதில் கவிழ்த்தாலும் ஒருவித ஒலி கேட்டுக்கொண்டேயிருக்கும்! சங்கோ, டம்ளரோ,., அதைச்சுற்றியுள்ள காற்றில் நிலவும் லேசான ஒலியலைகள் அதன் உள்ளேயிருக்கும் காற்றைச் சலனப்படுத்தும்போது ஒருவித ஒலிப்பெருக்கம் (Resonance) ஏற்பட்டு சுருதிகூட்டல் நிகழ்கிறது. அதுதான் அந்த அலாதி ஹூங்காரம்.




## எகிப்தின் ஸ்பிங்ஸ், கிரேக்க செண்டார்

சிங்க உடலும், மனித தலையும் கொண்டது எகிப்தின் ஸ்பிங்ஸ். குதிரை உடலும், கால்களும் மனிதத் தலையும் கைகளும் கொண்டது கிரேக்கத்தின் ஸெண்ட்டார். இவை இரண்டுக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருக்கிறதா? என்று பார்த்தால் தொடர்பு இல்லை. இவைஎல்லாமே எம்முடைய மற்றும் சீனர்களுடைய புராணங்களில் வரும் 'யாளி', ட்ரேகன்' மாதிரி எகிப்திய - கிரேக்கப் புராணங்களில் வரும் 'மிருகங்கள்'.

இக்ஸியான், க்ரோனஸ் என்கிற (புராண) மனிதர்கள் மூலம் உருவானதுதான் ஸெண்ட்டார்ஸ். மனிதர்களுக்கும் மேகக் கடவுளுக்கும் பிறந்த மனித மிருகங்கள்! இக்ஸியான் வழிவந்த ஸெண்ட்டார்களுக்கு இரண்டு விஷயங்கள்தான் தெரியும். குடிப்பது, பெண்களுடன் தொடர்பு. க்ரோனஸ் வழிவந்த ஸெண்ட்டார்கள் அறிவில் சிறந்து விளங்கி பல கிரேக்க மாவீரர்களுக்கு ஆசிரியர்களாக இருந்தார்கள். இக்ஸியான் வழி ஸெண்ட்டார்கள் குடிபோதையோடு கூட்டமாக ஆரவாரத்துடன் ஓர் ஊருக்குள் நுழைந்தால், உடனே அத்தனை இளம்பெண்களையும் ஒளித்துவைத்து விடுவார்கள். குதிரையைப் போன்ற உடலும், உறுப்பும் உள்ள ஓர் ஆண்மகன் இருந்தால் எப்படி இருக்கும் என்கிற ஆழ்மனது ஏக்கத்தின் வெளிப்பாடு - கற்பனைதான் ஸெண்ட்டார்.

## கையெழுத்து




கையெழுத்தை வைத்து ஒருவரது குணாதிசயத்தை அறியும் கலைக்கு Graphology என்று பெயர். மூளை மற்றும் நரம்பியல் தொடர்பான நோய்க்குறிகளைக் கணிப்பதற்கு, மருத்துவர்கள் நோயாளிகளை எழுதச்சொல்லி ஆய்வு செய்வதுண்டு.

வலதுபக்கம் சாய்வான கையெழுத்துக்காரர் அதிகமாக உணர்ச்சிகளை வெளிக்காட்டுபவர் என்பதன் அடையாளம். இடதுபக்கம் சாய்வான கையெழுத்துக்காரர் சற்றும் உணர்ச்சிவசப்படாத ரைப். செங்குத்தாக எழுதுபவர் என்றால் உணர்ச்சிகளை அளவோடு சரியானமுறையில் வெளிப்படுத்துபவர்.

எழுத்துகளின் தலைப்பகுதியில் வைக்கவேண்டிய புள்ளி, தள்ளித் தள்ளி வைக்கப்பட்டால் கவனக்குறைவான மனிதர். குறுக்கிகுறுக்கி எழுதினால் சிக்கனக்காரர். சிலரது கையெழுத்தைப் பார்த்தால் சிறகடித்துப் பறப்பது போலிருக்கும்...Artistic Attitude எனப்படும் கற்பனை வளத்தின் அறிகுறி அது.

வார்த்தைகளின் இடையிலும், வரிகளின் இடையிலும் அதிகமாக இடைவெளி விட்டிருந்தால் செலவாளி என்று பொருள்.

எழுதுகிறதாளில் பேனாவின் அழுத்தம் அதிகம் இருந்தால் மிகவும் உணர்ச்சிகரமான மனிதர்! ஜாதகம், காடி ஜோதிடம் வகையறாவில் கிராபாலஜியும் நம்பகத்தன்மை இல்லாதது என்று சொல்வோரும் இருக்கிறார்கள். ஒருவரது ஆளுமையைக் (Character traits) கட்டுப்படுத்தும் மூளைதான் அவரது கையெழுத்துக்கும் காரணமாகிறது. எனவே, கையெழுத்தைக் கொண்டு ஆளுமையைக் கணிக்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பார்த்தால் ஒருவரது நடை, உடை பாவனைகளைக் கூட மூளைதான் தீர்மானிக்கிறது. அவற்றைக் கொண்டும் ஆளுமையைக் கணிக்கமுடியுமோ என்பது அவர்களின் எதிர்வாதம்.

பல தலைவர்களின், சாதனையாளர்களின் கையெழுத்து அலங்கோலமாக இருக்கும். "என் கையெழுத்து டெல்லியிலிருந்து கொல்கத்தா போவது மாதிரி இருக்கும்" என்று அமரர் சுஜாதா தன் கையெழுத்தைப் பற்றி தனக்கேயுரிய நகைச்சுவையோடு குறிப்பிடுவார்.

## தகவல் டொட் கொம்



★ மரங்களில் இருக்கும் வளையங்களை வைத்து அவற்றின் வயதைக் கணிப்பது போல மீன்களுக்கு அவற்றின் செதில்களை வைத்து கணிப்பார்கள்.

★ பனி ஒரு திடப்பொருள்தான் ஆனால், பனி பொழியும்போது சத்தம் கேட்பதில்லை. இதற்குக் காரணம் இறகுபோன்ற பனியின் உருவஅமைப்புத்தான். சமநிலையில் இருக்கும் கடினமான தளங்களில் சத்தம் அதிகமாகக் கேட்கும். ஆனால், மிருதுவான சமநிலையற்ற தளங்களில் சத்தம் உறிஞ்சப்படும் அல்லது குறையும். அதனால்தான் கம்பளம் விரித்த தரையில் விழும் ஒருபொருள் வெற்றுத்தரையில் விழுவதைவிட குறைவாகவே சத்தம் எழுப்புகிறது. அதேபோல்தான் பனியும் சத்தத்தை உறிஞ்சிக்கொள்ளும் தன்மையுடன் இருக்கிறது. மிருதுவான, சமநிலையற்ற உருவம் உள்ள பனி காற்றில் இருக்கும்போதும் சரி, தரையில் இருக்கும்போதும் சரி, சுற்றி உள்ள மெல்லிய சத்தங்களை பெருமளவு உறுஞ்சிக்கொள்ளும். அதனால்தான் பனி கீழே விழும்போது சத்தம் கேட்பதில்லை.




சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 04


மாணவர் பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
பாடசாலை/கல்வி நிலையம் : ..............................................................
மாவட்டம் : ..............................................................
தொலைபேசி இலக்கம் : ..............................................................

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி I

இல 1-25 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் மும்மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

கட்டமிட்டுத் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து இல 1-4 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.




01. இயற்கையானவற்றை மட்டும் கொண்ட உருக்கூட்டம்,
1) IGHLF 2) CDKJA 3) JFGIC

02. நீரோடு தொடர்புடைய உருக்கூட்டம்,
1) KFJI 2) JLIK 3) EBFG

03. எரிபொருள் சக்தியால் இயங்கக் கூடியவை,
1) ABE 2) HBL 3) JFA

04. ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடைய பொருட்கூட்டம் அல்லாதது,
1) EBH 2) IKF 3) FKD

05. வைத்தியசாலை - சிகிச்சை எனின், பாடசாலை - ...............................
1) தெளிவு. 2) அறிவு. 3) கற்கை.

06. தேனீ - மகரந்தச்சேர்க்கை எனின், மாடு - ...............................
1) இறைச்சி. 2) புண்ணாக்கு. 3) எரு.

07. கல்வி - அந்தஸ்து எனின், தொழில் - ...............................
1) பொருளாதாரம். 2) புகழ். 3) கௌரவம்.

08. எமது பாடசாலை பொலிஸ் நிலையத்திற்கும் தபால் நிலையத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. எமது வீடு பாடசாலைக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் உள்ளது. இதன்படி மிகச்சரியான கூற்றாக அமைவது,
1) தபால் நிலையத்திற்கு அண்மையில் பொலிஸ் நிலையம் உள்ளது.
2) எமது வீட்டுக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் பாடசாலை உள்ளது.
3) தபால் நிலையத்தைவிட எமது வீடு பாடசாலைக்கு மிக அண்மையில் உள்ளது.

09. வகுப்பில் எப்போதுமே முதல் மாணவனாக வரும் துவான் படிப்பிலும் திறமைசாலி. ஆயினும், கடந்த ஆண்டில் தரம்-05 புலமைப்பரிசிற் பரீட்சையில் அவனால் சித்திப்புள்ளியை அடைய முடியவில்லை. இதற்குக் காரணம்,
1) துவான் பரீட்சை எழுதாமல் இருந்திருக்கலாம்.
2) பரீட்சை வினாத்தாள் தெளிவில்லாமல் இருந்திருக்கலாம்.
3) தெரிந்த வினாக்களுக்கு கவனயீனமாக விடைகளை எழுதியிருக்கலாம்.

10. நாங்கள் புத்தகங்களை வாசிப்பது போலவே தினசரி பத்திரிகைகளையும் வாசிக்கும் பழக்கமுடையோராக இருக்கவேண்டும். ஏனெனில்,
1) வாசிப்புப் பழக்கம் மிக நல்ல பழக்கமாதலால்.
2) வாசிப்பதனால் எமது அறிவு வளரும் என்பதால்.
3) நாட்டு நடப்புக்கள் பற்றியும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதால்.

11. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பறங்கிமலைப் பாடசாலை மாணவர்களால் உணவுகளும், உடைகளும் வழங்கப்பட்டன. அவர்கள் அவ்வாறு செய்தமைக்குக் காரணம்,
1) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அகதிகள் அல்ல என்பதை உணர்த்துதல்.
2) உணவும், உடையும் வழங்குவதால் நல்ல பெயரை வாங்குதல்.
3) இக்கட்டில் இருப்போருக்கு உதவிசெய்யும் மனப்பக்குவத்தை வளர்த்தல்.

12. பறவைகள் பெரும்பாலும் தமக்குத் தேவையான வகையில் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. பறவைகளுக்குக் கூடு அவசியமாவது,
1) வாழ்நாள் முழுவதும் குஞ்சுகளுடன் வாழ்வதற்காக ஆகும்.
2) முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிப்பதற்காக ஆகும்.
3) குஞ்சுகளை வளர்த்துப் பறக்க விடுவதற்காகவாகும்.

13. என் வயது 10 வருடங்கள் ஆகும். எனது அப்பாவின் வயது என் வயதைப் போன்று 4 மடங்கு அதிகமாகும். எனது அம்மா அப்பாவைவிட 8 வருடங்கள் இளையவர். நான் பிறக்கும்போது என் அம்மாவுக்கு எத்தனை வயதாகும்?
1) 42 வருடங்கள். 2) 32 வருடங்கள். 3) 22 வருடங்கள்.

14. அட்டைத்தாள்கள் சிலவற்றில் ஒவ்வொரு சொற்கள் எழுதப்பட்டு அதற்கு A,B,C,D,P,Q,R,S என ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொரு அட்டைக்கும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தும்போது கருத்துள்ள வாக்கியம் ஒன்று புலப்படும் விதத்தில் அமையும் விடையைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| நாட்டின் A | பரவும் B | பல C | உள்ளது D |


| | | | |
|---|---|---|---|
| தற்போது P | பாகங்களிலும் Q | டெங்கு R | அபாயம் S |

1) PCAQRSBD 2) PACQRBSD 3) PACQRDSB

கட்டமிட்டுத் தரப்பட்டுள்ள உருக்களின் நிறைகளை அவதானித்து 15ஆம், 16ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.


15. 


வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய நிறை யாது?
1) 110 g
2) 90 g
3) 120 g

16. 


இவ் உருவில் ◎ குறியீடு குறிக்கும் நிறை யாது?
1) 10 g
2) 15 g
3) 20 g

17. ஒரே பருமனுடைய சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், கறுப்பு ஆகிய நிறங்களில் 5 சதுரமுகித் தாயக்கட்டைகள் மட்டமான மேசையொன்றின் மீது அடுக்கிவைக்கப்பட்டிருந்த விதத்தை அருகிலுள்ள உரு காட்டுகின்றது. இத் தாயக்கட்டைகளைப் பார்க்கும்போது மறையாமல் எமக்குத் தென்படும் முகங்களின் எண்ணிக்கை யாது?




1) 5 2) 11 3) 21

18. எமது வகுப்பிலுள்ள ஒவ்வொருவரும் தமது சக மாணவர்கள் ஒவ்வொருவருக்குமாக ஒரு வாழ்த்து அட்டை வீதம் பரிமாறிக்கொண்டனர். அவ்வாறு பரிமாறிக் கொள்ளப்பட்ட வாழ்த்து அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 650 எனின், எமது வகுப்பிலுள்ள மாணவர்கள் எத்தனைபேர்?
1) 25 பேர். 2) 26 பேர். 3) 20 பேர்.

19. மாமரம் ஒன்றிலிருந்து பறிக்கப்பட்ட காய்கள் யாவும் 3 குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. முதலாவது குவியலைவிட இரண்டாவது குவியலில் உள்ள காய்கள் 50 அதிகமாகவும், மூன்றாவது குவியலில் இருந்து 75 காய்களை அப்புறப்படுத்தினால் இரண்டாவது குவியலிலுள்ள காய்களுக்குச் சமமாகவும் இருக்கின்றன. முதலாவது குவியலில் 250 காய்கள் இருப்பின் மூன்று குவியல்களிலும் உள்ள காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 725 2) 925 3) 775




# நள்ளிரவில் ஒரு நாடகம் 20

## முன்கதைச் சுருக்கம்

சிக்காகோ நகரம். இரவுநடுச் சாமத்தை கடந்துவிட்டது. அமுரா, ஹொஸ்டலில் தனது அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அப்போது கதவு தட்டப் படும் ஓசை! இந்த நேரத்தில் யாராக இருக்கும்! காதலன் ஜோனாக இருக்குமோ என்ற சந்தோஷத்துடன் கதவைத் திறக்கிறாள். ஆனால், ஓர் மர்ம உருவம் அவளை உட்தள்ளி கதவைத் தாழிடுகிறது. அமுராவைத் தேடி ஜீனா வருகிறாள். மர்ம உருவம் ஜீனாவையும் விட்டு விடவில்லை. உள்ளே இழுத்துக் கொண்டது. டாக்டர் வில்லியம்ஸ் மூலமாக ரோலண்டுடன் மேரி அறிமுகமாகிறாள். அவனுடன் ஊர்சுற்றி விட்டு, ஹொஸ் டலுக்கு வருகிறாள். அங்கு மர்ம உருவத்தைக் கண்டு பயந்து வீதியில் ஓடும்போது ரோந்து பொலிஸ்காரனைச் சந்திக்கிறாள். அவனுடன் சல்லாபிக்கிறாள். அதில் உயிரையே விட்டு விடுகிறாள். இவை அறியாத ரோசி, தோழிகள் செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடுவதாக நினைத்து அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க முனையும்போது மர்ம மனிதனிடம் மாட்டிக் கொள்கிறாள். மர்ம மனிதனின் பிடிக்குள் அகப்பட்ட அவள், அவனைத் தாக்கி விட்டு ஓடுகிறாள். கொல்லும் நோக்குடன் அவளை மர்மமனிதன் தேடிக் கொண்டிருக் கிறான். இதற் கிடையில் மீண்டும் மேரியைத் தேடிவந்த ரோலண்ட் மர்ம மனிதனால் கொலை செய்யப்படுகிறான்.

சப்-இன்ஸ் பெக் டர் ஹரிசன் ரோந்து வருகிறான். துப்பாக்கி வெடிச்சத்தத்தை கேட்டு ஏதோ நிகழ்வ தாக உணர்கிறான். ரோந்துப் பொலிஸ்காரனின் சடலத்தின் மீது விழுந்த ஹரிசன் ஏதோவொன்று தன்னை நெருங்குகின்ற அசைவினை உணர்கிறான். இனி...

மருத்துவ தாதிகளின் விடுதியில் நள்ளிரவில்-

திகில் நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்கும் அந்த அமாவாசை நள்ளிரவிற்கு இரு மாதங்களுக்கு முன்னர் நல்ல நிலவுகாலம் தோன்றியிருந்த ஒரு நாள். சிக்காக்கோ சிறைச்சாலையின் பிரதம அதிகாரி கிளிண்டன் தன் வீட்டின் முன்னால் உலவிக் கொண்டிருந்தான். ஏதோ சிக்கலில் மாட்டிக்கொண்டவன் போல அவன் தடுமாற்றமுடன் காணப்பட்டான்.

தடித்த குள்ளமான உருளைபோன்ற ஆகுருதியான அம்மனிதனின் நடையில் உதைவாங்கிய வேங்கையின் சினம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது.

மாளிகை போன்ற பெரிய வீடு. பல அறைகள் கொண்டது. நடு ஹோல் விசாலமான மண்டபமாக அமைந்திருக்கிறது.

அங்கே-

இசை முழங்குகின்றது. ஆண்களும் பெண்களும் நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய இரைச்சலும் கலவரமும் போன்று செவிப்பறையை அதிரவைக்கும் சத்தம் நாரசமாக பொழிந்து கொண்டிருக்கிறது.

அந்த நடுஹோலில் நடனமாடுபவர்களுடன் ஒருவனாக தூள் பரத்திக் கொண்டிருந்த கிளிண்டன் ஏதோ நினைத்தவனாக வெளியில் வந்து ஏதோவொன்றை எடுப்பதற்காக தன் வீட்டின் பிற்பகுதிக்குச் சென்றான்.

அதுவொரு பழைய களஞ்சிய அறை. அநேகமாக அது இருளாகக் கிடக்கும். அதை துப்புரவுபடுத்துவதற்காக சிறைக்கைதி ஒருவனை நிறுத்தியிருந்தான்.

அங்கே விளக்கு எரிகின்றது.

மங்கலான வெளிச்சம். அந்த வெளிச்சம் சுவரில் இரு பெரும் நிழல்களை படர்த்திவிட்டிருந்தது.

அங்கே வந்ததும் அந்த நிழல்களையும் அவற்றின் அசைவுகளையுமே அவன் கண்டான். இரு சர்ப்பங்கள் ஒன்றையொன்று சுருண்டு அணைத்து நெளிந்து வளைந்து உருண்டு புரண்டு உணர்ச்சிப் பெருக்குடன் தாம்பத்திய உறவில் ஈடுபட்டிருப்பது போன்று ஓர் ஆணும் பெண்ணும் உணர்ச்சிப் பிரவாகத்தின் எல்லைக்கே போய்க் கொண்டிருந்தார்கள். பெண்ணின் முனகலும் உடலின் நெளிசலும் காமத்தின் விளிம்பிற்கு எவரையும் கொண்டு சென்று விடும்.

நிழலைத்தான் கிளிண்டன் கண்டான். முனகலும் நெளிசலின் இரைச்சலும் யதார்த்தமாகவே செவிகளில் ரீங்காரிக்கின்றன. நிழல்களின் பிணைவு தெளிவாகத் தெரியவில்லை. ஏதோ நிழல்படத்தின் நெகட்டிவ்வாக இருந்தது.

அவன் வெலவெலத்துப்போனான்.

'என்னது என் வீட்டிலே, இவ்வளவு பெரியதொரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பெரிய பெரிய விருந்தினர்களெல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இப்படியொரு கீழ்த்தரமான சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.'

கிளிண்டனின் மனம் பதற்றமுடன் நினைக்கிறது. 'இந்த வேலைக்கார நாய்கள் யாராவதுதான் இப்படி நடந்து




கொண்டிருக்கிறார்களா என்ன, எவளாவது ஒரு தெரு பரத்தையை இழுத்து கொண்டு வந்து இந்த இடத்துக்கு எவரும் வரமாட்டார்கள் என்று செக்ஸ் ஆட்டம் போடுகிறானாக்கும் நாய்! என்று கரிச்சுக் கொட்டுகிறான்.

அவனைப் பிடித்து சமத்தியாக சாத்திவிட்டு அவன் கொண்டுவந்துள்ள பரத்தைக்கும் நல்ல அடிகொடுத்து தெருவில் கொண்டுபோய் தள்ளிவிட மனம் துடித்தபோதும் அதனை உடனடியாகவே செயல்படுத்த அவனால் முடியவில்லை. கௌரவம் தடுத்தது.

வீட்டிற்குள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஆபாச வெட்கக்கேட்டை எவரும் காணவில்லை. கிளிண்டன் மட்டும் தான் கண்டிருக்கிறான். இவன் மனம் துடித்தாப்போன்று ஏதாவது செய்யப்போக நிலைமை கட்டுமீறிப்போய் வீட்டில் விருந்தில் கலந்து கொண்டிருக்கும் பிரமுகர்களுக்கு இது தெரியவந்து விட்டால் அதைவிட கேவலம் என்ன இருக்கிறது என்று மனம் அடித்துக்கொண்டது.

என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாத இக்கட்டான நிலையில்தான் முன் வராண்டவுக்கு வந்து பிருஷ்ட பாகத்தில் உதைபட்ட வேங்கையைப்போல சினம் கொண்டு நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

கிளிண்டன் மிகவும் வித்தியாசமான ஓர் ஆசாமி. அவனுக்கு பெண்மோகம் கிடையாது. ஆனால், மிகவும் இளமையான ஓர் அழகிய மனைவி



இருந்தாள். அவளை தங்கப்பதுமை போல பராமரித்து வந்தான். அதையெல்லாம் பெரும் பாக்கியமாக அவன் நினைக்கவில்லை. ஒரு சோவிற்காக அவ்வளவுதான். பணமோகம் பிடித்த அவன் ஒரு ரொக்பெல்லராக மட்டுமே மாறவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தான். தனது தொழிலை அதற்காகவே பயன்படுத்தினான். ஆனாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன்னை மிகவும் தெய்வபக்தியுள்ளவனாகவும், கௌரவமான மனிதனாகவும் வெளியுலகில் காட்டிக்கொண்டான்.

சமூகத்திலுள்ள பெரியவர்களெல்லாம் அதனை முழுமையாக நம்பி அவனை பெரிதும் மதித்து உதவிகள் செய்து வந்தார்கள். நிலைமை இப்படியாக இருக்கும்போது அவனே முகத்தில் கரியை பூசிக்கொள்வது போல் நடந்துகொள்ள முடியுமா?

அதுசரி, வீட்டைச் சுற்றி பாதுகாப்பு இருக்கிறது. ஏனெனில், சிறைக்கைதிகள் ஓரிருவர் உள்ளே வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள். வீட்டிற்குள் விருந்து நடந்து கொண்டிருக்கும்போது சிறைக்கைதிகள் தப்பியோடாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு. அதையும் மீறி அவன் நினைப்பதுபோல வேலைக்காரன் வெளியிலிருந்து ஒரு பரத்தையை கூட்டிக் கொண்டு வந்து வீட்டின் களஞ்சிய அறையில் சல்லாப லீலையில் ருத்ரத்தாண்டவமாடிக் கொண்டிருக்கிறான் என்றால் அவன் மகாகில்லாடிதான்.

படுபாவிப் பயல்!

பிழைப்பிலே மண்ணைவாறிப்போடுகிறானே! மனம் கொதிக்கிறது, துடிக்கிறது.

கிளின்டன் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருக்கிறான்.

நடு ஹோலில்-

இசையும் நடனமும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.ட்ரம் சத்தம் பயங்கரமாக ஒலிக்கிறது.புகழ்பெற்றவொரு மெக்சிக்கோ இசைக்கலைஞன் ட்ரம்மை வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கிறான். நகரத்தின் பெரிய கசினோ புள்ளி ஒருவரின் உன்னதமான செயல்பாடொன்றை பாராட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த வைபவம் அது. பல இடங்களில் பலரும் செய்தார்கள். கிளின்டன் தன் பங்கிற்குச் செய்கிறான்.

திடீரென கிளின்டனின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது.சிறைக்கைதி றோபோ வென அழைக்கப்படும் ஆம்ஸ்ட்ரோங்கின் நினைவு அவனுக்கு வந்தது.

இன்று வீட்டு வேலைக்கு அவன்தான் வந்திருந்தான். அவனை வைத்து வேலைக்காரனை துகள் துகளாக்கி விடலாம். எந்த விசயத்தையும் பரபரப்பில்லாமல் அதே நேரம் மின்னல் வேகத்தில் ஓசையே இல்லாமல் ஓர் ஓனகொண்டா பாம்பைப்போல கச்சிதமாக முடித்து விடுவதில் அவனுக்கு நிகர் அவனேதான்.

இந்த நினைவு வந்ததும் கிளின்டன் சட்டென நிகழ்ச்சி நடக்கும் நடுஹோலுக்கு ஓடி வந்தான்.

அவன் அங்கு இருப்பான்.

கிளின்டன் அங்குமிங்கும் அவனைத் தேடிக்கொண்டிருந்த போது வீட்டு வேலைக்காரி இடையிலே தென்பட்டாள். விருந்துபசாரத்தில் மும்முரமாக செயல்பட்டுக்கொண்டிருந்த அவள் "எஜமான்" என்றாள்.

அவளிடம் எதையும் கேட்காத அவன் றோபோவை தேடுவதில் கண்களை வீசினான். கிளின்டன் மெடத்தை தேடுவதாக நினைத்த அவள்,

"எஜமான், அம்மாவுக்கு தலைவலி, அறைக்கு போயிருக்கிறார்கள்" என்றாள்.

"ஓ கே! ஓ கே!" என்று நகர்ந்த கிளின்டன் றோபோவை தேடுவதில் முனைந்தான்.

அவனை காணவில்லை. கிளின்டனுக்கு வியர்த்து விட்டது. அவன் தப்பித்துச் சென்றுவிட்டால் அவனுடைய தொழிலே பறிபோய்விடும். பயந்து போன கிளின்டன் தனது அறைக்கு தலை தெறிக்க ஓடினான். துப்பாக்கி அங்குதான் இருந்தது. அதை எடுக்கவே தாவிச் சென்றான். கதவுகள் திறந்து கிடந்தன. அறைக்குள் மெடம் இல்லை. அவன் களஞ்சிய அறைக்கு பாய்ந்து சென்றபோது சுவரில் நிழல்களின் ஆலிங்கன நடனம் மெக்ஸிக்கோ காரனின் மேளமடிப்பைப்போல அதி பயங்கர உச்ச நிலையில் இருந்தது.

(தொடரும்)



## மனசுக்கு இதமான மந்த்ரா!

### சார்மியின் மின்னாமின்னா கவர்ச்சி

தமிழிலே மண்ணைக் கௌவிய பல நாயகிகள், தெலுங்கில் பொன்னை அள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அதில் முக்கிய மானவர் சார்மி. இவரை யாராவது ''சார்மி'' என்று அழைத்தால் 'காண்பி' என்று இவர் காதில் விழும் போலிருக்கிறது. தெலுங்கு திரையுலகமே திகைக்கும் அளவுக்கு வஞ்சனையில்லாமல் கவர்ச்சி காட்டி வருகிறார் இவர் தமிழில் 'காதல் அழிவதில்லை', 'காதல் கிசு கிசு', 'ஆகா எத்தனை அழகு' போன்ற படங்களில் இவர் நடித்தபோது கொடுக்காத வரவேற்பை இப்போது கொடுக்கத் தயாராகி வருகிறது தமிழகம், அதுவும் 'மந்த்ரா' என்ற படத்திற்கு. தெலுங்கில் பெரும்வெற்றிபெற்ற இந்தப் படத்தை தமிழில் தரவிருக்கிறார்கள். கண்ணால் காண்பதெல்லாம் உண்மை இல்லை என்பதை கருத்தாக கொண்டிருக்கும் படமாம் இது. இளமை, மர்மம், திகில் என்பவற்றை மையமாக கொண்டிருக்கும் இப்படத்தை ஜூலையில் எதிர்பார்க்கலாம் என்கிறது தயாரிப்பாளர் தரப்பு.



## காதல் என்றா





## 'குடியரசில்' விக்னேஸ்வரன்

'குடியரசு' படத்தில் புலனாய்வு பத்திரிகையாளராக நடிக்கிறார் விக்னேஷ். இந்தப் படத்திலிருந்து தன்னுடைய பெயரை விக்னேஸ்வரன் என மாற்றிக் கொண்டுள்ளார். ஒரு பத்திரிகை மற்றும் பத்திரிகையாளரின் பணி சமுதாயத்துக்கு எந்த அளவுக்கு அவசியம் என்பதை வலி யுறுத்தும் குடியரசு படத்தில் இந்திய அரசியல் சாசனம் 19ஏ கொடுத்துள்ள பேச்சுரிமை, கருத்துரிமை, எழுத்துரிமையை உணர்த்து கிற வகையில் கதை அம்சம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜனவரி முதல்திகதி காலை 8 மணிக்கு துவங்கும் கதை, அன்றைய தினம் மாலை 6மணி வரையிலான 12மணி நேரத்தில் நடக்கும் சம்பவங்களின் விறு விறு தொகுப்பாக அமைந்துள்ளது.

## கரணின் நடிக்கும் 'கனகவேல் காக்க'

'கொக்கி', 'தீ நகர்', 'கருப்பசாமி' குத்தகைக்காரர்',' காத்தவராயன்' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்த கரண் அடுத்து 'கனகவேல் காக்க' என்ற புதிய படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இதுவரை எந்த கதாநாயகனும் நடித்திராத ஒரு கதாபாத்திரத்தில் கரண் நடிக்கிறார்.

ஆயுதத்திலேயே மிகப் பெரிய ஆயுதம் மௌனம்தான். அந்த மௌனம் கலைக்கப்படும்போது ஏற்படும் கலவரம் போர்க்களத்துக்கு இணையானது. அப்படி அதிரடியான கதையம்சம் கொண்ட படம் இது. இதில் கரண் ஜோடியாக ஹரிப்பிரியா என்ற புதுமுகம் அறிமுகமாகிறார்.

படம்பிடிப்பு சென்னையில் தொடங்கி ஒக்ரோபர் மாதம் திரைக்கு வர இருக்கிறது.





## பிலிமுக்கு மாறும் டிஜிட்டல் சி

ஜீ கம்பனி தயாரிப்பில் ஆதி கதை, திரைக்கதை
எழுதி இயக்கியிருக்கும் 'சிலந்தி' படம் கடந்தமா
வந்து 34 நாட்களைத் தாண்டி வெற்றி நடை போ
கொண்டிருக்கிறது. டிஜிட்டல் கமரா மூலம் எடு
இப்படம் இப்போது பிலிம் பார்மெட்டுக்கு மாறு
குறித்து இயக்குநர் ஆதி, தயாரிப்பாளர் சங்கர் கூ
முன்னா, மோனிகா நடித்த இந்தப் படம் முழுவது
டிஜிட்டலில் படமாக்கப்பட்டு, டிஜிட்டல் படம்
சார் செய்யப்பட்ட முதல் தமிழ்த்திரைப்படம் என்
மையை 'சிலந்தி' பெற்றிருக்கிறது. பிலிம், லேப்
சினிமாவின் அத்திவாரங்களை கொஞ்சம் தள்ளி
விட்டு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை முழுமை
பயன்படுத்தி வெற்றிபெற்றுள்ளோம். முதலில் 3
களில் மட்டுமே ரிலீஸ் செய்யப்பட்டது. படத்தி
களும் ரசிகர்களும் கொடுத்த அமோக வரவேற்
தொடர்ந்து பல விநியோகஸ்தர்களும் தியேட்ட
யாளர்களும் படத்தை பிலிமுக்கு மாற்றிக்கொடு
தொடர்ந்து கேட்டுவந்தனர். படம் வெளிவந்து 3
குப் பிறகு டிஜிட்டல் சிலந்தி பிலிமுக்கு மாற்றப்
கிறது. வெகுவிரைவில் தமிழகம் மற்றும் கோள
40 தியேட்டர்களில் ரிலீஸ் செய்யப்படுகிறது. இ
ஒரு சின்ன பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு தயாரிப்
லாபம் சம்பாதித்து தந்த படம் என்ற பெருமை
சிலந்தி பெற்றிருக்கிறது.

# ால் என்ன?
## திரைவிமர்சனம்



தியாவின் இளமைத்துள்ளல் நடிப்பை நம்பி வெளிவந்திருக்கும் படம் காதல் என்றால் என்ன? மெருகு கூடிய அழகுடன் பரதம் கற்றுத்தரும் கரக்டரில் நடித்திருக்கிறார் தியா. தியாவின் அழகில் பிளஸ்2 மாணவன் முதல் முதியவர் வரைஅத்தனைபேருமே கிறங்குகிறார்கள். தியாவின் பின்னாலேயே சுற்றுகிறார்கள். ஒருவர் மட்டும் இன்னும் ஒருபடி மேலே போய் தியாவுக்கு நடுரோட்டில் முத்தமிடுகிறார். இந்த விவகாரம் பொலிஸ் நிலையத்துக்கு போகிறது. முத்தம்கொடுத்த வரை மூச்சுமுட்ட அடித்தே கொல்கிறார் பொலிஸ்காரரான சரண்ராஜ். அதன்பின்னர் சரண்ராஜுக்கு தியா மீது காதல்வர ...தியாவோ நாயகன் வீராவை காதலிக்க...பரபரப்பு கூடுகிறது. எங்கே தியா நமக்குக் கிடைக்காமல் போய்விடுவாரோ எனக் கருதும் சரண்ராஜ், தியாவை வீட்டுச் சிறையில் அடைக்கிறார். தியாவை மீட்க வீரா எடுக்கும் முயற்சிகளும், அதில் வெற்றிபெறுவதும்தான் படத்தின் மீதி கதை. படத்தின் ஹீரோ வீராவின் நடிப்பைப் பற்றித்தான் சொல்லவேண்டும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடித்திருக்கும் அவர் மார்க்குகளை ஸ்கோர் செய்துள்ளார். பொலிஸ்அதிகாரியின் நல்ல உடற்கட்டும் ஆக்ரோஷமும் ரசிக்கவைக்கிறது. படத்தின் பிளஸ் தியா என்று சொல்வதா, தியாவின் கவர்ச்சி என்பதா? பரதம் கற்றுத்தரும் காட்சியிலும் சரண்ராஜிடம் சிக்கித் தவிக்கும் இக்கட் டான நிலையிலும் நடிப்பு மிளிர்கிறது. அதை விட அதிகமாக கவர்ச்சி மிளிரோ மிளிரென்று மிளிருகிறது. நீச்சல் உடையணிந்து வரும் காட்சி வெயிலுக்கு ஏற்ற ஜில்லு ஜில்லு ஐஸ்கட்டி.




1978 இல் வெளியான விட்டலாச்சாரியாரின் 'ஜகன்மோகினி' படத்தின் ரீமே கடந்த சனிக் கிழமை தொடங்கியது. புதிய ஜகன்மோகினி யில் நமிதா நாயகி. ஜெயமாலினி நடித்த மோகினி வேடத்தில் இவர் நடிக்கிறார். மதுரை திருமலை நாயக்கர் மஹாலில் ஜகன்மோகினி படப்பிடிப்பை முதல்வரின் மகன் அழகிரி தொடக்கி வைத்தார். பொதுவாக சினிமா விழாக்களில் கலந்து கொள்ளாதவர் அழகிரி அவர் ஜகன்மோகினியை தொடங்கிவைப்பது அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



# சிலந்தி

க்கதை, வசனம்
ந்தமாதம் திரைக்கு
ட போட்டுக்
ம் எடுக்கப்பட்ட
மாறுகிறது. இது
கள் கூறுகையில்:
முழுவதுமாக
படம் என்று சென்
ம் என்ற பெரு
, லேப் என்ற
தள்ளிவைத்து
முழுமையாகப்
லில் 30 தியேட்டர்
டத்திற்கு மீடியாக்
வேறபை
யட்டர் உரிமை
கொடுங்கள் எனத்
வந்து 30 நாட்களுக்
ற்றப்பட்டிருக்
கோளவில் சுமார்
றது.இதன் மூலம்
யாரிப்பாளருக்கு
மையையும்





# தலைக்கு டை அடிக்கப் போகிறீர்களா?

பெண்

பொதுவாகவே அழகு என்பது அவரவர் எண்ணங்களிலும், குணநலன்களிலும் மற்றும் அவரவர் வாழும் வாழ்கை முறைகளிலுமே அடங்கியுள்ளது. புற அழகைப் பொறுத்தவரையில் அழகானவர்கள், அழகற்றவர்கள் என்று யாரையும் பிரிக்கமுடியாது. அழகுபடுத்திக் கொள்பவர்கள், அழகுபடுத்திகொள்ளத் தெரியாதவர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இயற்கை நமக்குத் தந்த அழகை நாம் பாதுகாப்பதாலே எல்லோரும் பாராட்டும் அழகு நமக்கும் சொந்தம்தான். இதற்காக தினமும் அழகு நிலையங்களுக்கு செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. வீட்டிலேயே இயற்கையாக கிடைக்கும் காய், பழங்களைக் கொண்டு எளிய முறையில் நம்மை அழகுப்படுத்திக்கொள்ளலாம்.


முதன் முதலில் 'டை' போடுபவர்கள் முதலில் காதோர முடியில் 'டை'யை தடவி 24 மணி நேரம் சென்ற பிறகு, எந்த அலர்ஜியும் இல்லை என்று தெரிந்தால், 'டை'யை மேலும் கூந்தலில் தடவலாம். அலர்ஜி ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி அலர்ஜிக்கான மருந்து சாப்பிட்டு பின்னர் 'டை' போட வேண்டும். 'டை' போட்ட அரை மணி நேரத்தில் முடியை அலசும் போது 'கலரிங்' செய்த முடிக்காகவே இருக்கும் ஷாம்பு கொண்டு அலசினால் 'டை' சீக்கிரம் அழியாது.

அடிக்கடி டை போடுவது தவறு. மாதம் ஒரு முறை போடலாம். டை போட்ட அன்றே தலைக்கு எண்ணெய் தடவக்கூடாது. அடிக்கடி தலையில் குளித்தல் டை போய் விடும் என்று நினைத்து சிலர் தலையை பதினைந்து நாளைக்கு கூட அலச மாட்டார்கள். இது தவறு. இதனால் முடி அதிகமாக கொட்டும் நிலை உண்டாகும்.

அதே போல் கண்டிஷனர் பயன்படுத்துவது மிக அவசியம். ஏனெனில் டை போடும் போது கேசத்தில் இருக்கும் 'கியூட்டிக்கிள்' என்ற பாகம் திறந்து கொள்ளும். நல்ல கண்டிஷனர் பயன்படுத்தும் போது கியூட்டிக்கிள் ஒன்றின் மீது ஒன்று அமுங்கி விடும். இது முடிக்கு பாதுகாப்பைத் தரும்.

டை போடும் முன் அது தரமான டைதானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அமோனியா மற்றும் லெட், சில்வர் நைட்ரேட் போன்ற ரசாயனம் கலந்த டையை தவிர்க்க வேண்டும். இது சருமத்தை பாதித்து முடியையும் வலுவிழக்கச் செய்து விடும். டையில் நிலையானது மற்றும் தற்காலிகம் என்று இரண்டு வகைகள் உள்ளன. நிலையான டை போட்ட இடங்களில் அழியாமல் இருக்கும். புதிதாக வளரும் முடிக்கு மட்டும் டை போட்டால் போதும் . தற்காலிகமான 'டை' யை மாதம் ஒரு முறைதான் போட வேண்டும்.

முறையாக 'டை'யை உபயோகிப்பதினால் எந்த வயதிலும் இளமையாகவே காட்சியளிக்கலாம்.



# வாழ்க்கையில் வெற்றி பெற வழி என்ன?

எப்போதும் பரபரப்புக் கூடாது. சந்தேகக் கண்ணோடு யாரையும், எதையும் பாக்கக்கூடாது. கோபம் வேண்டாம். கோபத்தினால் நாடியிலே அதிர்ச்சி உண்டாகும்.

யாரையும் எளிதில் நம்பவும் வேண்டாம். அதற்காக சந்தேகமும் வேண்டாம்.

'நாளை செய்யலாம்' என்று எந்த காரியத்தையும் தள்ளி போடக் கூடாது.

ஒரு காரியம் நடக்க எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது கூடாது. இது உங்கள் நம்பகத் தன்மையை தகர்க்கும்.

எதிலும் ஒரு நிதானம்- இது வெற்றிக்குப் பகைவன்.

தேவையற்ற வேலைகளைத் தவிர்த்து விடுங்கள்.

'எனக்குள் எந்த ரகசியமும் இல்லை. நான் ஒளிவு மறைவின்றி பேசுவன்' என்று எல்லோரிடமும் உங்களைப் பற்றிய அந்தகாரங்களைக் கூறாதீர்கள்.

எப்போதும் வேலை, வேலை என்றிருந்தால் தடுமாற்றம் தான் அதிகமாகும். வெற்றிக்குத் தடையாகவும் அமையும்.

'எனக்கு எல்லாம் தெரியும்' என்ற அசட்டுத்துணிச்சலில் எந்தச் செயலிலும் ஈடுபடாதீர்கள்.

வீண் வாக்குவாதங்களிலோ, புறங்கூறலிலோ ஈடுபட்டு பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள். 'என்னால் முடியாதது எதுவுமே இல்லை' என்ற தலைக் கனம் வேண்டாம். தன்னம்பிக்கை வேறு, தலைக் கனம் வேறு. அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தோல்வியைக் கண்டு துவண்டுவிடலாம் அந்தத் தோல்வி ஏற்பட என்ன காரணம் என்பதை அறிந்து காரணத்தை விலங்குகள் அல்லது போக்குங்கள்.

ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது வேறு வேலை பற்றிய சிந்தனை வேண்டாம்.

உங்களின் தவறுகளை மற்றவர் மேல் திணிக்காதீர்கள்.

எந்த வேலையைச் செய்யும் முன்பும் நன்றாக யோசியுங்கள். தொடங்கிய வேலையை முடிக்காமல் விடாதீர்கள்.


எந்த வேலையாக இருப்பினும் 'நான் தான் செய்வேன்' என்று ஒற்றைக் காலில் நிற்காமல், பகிர்ந்து கொடுத்த வேலையில் முடிவினை மட்டும் கூறுங்கள். மற்றவர்கள் அதைத் திறம்படச் செய்ய ஊக்குவியுங்கள்.

குறிப்பாக நேரத்திற்கு மதிப்பளியுங்கள்.

யாரையும் குறை கூறாதீர்கள். தலைவிதி என்ற சோம்பல் வேண்டாம். இனிமேல், வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும்.

## சமைப்போம் சுவைப்போம்

### சில்லி இட்லி



**தேவையான பொருட்கள்:**

அவித்த இட்லி - தேவையான அளவு
பெரிய வெங்காயம்-3
இஞ்சி பூண்டு விழுது -1 ஸ்பூன்
தக்காளி -2
சோயாசோஸ் -2 ஸ்பூன்
தக்காளிசோஸ்-2 ஸ்பூன்
கேசரிப்பவுடர்-1சிட்டிகை
மிளகாய் தூள் - காரத்திற்கேற்ப
கோர்ன்பிளாவர் - 2 ஸ்பூன்
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**


வேக வைத்து எடுத்த இட்லிகளை ஆறிய பின்பு, கத்தியால் தண்ணீர் தொட்டு, சதுரம் அல்லது முக்கோண வடிவங்களாக சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும்.


ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு போட்டுப் பொரிந்ததும் நறுக்கிய வெங்காயம், தக்காளி போட்டு நன்கு வதக்க வேண்டும். கூடவே சோஸ் வகைகளையும் சேர்த்து வதக்கவேண்டும். சுவைக்கு சிறிது உப்புச் சேர்க்கவேண்டும்.

தனியாக ஒரு பாத்திரத்தில் மிளகாய்தூள், கேசரிப் பவுடர், கோர்ன்பிளவர், உப்பு, இஞ்சி பூண்டு விழுது ஆகியவற்றைக் கலந்து வெட்டி வைத்துள்ள இட்லி துண்டுகளை அதில் போட்டுக் கலக்க வேண்டும்.


மீண்டும் பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கலந்து வைத்துள்ள மசாலா இட்லிகளைப் போட்டுப் பொரித்து எடுத்து அத்துடன் முதலில் வதக்கி வைத்துள்ள வெங்காயம், தக்காளிக் கலவையை போட்டுக் கலக்கி மேலே பொடியாக நறுக்கிய கொத்துமல்லி தூவி பரிமாறவும்.

முதல் மூன்று உருக்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க.


20.



21.



பின்வரும் வினாக்களில் வினாக்குறி இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.


22.




1) 12
2) 24
3) 14

23.



1) 9 2) 28 3) 20

கீழே தரப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து 24ஆம், 25ஆம் வினாக்களின் வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

24.



25.



இல 26-40 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

26. வெற்றுக்கூட்டுக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக.


3338 → 3388 → 3833 → 8333 → ? .........

பின்வரும் விவரங்களை வாசிக்க.

5 மாம்பழங்களினதும் 500g சீனியினதும் விலை ரூபா 110.00
1kg சீனியினதும் 250g தேயிலையினதும் விலை ரூபா 150.00
3 மாம்பழங்களினதும் ஒரு அன்னாசிப்பழத்தினதும் விலை ரூபா 100.00
ஒரு அன்னாசிப்பழத்தின் விலை ரூபா 55.00

27. 1kg சீனியின் விலை என்ன? ......................

28. 1kg தேயிலையின் விலை என்ன? ......................

29.


இவ் உருவில் மறைந்துள்ள ஒரே அளவிலான ஆங்கில எழுத்துக்கள் ஐந்தையும் கண்டுபிடித்து அவற்றை ஆங்கில நெடுங்கணக்கு வரிசையில் எழுதுக. ......................

30. இங்கிலாந்தில் நேரம் இலங்கை நேரத்தைவிட 4 மணித்தியாலம் 30 நிமிடம் பிந்தியதாகும். இங்கிலாந்தில் இருக்கும் ஒருவர் அங்குள்ள நேரப்படி பி.ப 3.45 இற்கு தொலைபேசியில் கதைப்பாராயின் இலங்கையிலுள்ள ஒருவர் அதனைக் கேட்கும்போது இலங்கை நேரம் என்னவாகும்? ......................


31. இது ஒரு நான்கெழுத்துச் சொல் ஆகும். முதல் எழுத்து கட்டிலில் உண்டு; தொட்டிலில் இல்லை. இரண்டாம் எழுத்து கவலையில் உண்டு; கடலையில் இல்லை. மூன்றாம் எழுத்து மனத்தில் உண்டு; மணத்தில் இல்லை. நான்காம் எழுத்து அம்பில் உண்டு; அன்பில் இல்லை. அச்சொல் எது? ......................

32. பின்வரும் கணிதச்செய்கையை அவதானிக்க.

$$\begin{array}{cccc} & A & B & 3 \\ + & C & 5 & C \\ \hline & 6 & 5 & 7 \end{array}$$

இதன்படி A + B + C இன் பெறுமானம் எவ்வளவு? ......................

33. இங்கு தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானிக்க. அவற்றை ஏதேனும் ஓர் அடிப்படையில் மூன்று கூட்டங்களாக வகைப்படுத்தலாம். அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று உருக்களைத் தெரிவுசெய்க. அவற்றுக்குரிய ஆங்கில எழுத்துக்களை முதலாவது நிரலிலும், அவற்றை வகைப்படுத்த உதவிய காரணத்தை இரண்டாம் நிரலிலும் எழுதுக.




| | உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் | வகைப்படுத்த உதவிய காரணம் |
|---|---|---|
| 33. | ................................ | ................................ |
| 34. | ................................ | ................................ |
| 35. | ................................ | ................................ |

பின்வரும் கூற்றுக்கள் ஏன் தவறானவை என தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

36. எனது வகுப்பில் பயில்கின்ற ஊமை நண்பன் கலைவிழாவில் பாடிய கீதம் கேட்டு சபையோர் கரகோசம் செய்தனர்.
................................................................................

37. பசியால் வாடிய யானையொன்று கானகத்தில் ஒரு முயலைக்கண்டு விரட்டிச் சென்று காலால் நசுக்கிக் கொன்று அதனைத் தனது இரையாக்கிக் கொண்டது.
................................................................................

தரம்-05 மாணவர்கள் ஐந்துபேர் ஐந்து பாடங்களில் பெற்ற புள்ளிகள் குறியீடுகளில் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து இல 38-40 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

| | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | சுற்றாடல் | சமயம் |
|---|---|---|---|---|---|
| கபீர் | ◁ | ▷ | ◁ | ▽ | ▽ |
| சிமாயா | ▽ | ▽ | △ | △ | ▽ |
| சூர்யா | ▽ | ▷ | ▽ | △ | ▽ |
| பிருந்தா | ▷ | ▷ | ▷ | ▷ | △ |
| காமில் | ◁ | ▽ | ▷ | ▽ | △ |

△ = 90 ▽ = 75 ▷ = 60 ◁ = 40

38. அதிகூடிய மொத்தப்புள்ளி பெற்றவர் யார்? ......................

39. மாணவர்கள் எந்தப் பாடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள்? ......................

40. 350 புள்ளிகளுக்குக் குறைந்த மொத்தப்புள்ளிகள் பெற்ற மாணவர்கள் எத்தனைபேர்? ......................

**தரம்-05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்**

## விசேட மாதிரிவினாத்தாள் - 04


ஆசிரியர்:- திரு. புன்னியாமீன் /
மஸீதா புன்னியாமீன்

வீதியில் பாதசாரிகள் எல்லாம் என்னையே பார்ப்பதுபோல் எனக்குள் ஓர் உணர்வு. கள்ளக்கடத்தல்காரனின் மனோநிலையில் நான். எனது மோட்டார் சைக்கிளில் தொங்கும் இந்தப் பையை யாரும் காணாதபடி சற்றுத் தொலைவிலுள்ள அந்த மீன் சந்தை வரை நான் கொண்டு செல்ல வேண்டும். வழியில் வங்கி நண்பன் வடிவேல் வழிமறித்தான், சுகம் விசாரிக்க. நீண்ட நாட்களின் பின்னர் நான் அவனைச் சந்தித்தாலும் இப்போதைய நிலையில் அவனுடன் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. சாக்குச் சொல்லிக்கொண்டு மெதுவாக நழுவினேன். மோட்டார் சைக்கிளில் தொங்கியிருக்கும் பை ஏறக்குறைய கைபிடி அறுந்துவிழும் நிலைக்கு வந்து விட்டது. எனது கூடிய கவனம் வாகனத்தை ஓட்டுவதை விட பையிலேயே இருந்தது. ஒருவாறு மீன்சந்தை எனக்குக் கிட்டிய தூரத்தில் வந்துவிட பையை எடுத்துக்கொண்டு மெதுவாக இறங்கினேன். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஆளரவம் இல்லையென்பதை உறுதிப்படுத்தியதும் அந்தக் குட்டிப்பிசாசை வெளியில் (கொட்டி) விட்டேன்.

இந்தக் குட்டிப்பிசாசைப் பற்றிய கதை மிகவும் பெரியது, சுவாரஸ்யமானதும் கூட. என்னைத்தவிர எங்கள் வீட்டில் அதைப் பூனைக்குட்டி என்று சொல்வார்கள். கதையின் ஆரம்பம் பூனையில்லாமல் பூச்சிகளிலேயே தொடங்கியது.

எங்கள் வீட்டுச் சமையலறையில் முதலில் ஒன்றிரண்டு கரப்பான்கள் தான் வசிக்க வந்தன. ஆனாலும் நாட்கள் செல்லச் செல்ல அவற்றின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தது. ஆரம்பத்தில் இதனை நாங்கள் பெரிதாக எடுக்கவில்லை. அதுதான் நாங்கள் விட்ட பெருந்தவறு. எங்களுக்கிருந்த வேலைப்பளுவை அதற்குக் காரணமாகச் சொல்லிவிட முடியாது. தொடர்ந்து வந்த சில நாட்களில் வீட்டில் எலிப்புழக்கம் இருப்பதாக மனைவி சொன்னாள். நாளடைவில் வீட்டிலிருந்த உணவுப் பொருட்கள், சோப் வகைகள், அலுமாரிக் குள்ளிருந்த புத்தகங்கள், உடுப்புக்கள் எனப் பலதையும் கரப்பான்களும் எலிகளும் தங்கள் இஷ்டத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கின. இதன் பின்னர் வீட்டிலி ருந்து நாங்கள் மெது மெதுவாக அந்நியப் படுத்தப்படுவதை உணரத் தலைப்பட்டோம். ஆனாலும் இத்தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கு வீட்டில் ஒரு பூனையை வளர்க்கும் பிரேரணையை ஏனோ ஒருவரும் முன்வைக்கவில்லை.

நண்பனொருவன் எலித் தொல்லைக்கு வழி சொன்னான். மறு நாள் ஒரு எலிப் பொறி, கால் கிலோ கருவாடு, நஞ்சு மருந்து இரண்டு புட்டிகள் எனப் பல பொருட்களோடு நான் வீட்டில் ஆஜராகியபோது எனது மனைவியும் குழந்தைகளும் விடயத்தை அறிந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். கரப்பானுக்கும் எலிகளுக்கும் முடிவு காலம் நெருங்கி விட்டதாகவே நாங்கள் நம்பினோம். ஆனால், நடந்ததோ வேறு விதமாக இருந்தது. மூன்று நாட்களில் எலிகளை தவிர வேறு யாருமே வீட்டில் குடியிருக்க முடியாதபடி துர்நாற்றம் வீசத் தொடங்கியது. ஈராக் குண்டு வெடிப்பில் சிதறிக் கிடக்கும் மனித உடலங்கள் போல் கரப்பானின் பூதவுடல்கள் ஆங்காங்கே பரவிக் கிடந்தன. இதனை விட எலிகளின் தொல்லை பரவாயில்லையென்று மனைவி சத்தமிடத்தொடங்கினாள். பிள்ளைகளின் முகத்தை நேருக்குநேர் பார்க்கவே எனக்கு அச்சமாக இருந்தது.

இந்த இக்கட்டான நாட்களில் ஒரு நாள் பக்கத்து வீட்டு மாமி எனது வீட்டு காரியுடன் வம்பளக்க வந்திருந்தாள். அவளைக் கண்டதும் இரண்டு பிளாஸ்ரிக் கதிரைகளை முற்றத்தில் போட்டு மாமியை இருக்கச் சொன்னதும் அவள் அனைத்துப் பிரச்சினைகளையும் கேட்டறிந்தாள். அரைகுறை அறிவில் இருக்கும் மாமி, பெனாசிர் பூட்டோவின் அநியாயச்சாவில் ஆரம்பித்து பக்கத்து வீட்டுப் பரிமளம் வாங்கிய பட்டுச் சேலை சாயம் போனது வரை தகுந்த ஆதாரங்களுடன் ஒப்புவிப்பாள். எனக்கு மாமியை சுத்தமாகப் பிடிக்காது. எனக்கு பிடிக்காவிட்டாலென்ன மனைவிக்கும் பிடிக்குமென்ற தைரியத்தில் அடிக்கடி வீடுவந்து போகும் மாமி எங்கள் பிரச்சினைக்கும் உடனுக்குடன் உருப்படியற்ற தீர்வுகளைச் சொல்லுவாள். இறுதியில் பூனைகளை வீட்டில் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அரச மிருக வைத்தியரை போன்று ஒருமணி நேர வகுப்பொன்றை நடத்தி விட்டு வெகுமதியாக இருபது ரூபா பெறுமதியான வெற்றிலை யையும் மென்று விட்டு போய் விட்டாள். இச் செலவுகளும் எலிப் பொறியின் செலவுகளுடன் சேர்ந்துகொண்டன.




அன்றைய பொழுது சனிக்கிழமையில் விடிந்திருந்தது. முதல் நாள் இரவு மூன்று மைல்களுக்கப்பாலுள்ள நண்பரொருவருடன் செல்போன் மூலம் கதைத்து ஒரு பூனைக் குட்டியை பெறுவதற்கான ஏற்பாடுகளை வீட்டுக்காரி செய்திருந்தாள்.

ஒரு உரப்பையில் பூனைக்குட்டியைப் போட்டு அதனை இந்தியாவிலிருந்து சல்வார் வாங்கி வந்த அழகான பையினுள் வைத்து நான் கௌரவமாக வீதியில் கொண்டு செல்ல வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் எனது மோட்டார் சைக்கிளில் தொங்க விட்டாள் நண்பனின் மனைவி. எனது மூத்த மகள் பிறந்த வேளையில் தாயையும் பிள்ளையையும் ஆஸ்பத்திரியிருந்து ஆட்டோவில் கொண்டுவந்ததை விட மிகப் பக்குவமாக பூனைக்குட்டியை வீட்டிற்கு கொண்டுவந்து மனைவியின் பாராட்டைப் பெற்றேன்.

பாலும் பழமும் கைகளில் ஏந்தி பவள வாயில் சிறிது சிறிதாக ஊட்டி வர ஒரே வாரத்தில் குட்டிப்பூனை வளர்ந்து சோறு சாப்பிட ஆரம்பித்தது. பூனையின் சத்தத்தில் எலிகளும் எங்கோ ஓடி மறைந்து விட்டன. சில நாட்களில் எலித்தொல்லை குறைந்ததென்னவோ உண்மைதான். அன்று அனைவரும் வியக்கும் வண்ணம் அந்த அதிசய நிகழ்வு வீட்டில் நடந்தது. இரவு பத்து மணிக்கு 'அரசி' பார்த்து விட்டு படுக்க போன மனைவி பரபரக்க, தூக்கத்திலிருந்த என்னை தட்டி எழுப்பினாள். எங்கள் பூனை ஒரு செத்த எலியைத் தனது கால்களுக்கிடையில் வைத்திருந்தது.

கரப்பான்களின் கதையும் எலிகளின்

**சிறுகதை**

கதையும் முடிவுக்கு வர பூனையின் கதை ஆரம்பித்தது. எங்கள் பூனையைத் தேடி வேறு சில பூனைகளும் வரத் தொடங்கின. தெருவில் திரியும் பூனைகள், சேரிப்புறப் பூனைகள் அனைத்தும் இதில் அடங்கும். அந்தஸ்து பாராமல் அனைத்துப் பூனைகளுடனும் அது உறவாடி மகிழும். மனிதனை தவிர மற்றைய உயிரினங்கள் அனைத்தும் தம் குறுகிய கால வாழ்வை இன்பமாக வாழ்ந்து முடிப்பது நமக்கு பொறாமை தான் தருகின்றது.

எண்ணங்களிடையே எழுந்து மதியச் சாப்பாட்டிற்காக அமர்ந்தேன். கறிகள் பிடிக்கவில்லை, கடுமையான பசி வேறு. அவ்வேளையில் கூட்டத்திலிருந்த எங்கள் பூனை வந்து காலை பிராண்டியது. பசியுடன் கோபமும் சேர ஒரு நீண்ட தடியை எடுத்து பூனைகளை விளாசி தள்ளினேன். வீட்டில் ஒருவரும் எதிர்த்து பேசவில்லை. திருமணம் முடித்து இருபது வருட காலத்தில் எனது வீரத்தைக் காட்டக் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டேன்.

இரவுச் சாப்பாடு முடிந்து பிள்ளைகள் எல்லாம் தூங்கியாயிற்று. ஐந்தாவது படிக்கும் சின்னவளின் வீட்டுக் கணக்கில் தலையை உடைத்துக் கொண்டிருந்த எனக்கு மிகக் கிட்டிய தூரத்தில் எனது இல்லாள். பிள்ளைகள் புத்தியறிந்த பின்னர் நாங்கள் இருவரும் சில அங்குலங்கள் இடைவெளியில் இருப்பது இதுதான் முதல் தடவை. முகத்தில் இன்ப அதிர்ச்சியை காட்டாது என்ன என்பது போல் தலையை அசைத்தேன். மத்தியானம் பூனைகளை நீங்கள் கடுமையாக அடித்திருக்கக் கூடாது என்ற பீடிகையுடன் அவள் கதையை ஆரம்பித்தாள். இதைக் கதைப்பதற்கு இவள் ஏன் இந்த இரவைத் தேர்ந்தெடுத்தாளென நான் உள்ளூர யோசிக்கத் தேடங்கினேன். மதியம் எனது கோபத்தைக் கண்டு நன்றாகப் பயந்திருப்பாள் போலும். அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான் என எண்ணிக் கொண்டேன்.

அவ்வளவு தான், எனது சிந்தனையில் தடங்கல் ஏற்பட்டது. இன்னிசைக் கச்சேரியில் குண்டு வெடித்ததைப் போல கள நிலை திடீரென மாறியது. மதியம் எனது செயலைப் பற்றிய கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் என்னை நோக்கி வர ஆரம்பித்தன. இதற்காகத்தான் பிள்ளைகள் தூங்கும் வரை காத்திருக்கிறாள் என்ற உண்மை அப்போதுதான் எனது மரமண்டைக்கு உறைக்க ஆரம்பித்தது.

இறுதியில் பூனை 'உண்டாகி' இருப்பதால் அதனை இனிமேல் துன்புறுத்தக் கூடாதெனவும் ஏனைய பூனைகள் வீட்டிற்கு வருவதற்கு நான் இடையூறு செய்யக் கூடாதெனவும் எச்சரிக்கை கலந்த தொனியில் எடுத்துரைத்துவிட்டு படுக்கப் போனாள் என் பத்தினி. எலியைத் துரத்திய பூனை என்னையும் வீட்டை விட்டுத் துரத்தி விடுமென்ற அச்சம் என்னைப் பீடிக்கத் தொடங்கியது. உறக்கம் வராதென்று தெரிந்தும் லைற்றை அணைத்தேன். அறையைப் போல் மனதையும் இருள் சூழ்ந்திருந்தது.

எங்கள் பூனை முழுகாமல் இருப்பது பக்கத்து வீட்டு மாமிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவளுடைய ஆலோசனைக்கமைவாக ஸ்டோர் றூமில் அதற்குப் படுக்கை தயார் செய்யப்பட்டது. கிட்டிய தூரத்தில் தண்ணீர்க் கோப்பையும் சாப்பிடுவதற்காக பீங்கானும் வைக்கப்பட்டன. ஓமந்தை வீதியைப் போலல்லாது ஸ்டோர் றூம் கதவு பூனையின் போக்குவரத்திற்காக இருபத்து நான்கு மணி நேரமும் திறந்து விடப்பட்டது. அந்த றூமுக்குப் போவதற்கு பிள்ளைகளுடன் சேர்ந்து எனக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது பழைய ஆணி, கம்பித்துண்டு, சுத்தியல் தேடித்திரியும் எனக்கு இந்த நடவடிக்கை பெரும் இடையூறாக இருந்தது.

சின்னவள் அன்று பள்ளிக்கூடம் போகவில்லை. விசாரித்ததில்

**எஸ். அரசரெத்தினம்**

சுகப்பிரசவத்தின் மூலம் பூனைக்கு இரண்டு குட்டிகள் கிடைத்ததை அறியக் கூடியதாக இருந்தது. சின்னவளின் தலைமையில் அன்றைய நாள் முழுவதும் குட்டிகளுக்கு பெயர் தேடிக் கொண்டிருந்தார்கள். எண்சோதிடப் புத்தகம், பஞ்சாங்கம் என்பவற்றை பார்த்ததாகத் தெரியவில்லை. நான் குட்டிகளைப் பார்க்கவில்லை. பார்க்கும் படி என்னை ஒருவரும் அழைக்கவுமில்லை. சரியாக பதினொரு மணிக்கு அம்மா பூனைக்கு கருவாட்டுக் குழம்புடன் பத்தியச் சோறு கொடுத்தாகச் சொன்னார்கள். பத்து நாட்களாக குட்டிப் பூனைக்கு கரைத்த பாலும் பிஸ்கெற் துண்டுகளும் அறையெங்கும் சிந்திக் கிடக்க எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன.

இவற்றுடன் பூனைகளின் திண்ம திரவக் கழிவுகளும் சேர்ந்து றூம் மட்டுமன்றி அந்த வட்டாரம் முழுவதும் விரும்பத்தகாத மணத்தை கொடுத்துக் கொண்டிருந்தன. பூனைக் குட்டிகள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டிருந்தன. அங்கர், பிஸ்கெற், கருவாடு வாங்கியதால் கடைக்கணக் கும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது.

சேர்பிய அரசின் உதவியுடன் கொசோவோ மக்களைத் துன்புறுத்திய அரச படைகளைப் போன்று தாய்ப் பூனையுடன் சேர்ந்து குட்டிப் பூனைகளும் வீட்டைப் பாடாய்ப்படுத்தின. அவற்றின் மனித உரிமை மீறல்களை என்னைப்போல் எல்லோரும் அனுபவித்தபோதும் எதிர்க்குரல் கொடுக்க தயங்கினார்கள். ஆனால், சரியாக நாட்கள் நாற்பது கடந்த நிலையில் வீட்டில் எதிர்பாராத நிகழ்வொன்று நடந்தது. சாப்பாடு மேசைக்குப் பாய்ந்த குட்டிச் சாத்தானொன்று கறிக்கோப்பையைத் தட்டிவிட மனைவி அதற்குச் செம அடி கொடுத்தாள். நல்ல வேளையாக நான் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன். அன்றிலிருந்து அவற்றிற்கு வீட்டில் எதிர்ப்புக் கிளம்பத் தொடங்கியது. அது ஏழரைச் சனியின் ஆரம்பம். பூனைக்கு இடையிடையே திட்டுகளுடன் அடியும் விழுந்தது. ஐக்கிய நாடுகள் சபை அதிகாரியிடமிருந்து அறிக்கைகள் வெளிவருவது போல் மனைவியின் வாயினால் கண்டன வார்த்தைகள் அடிக்கடி வெளிவந்த போதும் நடைமுறையில் எதுவும் நிகழவில்லை.

பூனைக்குட்டியொன்றை எனது கடைக்குட்டியின் வகுப்புத்தோழி சாமினி வளர்க்கக் கேட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்தன. பலத்த வாக்கு வாதத்தின் பின்னர் சாதகமான தீர்மானம் எடுக்கப்பட்டு இரண்டு நாட்களில் நிறைவேற்றப்பட்டது. சவூதிக்கு வேலைக்குப் போகும் ஒரே மகனை வேதனையுடன் பிரியும் தாயைப்போல் பிரியாவிடை கொடுத்து அதனை அனுப்பி வைத்தார்கள். நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. தாயும் மற்றைய குட்டியும் தங்கள் கை (கால்கள்) வரிசையைத் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

வீட்டில் இரண்டு பூனைகள் இருப்பது எனக்குச் சங்கடமாகவே இருந்தது. அந்தப் பூனைக்குட்டியை வேறு எவருமே கேட்கவில்லை. முப்பது வயதாகியும் திருமணம் செய்து கொடுக்காமல் பெண்ணை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோரின் நிலையில் நான் இருந்தேன். இறுதியில் ஒருநாள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டாருக்குத் தெரியாமல் ஒருதலைப்பட்சமாக அந்த முடிவை எடுப்பதற்கு நான் தள்ளப்பட்டேன்.

குட்டிப் பூனையை மீன் சந்தையில் விட்டு விட்டு மனச் சோர்வுடன் வீடு வந்து சேர்ந்தேன். மனைவியிடம் மட்டும் உண்மையைச் சொன்னேன். வேறு யார் மூலமாகவும் அவள் அறிந்து

(22. ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப்புனல்

## அன்னையே நானுன்னை ஆராதிக்கின்றேன்!



அன்னையே
நானுன்னை
ஆராதிக்கின்றேன்!
என்
ஆருயிர்
உடல்சுமந்த
அன்னை நீ!
கண்கண்ட தெய்வம்
கருவறையில் என்னை வைத்து
உருவாக்கி-
கல்லறை வரை என்னை
சொல்லொண்ணாத்
துயரங்கள் சுமந்து வளர்த்து
கல்வி, செல்வம், வீரம் பெற்று
நல்ல இல்லாளை கைப்பிடித்து வாழ
வள்ளலாய் வழிகாட்டிய
அன்னையே
நானுன்னை
ஆராதிக்கின்றேன்!

■ சேனையூரான், மூதூர்கிழக்கு.

## மலரான உனக்கு

காலம் நரைத்தாலும்
கால்கள் கடுத்தாலும்
காத்திருப்பு இனிக்கிறதே
உனக்காக என்பதாலா?

உன்னோடு பேச முனையும் வேளை
இதழ்களில் மொழிகள் உருக்குலைந்து
தொலைந்து விடும் -ஆனால்
உன் கண்கள் மட்டும்
என்னோடு ஆயிரம்
கதை பேசுவது என்ன நியாயம்!

உன்னை விட அழகானவர்கள்
இவ்வுலகில் இல்லாமலில்லை
ஆனால் உன்னை விட
ஒன்றும் அழகாய் தெரிவதில்லையே
என் (மனக்) கண்களுக்கு

உண்மையில் உன் அழகுக்கு
நிகராக இந்த வானின் நீளம்
இந்தக் கடலின் ஆழம்
இந்தக் காற்றில் மிதக்கும் கானம்
இவை எவையும் இல்லை

உன்னைக் காணும் நேரம்
உணர்வுகள் உதயமாகின்றன
உள்ளமது உச்சரிக்கின்றது
என்ன செய்வது
என் நாவு மட்டும்
நங்கூரமிட்டுக் கொள்கிறதே

வானவில்லோடு பேசுகிறேன்
மழைத் துளியோடு
கவியாற்றுகிறேன்
உன் பெயரை மட்டும்
அடி மனதில் உச்சரிக்கின்றேன்
என்ன மாயம் செய்தாய்
என் உயிரே

உன்னைக் காணும்போது
உன் மனதின் வேண்டுக்கோள்
இன்றேனும் பேசுவாயா?

■ வி. டிலக்‌ஷினி, பெரிய கல்லாறு.

## புரியவில்லை

சாலையில் சாகடித்தவன்
அகிம்சை விரதம் செய்து
காந்தியையே தோற்கச்
செய்வாய்
பேச்சுக்கள் வரவேண்டியது
மௌனம் மௌனராக
விரதமானது – ஆனால்,
நீ மட்டும் ஏன்
என் கனவில் அடிக்கடி
வருவது எனக்கு
புரியவில்லை....

■ கி.சஜீவன்,வவுனியா.

## விடியலுக்காக

படிக்க முயல்கிறேன்
துடிக்கிறது கனவுகள்.
புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறேன்
சுத்தமாய் ஒன்றும் தெரியவில்லை.
இருட்டாக இருக்கிறது
இரவு சூழ்ந்திருப்பதால்.
விடியட்டும் படிப்பம்
மூடியகண்கள் திறந்தது
இருளாகத்தான் இருக்கிறது
இன்னும் இரவு தொடர்கிறது.
யன்னல் ஊடாக பார்க்கிறேன்
வெளியே இருட்டில்லை.
வெளிச்சம் நிறைந்திருக்கிறது.
அங்கே போவமா? மனம் நினைக்கிறது
இங்கு கதவு பூட்டியிருக்கே...
இந்த அறைக்குள் இருட்டுத்தான்.
விடிய நேரம் செல்லும்
விளக்கை எத்துகிறேன்
குருட்டு விளக்கு அணைந்து விட்டது
இருட்டு மீண்டும் சூழ்ந்தது.
விடியட்டும் படிப்பம்- மீண்டும்
மூடிய கண்களில் கொஞ்ச நேர
விடியலின் காட்சி.
இனிப்படிப்போம்
இமை திறந்த கண்களில்
இருளைத் தவிர வேறு தெரியவில்லை.
இதுவரை தெரிந்த விடியல்?
ஓ... அது... ஒரு... கனவு!
மீண்டும் யன்னல் வழியாக பார்க்கிறேன்.
உண்மையில் அங்கே விடிந்துவிட்டது.
இங்கே இருட்டுத்தான்
இருளுக்குள் எப்படிப் படிக்க?
விடியட்டும் விடியட்டும்
படிக்கத் துடிக்கும் நெஞ்சம்
கொஞ்சம் சலிப்படைந்து
வஞ்சக இருளை கடிகின்றது.

■ ஜெ. தர்ஷன், கிளிநொச்சி.

## என்றும் மறவேன் தோழா

வாடிப்போன மலராய் நான் இருந்தேன்
புதிதாய் பூத்த மலராய் நீ வந்தாய்
நட்பிற்கு வரைவிலக்கனம் பலரிடம் கேட்டேன்
அதற்கு வரைவிலக்கனம் நீ தந்தாய்
பலரை நான் நண்பர்களாக நினைத்தேன்
ஆனால் நீயோ என்னை உன் நண்பியாக நினைந்தாய்
பல நண்பர்கள் எனக்கு துன்பங்களையே தந்தார்கள்
ஆனால் நீயோ எனக்கு இன்பங்களையே தந்தாய்
பல இன்னல்களை தீர்த்த உன்னை நான் என்றும்
மறவேன் தோழா! அன்புத் தோழா!!!

■ எஸ்.பிரியா, நீர்கொழும்பு.

## நாளை என்ற நம்பிக்கை...

அஸ்த மனங்களில் மூலனில்
உதயம் தானே நம்பிக்கை.
பூஜைக்கு போவோம் என்று அன்று
மலர்ந்த பூக்களின் நம்பிக்கை.
சிந்திடும் வியர்வையில் தொழிலாளியின்...
உயர்வோம் என்ற நம்பிக்கை.
பள்ளி செல்லும் சிறார்களுக்கு ஆசிரியர்கள்
ஒரு ஆதாரமான நம்பிக்கை.

கைத்தட்டல்களின் ஓசையில் தானே
கலைஞனின் நம்பிக்கை.
பரீட்சை எழுதும் பேனாக்களில்
வெற்றி என்ற நம்பிக்கை.
மூச்சு விட்டு முடியும் போது வரும்
காற்றில் வாழ்கின்றோம் என்ற நம்பிக்கை.
பிரிவுகள் வரும் பந்தங்களில் – தொலை தொடர்புகள்
எப்போதும் ஒரு நம்பிக்கை.
நிஜங்கள் இல்லாத வாழ்க்கையில் கனவுகள்
வரும் நம்பிக்கை.
இன்று என்பது ... ... ... ... ...
நாளை என்பதன் நம்பிக்கை.

■ திப்பு கிருஷ்ணப்பிரியா,யாழ்ப்பாணம்.

## ஒரு ஊமையின் ராகம்

என் அழுகையில்...
உன் ஆறுதல்
கலந்திருப்பதால்தான்
அழுது கொண்டிருக்கின்றேன்

முரண்பாடான உன் உதடுகளுள்
ஒரு வார்த்தை மட்டும்
ஆயுட் கைதியாய்
இருப்பதால்தான்...
வாழ்க்கையின் பிடியில் நான்
தூக்கிலிடப்படுகின்றேன்.

நகம் கடித்து ,கடித்து...
என் வாலிபம் தொலைத்தாலும்
உனக்காக பூக்களால்
கோலம் போட்டிருப்பேன்
என் காதல் தேசத்தில்

அடுத்த விடியலிலாவது...
''ஐ ஹேட் யூ'' என பொய் சொல்
மரணமாவது என்னை
நிரந்தரமாய் ஆசுவாசப்படுத்த...

என் கவிதையே...!
நீ ஏன் இன்னும்
கல்லறை பூவாய்...?

■ ஏயார். நவாஸ், அட்டாளைச்சேனை.

## அம்மாவுக்கு....

உனக்காக மடல் எழுத ஆரம்பித்த
போதெல்லாம்... வார்த்தைகளை
கழுவிச்சென்றன கண்ணீர்துளிகள்...
தாயே... தூரத்தும் மரணத்திடம்
மன்றாடி நிற்கிறேன்... ஒரு முறை
உன்முகம் பார்த்துவிடவேண்டுமென்று...
பாவம் ஏதும் செய்யாமலே... நீ இன்றி
தனியே வாழும் தண்டனை எதற்கு?
உன்னை காணும் நம்பிக்கை
துளிகூட இல்லாமல்
கரைந்து போனது.... அம்மா...
உன் கண்ணீரில்
என் கல்லறையாவது நனைய...
காலங்கள் வழிவிடுமா?

■ ஆ.சுதா, புளியங்குளம்.




அன்பனே! —என்
ஆருயிர் நண்பனே!
நீயில்லை என்றாலும் —உன்
நினைவுகள் என்னோடு...

எதிர் நின்று
புதிர் போடும்
முதிர் அல்லவா நீ.
உன் தடம் மீது
வடம் பற்றி
படமாகி விட்டாயே.

உன்னை...
செத்துப் போனதாக
சரித்திரம் பேசாது.
அவரின் மீதிருந்து – நீ
சிரிப்பதாக உணருகிறேன்.

வானவில்லின்
வடிவமெடுத்த புருவமடக்கி,
அழகுரதம் அசைந்தாடும்
அரும்பு மீசைச் சொல்லடக்கி,
கள்ளத்தனமாய் கிள்ளிவிடும்.
பொல்லாத விழியடக்கி,—நீன்
துயில்கின்ற தோழனே!
தேடியும் கிடைக்காத
திரவியம் நீயடா.
மனிதம் மதித்த
மங்களேசு நீயடா
இப்பிறப்பில் என்ன
எப்பிறப்பிலாவது – என்
உடன் பிறப்பாய்
பிறப் பெடுப்பாய்.

■ பண்பாளன்,ஓட்டுசுட்டான்.

உலகமே வியந்து நிற்க உறுதியாய் திரிந்தாயே
உன்னதமான தமிழ் வாழ இதைய பூமியில் பிறந்தாயே
எங்கள் பெரும் மனிதனின் வலக்கரமே
பகைக்கு சிம்ம சொப்பனமானவரே
வீசும் அனல் நெருப்பே!
அன்று சீற்றம் கொண்ட பகைவரை விரட்டிய புயற்காற்றே!
இன்று துயில் கொள்ளும் காரணம்தான் ஏனோ?

அண்ணா உனது குரலில் உள்ளதடா வீரம்.
''வீமா'' என்றாலேயே பகைக்கு வருமடா கலக்கம்!
கொக்காவிலில் பகையை கொட்டம் மடக்கியவரே
மாங்குள மண்ணும் மண்டியிட்டதே உன்னிடத்தில்.
கிளிநொச்சியில் பகையை கிழித்து எறிந்தாயே!
இன்று ஏன் இந்த உறக்கம்?

''வீமா'' குடாரப்பில் நின்று போது குடல் நடுங்கியதையா பகைக்கு
அந்நாளில் நீங்கள் பேர் அடியாகினீரே.
சுனாமி அலை கூட உங்களை அழிக்க அஞ்சியதே!
இன்று உம்மை மாரடைப்பு மடக்கி விட்டதையா...
அல்லும்,பகலும் எம் ஈழம் என்று பேசிய காற்றே
ஏன் இன்று ஓய்ந்து போனதுவோ?

அண்ணலே! உம் பணி தொடரும் எம் இனம்
எம் தலைவன் சொல்லான் ஒரு கணம்
உனது நாமம் இட்டு மீட்போம் தமிழிடம்
இதுவே எமது உயிரிடம்...

■ ஈழத் தமிழன். உ. சஜீவன்.




சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 03

மாணவர் பெயர் : ...........................................................
முகவரி : ...........................................................
பாடசாலை/கல்வி நிலையம் : ...........................................................
மாவட்டம் : ...........................................................
தொலைபேசி இலக்கம் : ...........................................................

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி II

01. 01 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

தெய்வ நினைப்பு வேண்டும் - கிளியே
தேச நினைப்பு வேண்டும்
மெய்மை ஒழுக்கம் வேண்டும் - நெஞ்சில்
வீர உறுதி வேண்டும்.

அன்னை சொற் கேட்கவேண்டும் - தந்தை
ஆணைக்கிணங்க வேண்டும்
தன்னை வணங்கவேண்டும் - பிறர்
தம்மை மதிக்க வேண்டும்.

ஆசிரியர்க் கடங்கி - கிளியே
அறிவை வளர்க்க வேண்டும்
தேசம் வாழும் தொழிலில் - மிக்க
திறமை காட்டவேண்டும்.

1) பாடலில் காணப்படும் உயிருள்ள அஃறிணைப் பொருள் ஒன்று தருக.
...........................................................
2) பகுத்தறிவுள்ள உயர்திணைச்சொல் ஒன்று தருக.
...........................................................
3) தந்தை என்னும் சொல்லின் எதிர்ப்பாற்சொல் ஒன்று தருக.
...........................................................
4) மெய்மை என்பதன் எதிர்ச்சொல் யாது?
...........................................................
5) இடப்பெயர் ஒன்று தருக.
...........................................................
6) அன்னை, தந்தை, ஆசிரியர், தெய்வம் ஆகியோரைக் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.
...........................................................
7) ஆசிரியர் என்பதன் ஒத்தசொல் யாது?
...........................................................
8) "தெய்வநினைப்பு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.
...........................................................
9) "இணங்குதல்" என்பதன் கருத்து யாது?
...........................................................
10) வாழும் தொழில் என்பதனால் கருதப்படுவது யாது?
...........................................................

02. பொருத்தமான சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.
1) செய்யும்/பொன்/மருந்து/என்ற/போதும்/மனமே.
...........................................................
2) செல்வம்/வாழ்வே/குறையற்ற/நோயற்ற.
...........................................................

03. பொருத்தமான சொல்லைவைத்து இடைவெளி நிரப்புக.
1) அம்மா கறிக்கு ........................ இட்டார். (புலி/புளி)
2) நான் ........................ க்குத் திரும்பினேன். (பனி/பணி)

04. பின்வரும் தொடர்புக்கமைய சரியான சொல்லைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.
1) கழுகுக்கு பிள்ளைபோல பனைக்கு ( கன்று/வடலி)
2) கற்களின் கூட்டம் குவியல் என்பதுபோல "ஆ" களின் கூட்டம் (பந்தி/நிரை)

05. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
1) Fam ... ly (y,e,i) 2) Elep ... ant (h,e,a)

06. பின்வரும் உடலுறுப்புக்குப் பொருத்தமான சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) 
...........................
2) 
...........................

07. பின்வரும் உருக்களின் சிங்களப் பெயர்களைத் தமிழில் எழுதுக.
1) 
...........................
2) 
...........................

08. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக.
1) மம தே பொனவா.
...........................................................
2) நந்தா யனவா.
...........................................................

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

09. பூக்களுக்குச் சேதம் விளைவிக்கும் உயிரினம்,
1) அந்துப்பூச்சி. 2) பச்சிலைப்பூச்சி.
3) பாண்டிப்பூச்சி. 4) லேடிபேர்ட்.

10. பின்வருவனவற்றுள் எது பறக்கும் பாலூட்டி,
1)  2)  3)  4) 

11. மகிழ்ச்சியாக இருக்கும்போது கீழ்வாய்ப் பற்களைக் காட்டும் விலங்கு,
1) குதிரை. 2) நாய்.
3) மாடு. 4) மனிதக்குரங்கு

12. ஓரிதழ் மட்டும் உள்ள பூவினம்,
1) நித்தியகல்யாணி. 2) ஐந்தூரியம்.
3) ரோசா. 4) தாமரை.

13. பின்வருவனவற்றுள் மரங்களில் ஒன்று,
1) மிளகாய். 2) ஐதரில்லா. 3) குறிஞ்சா. 4) மா.

14. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது,
1) முதலை. 2) மீன்.
3) திமிங்கிலம். 4) கடற்குதிரை.

15. "ஈசல் பறத்தல்" என்னும் பிராணியின் நடத்தைக்கோலம் காட்டும் வானிலை அறிகுறி,
1) காற்று பலமாக வீசப்போவதை. 2) வெயில் எறிக்கப்போவதை.
3) மழை பெய்யப்போவதை. 4) குளிர்காற்று வீசப்போவதை.

16. வியாபார நிலையத்திலிருந்து பொருட்களை வாங்குபவர்களை எவ்வாறு அழைப்பர்?
1) வியாபாரி. 2) பொதுமக்கள்.
3) நுகர்வோர். 4) மொத்த விற்பனையாளர்.

17. பகலில் கூடும் சந்தை,
1) அல்லங்காடி. 2) நாளங்காடி.
3) பெரும்சந்தை. 4) நாற்சந்தை.

18. இலங்கையின் மாகாணம் ஒன்றிற்குப் பொறுப்பான அதிகாரி,
1) கிராம சேவையாளர். 2) மாவட்ட செயலாளர்.
3) பிரதேச செயலாளர். 4) ஆளுநர்.

19. இலங்கையிலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை,
1) 09 2) 15 3) 25 4) 34



# ஒபாமா வெல்வாரா?

ஜனநாயகக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் மத்தியில், மாற்றம் வேண்டும் குடியரசுக்கட்சி தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு அதிகமாகவுள்ளது.

ஒபாமாவை வெள்ளை மாளிகைக்கு கொண்டு செல்லக் கூடியது இந்த உணர்வே. எனினும், அவருக்கு ஒரு பிரச்சினையுள்ளது.

கறுப்பினத்தவர் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்வதற்கு அமெரிக்கா தயாரில்லை என்கிறார் வெள்ளை இனத்தவரான சுசிக் என்பவர்.

பென்சில்வேனியா வாக்காளர்கள் குறித்த சுசிக்கின் கருத்து உண்மை என்றால் பராக் ஒபாமா கடும் சவாலை சந்திக்கப் போவதை அது புலப்படுத்துகின்றது. கடந்த நான்கு ஜனாதிபதி தேர்தல்களிலும் ஜனநாயகக் கட்சியினரே பென்சில்வேனியாவில் வெற்றி பெற்றுள்ளனர்.

இதே வேளை அந்த மாநிலத்தில் இறுதியாக இடம் பெற்ற இரு ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்களித்த விதம் ஒபாமாவுக்கு கவலையளிப்பதாக உள்ளது.

ஏப்பிரல் 22 இல் அந்த மாநில மக்கள் ஹிலாரி கிளின்டனுக்கே வாக்களித்தனர். இங்கு ஹிலாரி 10 வீத வாக்குகளால் ஒபாமாவை தோற்கடித்தார்.

ஒபாமா ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் குடியரசுக் கட்சியின் ஜோன் மக்கெய்னுக்குகே வாக்களிக்கப்போவதாக ஹிலாரி கிளின்டனின் ஆதரவாளர்களில் நால்வரில் ஒருவர் தெரிவித்துள்ளனர்.

மேலும் 17 வீதமானவர்கள் தாங்கள் வாக்களிக்கப் போவ தில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வாக்காளர்களை கவர்வதற்கான கால அவகாசமும் நிதியும் ஒபாமாவிடம் உள்ளன. சிலரை மனம் மாற்றலாம் என்பதை கருத்துக் கணிப்புகள் புலப்படுத்துகின்றன.

எனினும், ஒபாமா தான் முன்னர் அறிந்திராத களத்தில் குதிக்கின்றார்.

அரசியல் ஆய்வாளர்களிடம் கடந்த கால ஜனாதிபதி தேர்தல் குறித்த புள்ளி விவரங்கள் குவிந்து கிடக்கின்றன. எனினும், எத்தனை வாக்காளர்கள் நிற அடிப்படையில் வாக்களிப்பார்கள் என்பதை அவர்களால் உறுதியாக தெரிவிக்க முடியவில்லை.

இதற்கான விடையே ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கலாம்.

ஒகியோ, மிச்சிகன், புளோரிடா போன்ற அதிகளவு வெள்ளை இனத்தவர்களை கொண்ட பகுதிகள் ஒபாமாவுக்கு சவாலாக அமையலாம்.

வாக்காளர் மனதில் நிற உணர்வுகள் எவ்வளவு தூரம் ஆழமாக பதிந்துள்ளன என்பதை அறிவது கடினமான விடயம். கருத்துக்கணிப்புகளின் போது பலர் இதனை மறைத்து விடுகின்றனர்.

பென்சில்வேனியாவில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் ஒருவர் மாத்திரமே நிற அடிப்படையில் ஒபாமாவை எதிர்ப்பதாகத் தெரிவித்தார். வேறு சிலர் தங்களது அயலவர்கள் நிற அடிப்படையில் அவரை நிராகரிக்கலாம் என்றனர்.

சுசிக் போன்ற சிலர், கறுப்பினத்தவரை ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்வதற்கு அமெரிக்காவுக்கு கால அவகாசம் தேவை என்கின்றனர்.

அமெரிக்கா கறுப்பினத்தவரையோ பெண்ணையோ ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ள தயாரில்லை என தெரிவித்த டக்ரிச்சட்ஸன் (62), ஒபாமா என்னைக் கவரவில்லை. அவரது பெயரின் ஒரு பகுதி என்னை சிந்திக்க வைத்துள்ளது என்றார். அவர் சொன்ன பெயரில் ஒரு பகுதி - ஹுசைன்.

ரிச்சட்ஸன் போன்ற, ஜனநாயகக் கட்சியில் உள்ள ஜோன்மக்கெய்னின் பழமைவாத ஆதரவாளர்கள் குறித்து ஒபாமா அதிகம் கவலை யடையத் தேவையில்லை. எனினும், நீண்ட கால ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களும் ஹிலாரிக்கு ஆதரவளித்தவர்களுமான சிலர் தெரிவிக்கும் கருத்து குறித்து அவர் சந்திக்க வேண்டி இருக்கும். ஹிலாரியின் தீவிர அபிமானிகளான மூன்று நடுத்தரவயது பெண்கள் ஒபாமாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளனர்.

ரஜீவ்

அவர் எங்களைக் கவரவில்லை நிச்சயமாக அதற்கு நிறம் காரணம் என்றார்.

ஒபாமாவின் பிரசாரத்தில் ஈடுபட்டு பல வாக்காளர்களை சந்தித்த ஒருவர் இவர்கள் சொல்லும் காரணங்களை அறிவுரீதியானவையோ அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடியதோ அல்ல என்கிறார்.

பென்சில்வேனியாவில் சிலர் வெளிப்படையாக தமது கருத்தை முன்வைத்துள்ளனர்.

72 வயது ரொபேர்ட் மில்லர் கறுப்பினத்தவர் எவரும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடாத விதத்தில் அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்கிறார்.

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி<br>
'பேனா நண்பர்கள்'<br>
இல.55, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,<br>
கொழும்பு- 14.



# தமிழாசிரியர்

விஞ்ஞானச் சிறுகதை

பல்கலைக்கழகத்தின் பல கட்டடங்களில், ஒரு கட்டடத்தின் பல அறைகளில், ஓர் அறையின் ஒரு பாதியில் இருந்தது என் வகுப்பு. சிறிய அறைதான். மாணவர்களே இல்லாத வகுப்பறைக்கு இதுபோதும் என்று செயற்குழு தீர்மானித்துவிட்டது. நான் ஒரு தமிழாசிரியன். எனக்கு இப்போது முதற்தேவை மாணவர்கள். இந்த ஆண்டும் என் வகுப்பில் மாணவர்கள் சேரவில்லை என்றால் என்வேலை போய்விடும். மூன்று ஆண்டுகள் உபயோகம் இல்லை என்றால் எதையும் நிராகரித்துவிடும் இந்தச் சமுதாயத்தில் நான் தமிழ்சொல்லிக்கொடுக்க விழைந்து சிறுமைப்படுவது என் கருமம் தான்.


'பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்பது தமிழ்மறை.

சுருக்கெழுத்துப்போல் ஆகிவிட்டது. தமிழா இது!

'உனக்குப் புரிகிறதா?' என்பதற்குப் 'புரி?' அவ்வளவுதான்! புரியவில்லை என்பதற்கு "அபுரி". ழகரம் எப்பொழுதோ கரைந்து விட்டது... பழந்தமிழுக்கு அளதமிள்! என்னவொரு சிதைவு!

இந்தப் பிரமாண்டமான அழுக்கான புதிய அலைகளில் நான் ஒருவன் பழந்தமிழ் என்னும் வலிவற்ற தோணியில் தன்னந்தனியாக என்ன செய்ய முடியும்...? பழந்தமிழ்ப் பிரிவைக் பல்கலைக்கழகத்தில் மூடி விடப்போகிறார்கள்...யாராவது மாணவர்கள் வர மாட்டார்களா?

இந்த எண்ணங்களுடன் நான் சிந்தனையில் இருந்தபோது என் அறைக்குள் இருவர் நுழைந்தனர். ஓர் இளம் பெண்ணும் ஆணும். வழிகேட்க வந்தவர்களோ என வியந்து "என் வேண்?" என்றேன்.



இந்த நாட்களில் பிழைக்கப் பல வழிகள் இருக்கையில்... ஏவுகணைகளும் நுண்மின்சார இயலும் பயில எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கும் போது நான் ஏன் பழந்தமிழ் பயின்றேன்?. என் ஆசிரியர் தான் காரணம். அவரை நான் சில நேரங்களில் எரிச்சலுடன், பலநேரங்களில் பக்தியுடன் நினைவுகூர்கிறேன். என் ஆசான் (வித்துவான் நல்லந்தூரவனார்) பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பயின்று வந்த குடும்பத்தில் வந்தவர். நூற்றாண்டுகளின் முன்னேற்றத்தில் அது கடினமாகிக்கொண்டே வந்தாலும் பிடிவாதமாகத் தமிழ்ப்பாடத்தை விடாது வந்த குடும்பம் அது. கடைசியில் என் ஆசிரியர்தான் தம் வித்தையைப் பிறருக்குக் கற்பிக்கமுடியாமல் தவித்தார். அவருக்கு வாரிசு இல்லை. மற்றவர் கவலைப்படவில்லை. தம்முடன் அந்தக் கலை அழிந்துவிடுமே என மிக வருந்தினார். ஊழ்வினையால்தான் நாங்கள் இருவரும் சந்தித்தோம். எனக்குத் தமிழ் என்றால் என்னவென்றே தெரியாது. அவர் தமிழ்க் கடல். நாங்கள் இருவரும் ஒரு வழிச் செலவில் சந்தித்ததைச் சரித்திரம் பேசவேண்டும். விளைவு அவர் தமிழும், தமிழ்பரப்பும் கவலைகளும் எனக்கு...

என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டவர்களின் வரிசை குறுகிக் குறுகி என்னுடன் நின்று விடப்போவது எனக்கு அச்சமாக இருக்கிறது. இந்த நூற்றாண்டில் இப்போது பேசப்படுவதும் தமிழ்தான். தமிழா அது.... பழந்தமிழிலிருந்து இந்த நவீன விபரீதம் எவ்வளவு மாறிவிட்டது. உருத்தெரியாமல் இவர்கள் விஞ்ஞான வேட்கைக்கும் அவசரத்துக்கும் வளைந்து கொடுத்து... இன்றைக்கு உள்ள பல்லாயிரக்கணக்கான தமிழர்களில் ஒருவருக்கேனும் பழந்தமிழ் தெரியாது. பழந்தமிழ் தெரிந்த ஒரே ஒருவன்... இதோ நான் தான்... இன்றைய தமிழை நான் வெறுக்கிறேன். சொற்களெல்லாம் ஓரசை ஈரசைச் சீர்களில் அடங்கி எத்தனையோ மொழிகளின் பாதிப்பை ஏற்றுக்கொண்டு இலக்கணம் மாறி, விகுதிகள் தேய்ந்து ஏதோ ஒரு

என்றேன்.

"அளதமிள் நிவேத்யா?" என்று கேட்டான் அவன்.

"ஆ!" என்றேன்.

"தோன் அளதமிள் புரிவைத்யா?"

"தோன்?"என்றேன் ஆச்சரியத்துடன்.

அந்தப் பெண்ணும் தலையசைத்தாள்.

எனக்கு உற்சாகம் பீறிட்டது. இரண்டுபேரும் பழைய தமிழ்கற்றுக் கொள்ள வந்திருக்கிறார்கள். இரண்டு மாணவர்கள்! தமிழே நீ பிழைக்கப் போகிறாய்.

"கார் பப்லு", "கார் பப்பி" என்று அவர்கள் இருவரையும் உட்காரவைத்தேன். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். உட்கார்ந்தார்கள்.

அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கும். அவனுக்கும் அதே வயதிருக்கும். அவள் நீண்ட புருவங்களின் கீழ் நடனமாடிய கரிய கண்களில் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தைக் கண்டேன். அவளை அருகே அழைத்து ஆசிகூறி அணைத்துக் கொண்டேன். அவனையும் அணைத்துக்கொண்டேன். அவன் கண்களில் கொஞ்சம் குறும்பு தெரிந்தது. சரிப்படுத்திவிடலாம்....

"யாக் தமிள் ஸீக்வந்தா?" என்று கேட்டேன்.

"சும்" என்றான் அவன்.

எனக்கு இந்தப் பதில் பிடிக்கவில்லை. சும்மா தமிழ் கற்றுக்கொள்ள வந்தார்களாம்! நடுவிலே விட்டுவிடுவார்கள்!

"நடு அஸிக் நாகோவா!" என்றேன்.

அந்தப் பெண் தலை ஆட்டி, "இல்த்யா! தோன் சர்ச் லிக் புரிவரேஸிக் த்யா".

"அளதமிள் சர்ச்?"

"ஆ!"

எனக்குத் தெளிவு வந்தது. இருவரும் பழைய தமிழில் எழுதிப் பேசும் வரைக்கும் கற்றுக்கொள்ள விரும்புகிறார்களாம்! அதற்குள் அவர்களை இலக்கியத்தில் ஈடுபடுத்திவிடலாம்...

இருவரும் இந்தக் காலத்து இளைய சமுதாயத்தினர். வேறு எவ்வளவோ

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியம்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளியல் போன்ற பௌதிக கூறுகளால்தான் ஒரு தேசிய இனம் கட்டமைக்கப்படுகின்றது. வெறும் அகநிலை விருப்பங்களாலோ கற்பிதல்களாலோ அல்ல! மேற்கூறிய பௌதிகக் கூறுகள் ஓர் அகநிலையை உண்டாக்குகின்றன. அதுதான் 'நாம்', 'நம்மவர்' என்கின்ற உணர்வு!- இவ்வாறு தமிழ்த்தேசியப் பொதுவுடமைக் கட்சியின் பெ.மணியரசன் விளக்கமளிப்பார்.

அதாவது உணர்விலிருந்து தமிழ்த்தேசியம் உருவாகவில்லை தமிழத் தேசியத்திலிருந்துதான் உணர்வு உருவாகின்றது.

அன்புக்குரிய வாசகர்களே!

தமிழ்த் தேசியம் என்பது குறித்து இவ்வேளையில் நாம் தர்க்கித்ததற்கு முக்கியமான அடிப்படைக் காரணங்கள் உண்டு. உலகெல்லாம் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாம், ஒத்த உணர்வுகளால் ஒருமைப்படுவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ்த் தேசியம்தான். இந்த உணர்வுகள் நமக்கு பொதுவாக இருப்பதற்குக் காரணம், நம்மெல்லோருக்கும் பொதுவாக தமிழ்த்தேசியம் கட்டமைக்கப்பட்டு இருப்பதுதான்.

இதே தர்க்கம் எமது தமிழீழத் தேசி யத் தலைமைக்கும் பொருந்தும். தமிழீழத் தேசியத் தலைமை,வெறும் கற்பிதத் தால் கட்டமைக்கப்பட வில்லை. அது நாம் மேற்கூறிய கூறுகளால் கட்டமைக் கப்பட்டுள்ளது. அது கிடைத்தற்கரிய தலைமையாகவும் அமைந்துள்ள அற்புதத்தைத்தான எம்மால் விளக்கமுடியாமல் இருக்கிறது.

ஆகவே, புலம்பெயர்ந்துள்ள நாம் இயல்பாகவே தமிழ்த் தேசிய இனம் என்ற கட்டமைப்பில் இருக்கின்றோம். அந்தத் தேசிய இனத்தின் விடுதலைக் காகப் போராடுகின்ற, தேசியத் தலைமையின் வழிநடத்தலின் ஊடாக, எமது தேசியத்திற்கான கடமையை இயல்பாகவே செய்கின்றோம். எமது தார்மீகக் கடமையை நாம் முற்றே அறிவோம். அதன் அவசியம் குறித்தும் நாம் நன்கு அறிவோம். அதன் முக்கியத்துவம் குறித்தும் நாம் நனகு அறிவோம்.

ஆனால், ஒரே ஒரு விடயத்தை மட்டும்தான் நாம் நனறாக அறிந்திருக்கவில்லை என்ற ஐயம் எனக்கு உண்டு. அந்த விடயம் மிக முக்கியமான விடயமாகும்.

இவ்வளவு கடமைகளையும் அறிந்து, புரிந்து அதற்கேற்ப செயலாற்றுகின்ற எமது சர்வதேச தமிழ்ச்சமூகம் ஒன்றை மட்டும் சரியாகப் புரிந்துவைக்கவில்லை. சர்வதேச தமிழ்ச்சமூகம் சரியாகப் புரிந்துகொள்ளாத விடயம் தன்னுடைய வலிமையைக் குறித்துத்தான்.

புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழீழ மக்கள் சமூகம், இதுவரை காலமும் தம்மின மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றிவந்துள்ள பணி அளப்பரியது என்று நாம் முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் ஒருங்கிணைப்பின் ஊடே மேற்கொள்ளப்பட்ட இச்செயற் பாடுகள் காரணமாகவும் தமிழீழ தேசியத்தலைமை காரணமாகவும் தமிழீழ தேசத்தின் மாவீரர்கள் காரணமாகவும் தமிழ்த்தேசியம் தனது சுயத்தை இழக்காமல் எததனையோ சோதனைகளுக்கு முகம்கொடுத்துப் போராடி வென்றது.

ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட மிகப் பாரிய இராணுவ நடவடிக்கையான 'சூரியக்கதிர்' காரணமாக ஓர் இரவிலேயே ஐந்துலட்சம் தமிழ்மக்கள் வரலாற்று ரீதியாக முதல்முறையாக யாழ்.குடாநாட்டை விட்டு அகதிகளாக வெளியேறியபோது, எந்த ஓர் உலகநாடும் திரும்பிக்கூட பார்க்கவில்லை. எந்த ஒரு மனிதாபிமான உதவிகளையும் செய்வதற்கும் உலகநாடுகள் முன்வரவில்லை. எமது மக்களின் அவலத்தை உலக மக்களின் கவனத்திற்கு முன் முழுமையாக வெளிக்கொண்டு வருவதற்கு எந்தச் சர்வதேச ஊடகமும் முன்வரவில்லை.

'யாப்ப பட்டுன' - நேரம் அது!

ஆயினும், புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்கள் துடித்து எழுந்தார்கள். தமிழ்த்தேசியக் கட்டமைப்பின் ஊடே வெளிப்பட்ட தேசிய உணர்வு காரணமாக, புலம்பெயர்ந்தோர் ஆற்றிய தேசியக்கடமை எமது மக்களுக்கு அருமருந்தாயிற்று. புலம் பெயர்ந்தவர்கள் ஆற்றிய மிகப்பெரிய பணி அது. எந்த உலக நாடுகளையும் நம்பியிருக்காமல் தமிழ்மக்கள் தமது பங்களிப்பினை உணர்வுபூர்வமாக அளித்தார்கள். புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள், தங்களது பலத்தை உணராமலேயே பங்களித்த விடயம் அது.

அடிக்குமேல் அடியாக 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்து தமிழ்த் தேசியத் தையே முற்றாக வேர் அறுக்க முனைந்தது. தமிழ்த்தேசியத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட சோதனைகள் அனைத் தையும் தன்தோளில் தாங்கிக்கொண்ட அந்த தேசியத் தலைவனுக்கும் அவன் பின்னால் அணிவகுத்து நின்ற போராளிகளுக் கும் அன்றைய தினம் பக்கபலமாக நின்ற காரணிகளில் முக்கிய சக்தி எது? அது எமது புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்களின் சக்தி அல்லவா?

'சமாதானத்திற்கான காலம்' என்று சொல்லப்பட்ட காலகட்டத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஊடாக தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஏதும் கிட்டவில்லை. அது மட்டுமல்லாது 'சமாதானத்திற்கான காலம்' தரக்கூடிய எந்த ஒரு நிரந்தர பலனையும் தமிழீழ மக்கள் பெறவில்லை! தமிழ்மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. இதற்கான தமிழீழ அதிகார சபைக்குரிய ஆலோசனை வரைவையும் ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. உலகநாடுகள் தருவதாக வாக்களித்த எந்த ஒரு நிதி உதவியும் வந்து சேரவில்லை.

ஆயினும் புலம்பெயர்ந்த தமிழீழமக்கள் சோர்ந்துபோய் விடவில்லையே? எந்த ஓர் உலக நாட்டையும் நம்பியிராது, கடந்த சமாதானத்திற்கான காலம் என்று சொல்லப்பட்ட காலகட்டத்தின்போது தமிழீழத் தேசத்தின் கட்டுமானத் திற்கான நிதியுதவிகளையும் தொழில்சார் நிபுணத்துவ உதவிகளையும் வழங்கி னார்களே! இன்னமும் வழங்கி வருகின் றார்களே! அன்றைய தினம் தமிழீழத் தில் பணி புரிந்த புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்கள் தான் எத்தனை எத்தனை பேர்! அது எத்துணைப் பேருதவி! தமது வலிமை குறித்து முழுமையாக அறியாதபோதி லும் தமிழ்த் தேசியத்திற்காகத் தமது வலிமை யைப் புலம்பெயர்ந்த தமிழீழத தவர்கள் உபயோகித்த காலம் அல்லவா அது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட வராத ஆழிப்பேரலை தமிழீழக் கரையோரப் பகுதிகளைத் தாக்கி மக்*

(24ஆம் பக்கம் பார்க்க)

---

## மியாவ்...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் ஏற்படப் போகும் விபரீத விளைவுகளுக்கஞ்சியே அவ்வாறு செய்தேன். எதிர்பார்ப்பை விட எதிர்ப்புகள் வீட்டில் குறைவாகவே இருந்தன. இரு குட்டிகளில் ஒன்று பணக்கார வீட்டில் செல்லமாக வளர, மற்றையது அநாதையைப்போல் தெருவில் விடப்பட்டது குறித்து மனைவி மட்டும் மனம் வெதும்பினாள். எனது சிந்தனை எதிர்மாறாக இருந்தது. ஒன்று ஆயுட்கைதியாக அடிமை நிலையிலும் மற்றையது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் உயர் நிலையிலும் வாழ்வதாகவே எனக்குப் பட்டது. நான் இவற்றைப் பற்றி மூச்சுக் கூட விடவில்லை. அடிமை வாழ்விலும் படாடோப வாழ்வை விரும்பும் பெண்களுக்கு இது விளங்கப் போவதில்லை.

மூத்த மகன் கொழும்பிலிருந்து விடு முறைக்கு வந்திருந்தான். அவனைக் கண்டதும் சாப்பாடு சரியில்லாமல் எலும்பும் தோலுமாகப் போய்விட்டானென்று வீட்டில் கோரஸ் பாடினார்கள். குத்துச்சண்டை வீரன் மைக் டைசனின் தாயாரும் சில மாதங்கள் கழித்து மகனைக் கண்டால் இதனைத்தான் சொல்வாள்போலும். எனது பார்வையில் அவன் நெடுத்திருந்தான். மற்றப்படி மாற்றமே தெரியவில்லை. ஆனால், 'மார்க் கட்டுக்கு' என்னை அனுப்புவதற்கான மறைமுகத்திட்டத் தின் வெளிப்பாடே இந்த உரையாடல். 'சொல் லாமல் செய்வர் பெரியர்' என்ற நினைப்பில் கூடையைக் தூக்கிக் கொண்டு பெரிய மீன் வாங்கிவர மோட்டார் சைக்கிளை உதைத்தேன். அந்த நேரம் பார்த்து வீதிக்கு குறுக்கே தாய்ப் பூனை ஓடித் தொலைத்தது.

சந்தை சனக்கூட்டமாக இருந்தது. மதிலோ ரத்தில் பூனைகளின் கூட்டமும் இருந்தது. அவை தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கழிக்கப்பட்ட மீனின் உற்பகுதிகள் சண்டைக்குகாரணமாக இருக்கலாம். அதில் ஒரு கறுப்புப் பூனை சண்டையை நிறுத்தி விட்டு என்னையே உற்றுப் பார்த்தது. சந்தேக மில்லை, அது எங்கள் வீட்டுப்பூனைதான். "உன்னுடைய பிள்ளைகளை நன்றாக வளர்த்துக்கொள், எங்களை தெருவில் சீரழிய விட்டுவிடு" என்பது போல் அதன் பார்வை இருந்தது.எனது மனம் பதட்டப்பட ஆரம்பித்தது. அது என்னைப் பழிவாங்க இரண்டு வாரங்களாக காத்திருக்கக்கூடும். அதன் பின்னர் அதிக நேரம் நான் அவ்விடத்தில் நிற்கவில்லை. மரக்கறிகளோடு அன்றைய தினம் மகனின் சாப்பாடு முடிந்தது.

இரவு வெகு நேரமாகியும் நித்திரை வராது புரண்டு படுத்தேன். பூனை சாபம் போடுமோ தெரியாது. நல்ல பாம்பு சாபம் போடுமென்று சிறுவயதில் பாட்டி சொல்ல கேட்டிருக்கிறேன். அம்மாவும் அப்பாவும் தங்கள் குட்டிகளை வளர்ப்பதற்கு எவ்வளவு திட்டம் போட்டிருப்பார்கள். நன்றாக எலிகளைப் பிடிக்கப் பழக்கி பூனைச் சமுதாயத்தில் பெரிய இ[illegible]த்திற்கு தங்கள் குட்டிகள் வரு வதை விரும்பியிருப்பார் கள். அவர்களின் திட்டம் சீரழிய நான் காரண மானேன். முன்னர் ஒரு போதும் நான் இவ்வா றான பாவச் செயல்களை செய்தவனல்ல. வயிற்றுப்பசிக்கு சாப்பாடு திருடியவனுக்கு மரண தண்டனை வழங்கிய நீதிபதியின் ஆச னத்தைப் போல் கட்டில் முட்படுகையானது. இனிச் செய்ய வேண்டியது பிராயச்சித்தம் மட்டுமே. சிந்தனை நீண்டு செல்ல மணி தெரியாத நேரத்தில் நான் உறங்கிப் போனான்.

வெளியே வழமைக்கு மாறாக சத்தம் கேட்க எழும்பி லைற்றைப் போட்டேன். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. முற்றத்தில் மியாவ், மியாவ் சத்தம். இளவட்டங்களிடையே எங்கள் பூனை; எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. இரண்டாவது பிரசவத்திற்கு இன்[illegible] ஸ்டோர் றூம் தயாராகப் போகின்றது. ஆனா[illegible] பிறக்கப்போகும் குட்டிகள் விடயத்தில் நான் தலையிடப்போவ தில்லை.மீன் சந்தைக்கு இனி மீன் வாங்க மட்டுமே நான் போவேன்

---

## தமிழா...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியப்புகள் இந்த விஞ்ஞான யுகத்தில் அவர்களுக்கு இருந்தும் அவர்கள் ஆர்வமாகவே பயின்றார்கள். தினம் தவறாமல் வகுப்புக்கு வந்தார்கள். சற்று வேகமாகவே கற்றுக்கொள் ளும் ஆசை இருந்தது அவர்களுக்கு. வகுப்பு நடந்த ஒருமணிநேரம் முழுவதும் பழந்தமிழில் தான் பேசவேண்டும் என்று கட்டாயப்படுத்தி னேன். விநோதமான விளைவுகள்.

"உன் பெயர் என்ன சொல்லு" என்று கேட்டேன்.

"நித்யா".

"உன் பெயர் சொல்லக்கூடாது நித்யா. உன் பெயர் என்ன என்ற வாக்கியத்தைச் சொல்லு"..

"அபுரி!"

"அபுரி என்று சொல்லக்கூடாது. எனக்குப் புரியவில்லை என்று சொல்லவேண்டும்".

"அபுரி!"

நான் தலையில் அடித்துக்கொண்டு, "ஆத்மா, நீ இங்கு வா. நீ நித்யாவைக் கேள், 'உன் பெயர் என்ன?' என்று".

"ஆத்மா"

"அப்படி இல்லை. 'பெண்ணே உன் பெயர் என்ன?' சொல், பார்க்கலாம்?"

"பெண்ணே ஆத்மா".

"இன்றைக்குப் பாடம் போதும்"

இருந்தும் அவர்களிடம் கற்றுக்கொள்ளும் விருப்பம் இருந்ததால், ஆவல் இருந்ததால் அவர்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டி ருந்தார்கள்... பல்கலைக்கழக முதல்வரிடம் நான் பெருமையுடன் இரண்டு மாணவர்கள் சேர்ந்ததைச் சொல்லிக்கொண்டேன். அவர் இந்த ஆண்டு நான் தப்பித்ததைச் சொன்னார். "சமயம் இருந்தால் ஒருமுறை வகுப்புக்கு வந்து பார்க்கிறேன்" என்றார். முதல்வரின் நீண்டநாள் ஆசைகளில் ஒன்று பழந்தமிழ் கற்றுக்கொள்வது. சமயமில்லை...

உலக ஒற்றுமை விழாவில் எல்லாரும் கோலா கலங்களில் ஆழ்ந்து சோமம் பருகி முட் டாள்தன மான 'ஸ்டீரியோவிஷன்' என்று சொல்லப் பட்ட கேளிக்கைகளில் ஆழ்ந்த தினத் திலும் அவ்விருவரும் தமிழ்ப்பாடம் கற்றுக் கொள்ள வந்தது எனக்கு வியப்பும் ஆனந்தமும் கண்ணீரும் தந்தது. "என் செல்வங்களா! உங்கள் மூலம் கன்னித்தமிழ் மறுபடியும் உயிர் பெறுகிறாள். நீங்கள் என்னிடம் பயின்றுசென்று இன்னும் இன் னும் தமிழ்பரப்புங்கள். என் காலத்துக்குப் பின் இந்த வெட்டப்பட்ட மரம் மறுபடியும் விதைகள் பரப்பிச் செழித்துக்கொழிக்க வழிஅமையுங்கள்".

"அபுரி" என்றார்கள்.

இருந்தும் அவர்களின் 'அபுரி'க்கள் குறைந்து கொண்டே வந்தன. இருவரும் சாதாரணமான தினசரி உரையாடல்களைத் தமிழில் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். உச்சரிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்திவந்தது.

"நித்யா நீ இன்று நலமா?"

"நலம் ஆத்மா...நம் ஆசிரியர் நலமா எனக் கேட்கலாமா?"

இருவரும்: "ஆசிரியரே நலமா?"

"நலம். என் தமிழ்ச் செல்வங்களே, நலம்!"

"இன்றைய பாடம் என்ன?"

"வியங்கோள் வினைமுற்று...

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்".

"இரந்தும் என்றால் என்ன ஆசிரியரே?"

"பிச்சை எடுத்தல். இருபதாம் நூற்றாண்டு வரை மக்களில் பலர் பிச்சை எடுத்து வாழவேண்டி யிருந்தது. அந்தச் சமுதாயத்தை அமைத்த இறைவன் நாசமாகிவிடட்டும் என்று கூறுகிறார் வள்ளுவர்"

"இறைவன் என்றால் யார்?"

"உலகைப் படைத்தவன்!"

"உலகை ஒருவன் படைத்தானா?"

"அப்படித்தான் நாம் இன்றும் நம்பவேண்டும்."

"உலகியற்றியான் என்று ஏன் சொல்ல வேண்டும்?"

"உலகியற்றியாள் என்று ஏன் சொல்ல வில்லை?" என்றாள் நித்யா.

"அந்தக் காலத்தில் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நம்பினார்கள்..."

"என் மோச, என்றை மோச!"

"நித்யா புதுத் தமிழில் பேசக்கூடாது என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன்".

"மன்னிக்கவேண்டும், ஆசிரியரே!"

பல்கலைக்கழக முதல்வர் எங்கள் வகுப்புக்கு வருவதாக இருந்த அன்றிலிருந்து அந்த விபரீதம் தொடங்கியது.

முதல்வர் வரப்போகிறார் என்று அவர்களை அரைமணி முன்னதாகவே வகுப்புக்குவரச்சொல்லி யிருந்தேன். அவர்கள் வரவில்லை. எனக்குச் சற்று வேதனையாக இருந்தது. முதல்வர் வந்த போது மாணவர்கள் வரவில்லை என்றால் என்ன நினைப்பார்? அவர்களைத் தொலைப்படம் மூலம் தொடர்புகொள்ள நினைத்து முதல்தடவையாக அவர்கள் கொடுத்திருந்த எண்களைத் தொட்டேன். அப்படிப் பெயர்கொண்ட எவரும் அந்த விடுதி யில் இல்லையாம்! எனக்கு வியப்பாக இருந்தது. எதற்காக என்னிடம் பொய் எண்[illegible]களைக் கொடுத் திருக்கிறார்கள்? நடுவ[illegible]ல் ஏதாவது அவசரவேலை இருந்திருக்கலாம். வந்துவிடுவார்கள். முதல்வர் வருவதற்குள் வந்து சேர்ந்துவிடுவார்கள்... என்று எண்ணிக்கொண்டிருந்தபோது வகுப்பறையின் கதவு திறந்து பல்கலைக்கழக முதல்வர் நுழைந் தார். காலியான அறையைப் பார்த்தார். புன்னகை யுடன், "மாணவர்கள் எங்கே?" என்றார்.

"இதோ வந்துவிடுவார்கள். வருகிற சமயம் தான்" என்றேன். அவர் பொறுமையுடன் "வந்த வுடன் எனக்குத் தகவல் தெரிவிப்பாய்" என்று சொல்லிச் சென்றார்.

நான் காத்திருந்தேன். அன்று அவர்கள் வரவில்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள் என எனக்குத் தெரியாது... எப்படி அவர்களுடன் தொடர்பு கொள்வது? அவர்கள்மேல் எனக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது. நாளை வரட்டும்!

மறுதினம் வந்தது. அவர்கள் வரவில்லை.

மறுதினம் மறுதினம் மறுதினம். ஒருவாரம். ஒரு திங்கள். அரை ஆண்டு. அவர்கள் வரவே யில்லை. முதல்வர் மூன்று நான்கு தடவை விசாரித்தார். அதன்பின் ஒருதினம் தன் அறைக்கு வருமாறு என்னை அழைத்தார்.

பயந்தகொண்டே சென்றேன். என் மாண வர்கள் எங்கே என்றார். நான் அவர்கள் வகுப் புக்கு வருவதை நிறுத்திவிட்டதைச் சொன் னேன். அவர்கள் காட்டிய ஆரம்ப ஆர்வத்தை யும் சடுதியில் அவர்கள் அடைந்த முன்னேற்றத் தையும் சொன்னேன். அவர் கண்களில் நம்பிக்கை இல்லை. ஏன் அவர்கள் வரவில்லை என அவர்களுடன் தொடர்புகொண்டு கண்டு பிடிக்கச் சொன்னார். அந்த முயற்சிகளைப் பற்றியும் அவர்கள் தந்த பொய் அடையாள எண்ணையும் சொன்னேன். அப்போது அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

'நான் ஆதியிலிருந்தே பொய் சொல்லி யிருக்கிறேன். தமிழ்வகுப்பை இந்த ஆண்டு மூடிவிடாமல் இருப்பதற்காகச் சாகசம் செய் கிறேன்' இப்படித்தான் அவர் கருதியிருப்பார். 'இன்னும் ஏழு தினங்களுக்குள் அவர்களை என்முன் கொண்டுவந்து நிறுத்தாவிட்டால் வகுப்பு மூடப்படும்...' என்றார். எனக்கு என்ன கவலை? வகுப்பு மூடி விட்டாலும் அரசாங்கம் என் பிழைப்பை எப்படியும் கவனித்துக்கொள் ளும். வேறு வேலை தரும்... "பழைய தமிழ்ப் பாடல்களை எதிர்காலத்துக்காக நாடாவில் பதித் துக் கம்ப்யூட்டர் மொழியில் சுருக்கி அதை ஒரு சதுர மில்லிமீட்டர் சி.டிக்குள் அடக்கிவிடலாம் என்று எத்தனை முறை நான் உன்னிடம் சொல்லி யிருக்கிறேன். உன் வித்தை செத்துவிடும் என்று ஏன பயப்படுகிறாய்? ஏன் பொய் சொல்கிறாய்?" என்றார்.

ஒருவாரத்தில் அவர்களை அவர் முன் கொணர்ந்து நிறுத்துவதாக வாக்களித்தேன்.

நான் இந்த மகத்தான நகரில்...இந்த விஞ் ஞான சொர்க்கத்தில் என் இரண்டு மாணவர் களைத் தேடப்போயிருந்தேன். பெயர் ஆத்மா, நித்யா! அதுவும் உண்மைப் பெயரோ என்னமோ! ஏன் என்னிடம் பொய் சொல்லியிருக்கிறார்கள்... ஏன் வந்த தடத்தை அழித்திருக்கிறார்கள்.

இளைஞர்கள் கூடும் இடமெல்லாம் தேடி னேன். விண்வெளிப் பயண அலுவலகங்களில், கம்ப்யூட்டர் விளையாட்டு அரங்கங்களில், வெள்ளிக் கிழமை கூடும் இளைஞர் சந்தை களில்... ராக்கெட் பயண நிலையங்களில், இரவின்

(27ஆம் பக்கம் பார்க்க)





# கற்பனைக்கே சிரமமானதென அண்ணா ஏக்கத்துடன் அன்று சொன்ன ஓர் அதிசயம்!

வெள்ளை மாளிகை பெருமைக்குரிய 'கறுப்பு' மாளிகை ஆவதற்கான வரலாற்று அறிகுறிகள் இப்போது தென்பட ஆரம்பித்திருக்கின்றன.

அமெரிக்க அதிபர் பதவிக்கான ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பாரக் ஒபாமா தேர்வு பெற்றுள்ளார். அதிபர் தேர்தலில் போட்டியிடும் முதல் கறுப்பு இனத் தலைவர் என்ற பெருமையைப் பெற்று உலகத்தையே தன் பக்கம் திருப்பிருக்கிறார் ஒபாமா.

வரும் நவம்பர் நான்காம் திகதி நடக்க இருக்கும் அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ஜோன் மெக்கைன் போட்டியிடும் நிலையில், இவரை எதிர்க்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் ஒபாமா. இல்லினாய் மாகாண செனட்டரான ஒபாமா, முன்னாள் அமெரிக்க அதிபர் கிளின்டனின் மனைவி ஹிலாரியை பின்னுக்குத் தள்ளி அவரைவிட நூற்றுக்கும் அதிகமான வாக்குகளை கூடுதலாகப் பெற்று வேட்பாளராகி சரித்திரம் படைத்திருக்கிறார்.

இந்த சாதனைச் சரித்திரத்தை தமிழ் மக்களுக்கு தெரிவிக்க ஒரு புத்தகத்தை எழுதி முடித்திருக்கிறார் ம.தி.மு.க.தலைவர் வைகோ.

தனது அமெரிக்க நண்பர்கள், பேராசிரியர்கள் மூலமாக ஒபாமாவைப் பற்றிய தகவல்களை சேகரித்து நான்கு நாட்களிலேயே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார் வைகோ.

'நம்மால் முடியும்' என பெயரிடப்பட்டிருக்கும் அந்தப் புத்தகம் பற்றி வைகோ தெரிவித்திருப்பதாவது:-

*''நினைத்துக்கூடப் பார்க்க இயலாத அதிசயம் ஒன்று அமெரிக்க அரசியல் களத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.*

*சூரியன் மேற்கில் உதிக்கிறான், வடதுருவமும் தென்துருவமும் தழுவிச் சங்கமிக்கின்றன, எருக்கலஞ்செடியில் முல்லை பூக்கிறது, கடல்நீர் தித்திக்கிறது. இயற்கையைக் கூட நம்புவோம் ஆனால், வெள்ளை மாளிகையில் அதிபர் நாற்காலியில், ஒரு கறுப்பு மனிதனா...கனவிலும் நடவாது எனத்தான் கூறியிருப்போம். ஆனால், அந்த அரசியல் அதிசயம் உண்மையாகிக் கொண்டிருக்கிறது-ஒபாமா வடிவத்தில்!*

*சில மாதங்களுக்கு முன்பு, அமெரிக்க ஊடகங்களில்- ஏடுகளில் பரபரப்பாக இடம்பெற்ற ஒபாமாவின் தொலைக்காட்சிப் பேச்சைக் கேட்ட நான் அவரது பற்றாளனாகிவிட்டேன். 'ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இந்தியாவின் போர்பந்தரில் பிறந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான் என்னை ஊக்குவிக்கும் மாமனிதர்' என்கிறார் ஒபாமா. ஒபாமாவின் சிந்தனை எல்லை கடந்தது, ஆகாயம் நிகர்த்தது என்பதற்கு இது சரியான எடுத்துக்காட்டு. காந்தியின் படத்தை தனது செனட்டர் அலுவலகத்தில் மாட்டியிருக்கிறார் ஒபாமா.*

*இருண்ட ஆபிரிக்கக் கண்டத்தின், கென்ய நாட்டு கறுப்பு நீக்ரோவின் மகன்தான் பாரக் ஒபாமா. பராக் என்ற சொல்லின் எபிரேய வேர்ச்சொல்லுக்கு 'ஆசீர்வதிக்கப்பட்டவன்' என்று பொருள்.*

*வெள்ளை மாளிகையில் கறுப்பரா என்ற கேள்வி உலக உதட்டில் எழக் காரணம் உண்டு. பிலடெல்பியாவில் செய்யப்பட்ட அமெரிக்க சுதந்திர பிரகடனத்தில், 'அனைத்து மனிதர்களும் சமம்' என்ற கோட்பாட்டை வெளியிட்டார்கள். ஆனால், மனிதர்கள் என்பதற்கான இலக்கணத்தில் கறுப்பர்கள் இணைக்கப்படவே இல்லை.*

*1967- ஆம் வருட பொதுத் தேர்தலுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழு பலத்தோடு ஆயத்தமாகிக் கொண்டு இருந்த நேரம். தேர்தல் வியூகங்கள் பற்றி அண்ணா என்ன எழுதப் போகிறார் என்று தம்பிமார்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அண்ணா எழுதியதோ 'வெள்ளை மாளிகையிலே' எனும் தலைப்பிலான கடிதங்கள் தான்.*

*இன்று அமெரிக்காவில் என்ன நடப்பதற்கான வாய்ப்பு மலர்ந்திருக்கிறதோ...அதை அண்ணா அன்றே கனவு கண்டார். இர்விங் வாலஸ் என்ற ஒரு நாவல் ஆசிரியர் எழுதிய 'தி மேன்' என்ற தலைப்பிட்ட கதையில் வரும் கற்பனைச் சம்பவங்களை அண்ணா தன் கடிதத்தில் சொல்லியிருந்தார். அதில் ஒரு மடலில், 'தம்பி, வெள்ளை மாளிகை சென்றிடலாம் வருகிறாயா? அமெரிக்க அதிபர் வீற்றிருக்கும் மாளிகைக்கு வெள்ளை மாளிகை என்று பெயர் இருப்பதாலேயே மாநிறக்காரர் நுழையக்கூடாதா என்ன? நான் உன்னைக் காண அழைக்கும் வெள்ளை மாளிகையில் ஒரு கறுப்பு மனிதர் அரசோச்சுகிறார். ஆம் தம்பி... வெள்ளை மாளிகையில் ஒரு கறுப்பு மனிதரை அதிபராக அமரச் செய்து பார்க்கிறார், எழுத்தாளர் இர்விங் வாலஸ். கறுப்பு மனிதரை அதிபராக அமரும்படி தம் கற்பனைக்கு கட்டளையிட்டாரே தவிர, அவருக்கேகூட, அதிக தூரம் கற்பனையை ஓடவிட முடியவில்லை. நம்பவே முடியாதது இது என்று படித்திடுவோர் கருதிவிடக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டுக்கிறது. அதனால், அமெரிக்க மக்கள் நிறபேதம் பார்க்காமல் ஒரு கறுப்பரை குடியரசுக் தலைவராக தேர்தெடுத்தார்கள் என்று தனது கற்பனைக் கதையில் அவர் எழுதவில்லை. எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால் ஒரு கறுப்பர் வெள்ளை மாளிகையில் குடியரசுத் தலைவராக அமர வேண்டிய நிலை ஏற்பட்டது என்ற அளவிலேயே தமது கற்பனையை நிறுத்தியிருக்கிறார்' என்பதாகச் செல்கிறது அண்ணாவின் மடல்.*

*'கற்பனைக்கே சிரமமானது' என்று அறிஞர் அண்ணா ஏக்கத்துடன் சொன்ன ஒரு அதிசயம், இன்று உண்மையிலேயே அமெரிக்காவில் அரங்கேறுவதற்கான காட்சிகள் தெரிவது, வெள்ளை மாளிகை மணி மகுடத்தில் ஒரு கறுப்பு வைரம் ஒளிவீசும் நிலை மலர்வது, நம் சிந்தனைச் சமவெளியில் பாயும் தேனாறு. அதையொட்டியே நான் ஒபாமா பற்றிய நூலை உற்சாகத்தோடு எழுதி முடிந்திருக்கிறேன்.'' என்று சிலிர்க்கிறார் வைகோ.*

**ஒபாமாவின் சாதனை**

அமெரிக்க கறுப்பு இன மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த ஆபிரஹாம் லிங்கன் மற்றும் மார்டீட்டின் லூதர் கிங் (ஜூனியர்) ஆகியோரால்கூட சாதிக்க முடியாததைச் சாதித்திருக்கிறார் பாரக் ஒபாமா. 47 வயதான கறுப்பர் இனத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண சமூகநலத் தொண்டரான பாரக் ஒபாமா ஹூசேன், படிப்படியாக வளர்ந்து இன்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர். நான் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் என்ற பரிதாபப் பிரசாரம் இல்லை. இட ஒதுக்கீட்டில் இடம்பிடித்த தந்திரமும் இல்லை. சாமானிய அமெரிக்கர்களின் பிரச்சினைகளான சம்பள உயர்வு, மருத்துவச் செலவு, கல்விவசதி போன்றவற்றை மேம்படுத்துவேன் என்ற பிரசாரத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக ஒபாமா தேர்வானதுதான் ஸ்பெஷல்!

ஐந்து வருடங்களாக நடைபெறும் ஈராக் போர் அமெரிக்கர்களிடையே பெரும் சலிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஆரம்பத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு, கௌரவம், தீவிரவாத எதிர்ப்பு எனச் சொல்லப்பட்ட காரணங்களால் போரை ஏற்றுக்கொண்டவர்கள்கூட, போகப் போகக் கிடைத்த வலியால் முனங்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், ஆளும் குடியரசுக் கட்சியினர் ஈராக் போரை நியாயப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். 'இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்!' என்ற ஒரு வரிக் குரலில் ஒட்டுமொத்தமாக மக்களின் நம்பிக்கையைக் குறிப்பாக இளைஞர்களின் ஆதரவை தன் வசமாக்கி இருக்கிறார் ஒபாமா.

''அமெரிக்கா முழுவதும்மாற்றம் வேண்டும். போரில் இருந்து, துயரத்தில் இருந்து, குறைவான மருந்துவ வசதியில் இருந்து, குறைந்த கூலியில் இருந்து... அனைத்திலும் மாற்றங்கள் வேண்டும். இந்த மாற்றங்களை நான் கொண்டுவரப் போவதில்லை. நீங்கள்தான் மாற்றங்களுக்கும் ஏற்றங்களுக்கும் காரணமாக இருப்பீர்கள்'' என்கிற ஒபாமாவின் பிராசாரத்துக்கு அமெரிக்கா முழுக்க நல்ல வரவேற்பு இருக்கிறது.

பிரைமரி எனப்படும் பூர்வாங்க தேர்தலில் ஒபாமாவை தோற்கடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றிப் பெறவில்லை.

ஒபாமாவை "ஒசாமாவின் உறவினர்' என்று கூட பிரசாரம் செய்யப்பட்டது. ஒபாமாவின் பெயரில் ஹூசேன் இருப்பதால்,'சதாம் ஹூசேனின் சகலன்' என்று புதுப் பட்டமும் சூட்டினார்கள். ஒபாவின் ரிஷிமூலம், நதிமூலங்களை டி.வி சேனல்கள் போட்டி போட்டு, அலசித் துவைத்துத் தொங்கவிட்டன. எதற்கும் அசரவில்லை ஒபாமா!

''நான் பிறந்த இரண்டே ஆண்டுகளில் என் அம்மாவும் அப்பாவும் பிரிந்துவிட்டார்கள். வாழாவெட்டியாக என் அம்மா அனுபவித்த துயரங்களை நான் மட்டுமே அறிவேன். ஒரு கட்டத்தில் என் அம்மா மறு மணம் செய்துகொண்டதால் பாட்டியிடம் அடைக்கலம் ஆனேன். நோயாலும் சமூகக் குற்றவாளிகளாலும் திணறிக்கொண்டு இருந்த சிகாகோ நகரின் ஒரு பின்தங்கிய பகுதியில் இருந்த தேவாலய ஊழியன் நான்!'' என்ற ஒபாமாவின் சுயசரிதைக்கு அமெரிக்கா ஏழை மற்றும் நடுத்தரவு மக்கள் மத்தியில் எக்கச்சக்க ஆதரவு.

ஜனநாயக வேட்பாளர் தேர்தலில் ஹிலாரியை வென்றாலும், ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரியின் ஆதரவில்லாமல் ஒபாமாவால் வெல்லமுடியாது. அடுத்தடுத்து நடக்கவிருக்கும் விவாதங்களில் மெக்கெய்னைப் பேச்சால் வீழ்த்திக் காட்ட வேண்டும். வரலாறு படைக்க ஒபாமா முன் காத்திருக்கின்றன சவால் படிக்கட்டுகள்!


## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

### வீட்டு பணிப்பெண்கள்

சிங்கப்பூர் சம்பளம் (325/400 டொலர்) 26,000/= இருந்து 32,000/=வரை
குவைட் சம்பளம் KD 60 / 20000/= வயது 20 முதல் 48 வரை

இலவசம்



- உணவு, தங்குமிடம், வைத்தியம்
- இருவழி விமான டிக்கட்
- அனைத்து வகை செலவுகளும்
- கடவுச் சீட்டு பெறுவதிலிருந்து விமான நிலையம் வரை செல்வதற்கான செலவு கொடுக்கப்படும்.

**இலவசம்! இலவசம்! இலவசம் !!!**

இன்றே அழையுங்கள் தினசரி சமூகப் பரீட்சை

வெளிநாடு செல்ல பணம் இல்லாவிடில் நாம் உதவி செய்வோம்

அரசாங்க அனுமதிப் பெற்ற எங்கள் நிறுவனத்தை நம்பிக்கையுடன் நாடுங்கள்

**லங்கா சிங்கோ**

85, புகையிரத நிலைய வீதி அங்குலான மொரட்டுவ.
தொலை பேசி 071 6113166 / 077 9594363/ 011 2612617

அரசாங்க பதிவு இலக்கம் 1259

## சொற்சிலம்பம் போட்டி இல. 319

சொற்சிலம்பம் 319 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூன் 29 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 05 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 317 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 317

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | ம் | 3 பா | 4 வ | ம் | ■ | 5 க |
| 6 ச | னி | ■ | 7 வ | ட | ■ | 8 க | ட |
| ம் | ■ | 9 அ | ல | ம் | 10 பு | த | ல் |
| 11 பா | 12 ம | ர | ன் | ■ | 13 வ | லி | ■ |
| 14 வி | த | ம் | ■ | 15 எ | ன | ■ | 16 ப |
| 17 த | லை | ■ | 18 வி | ரு | ம் | 19 ப | ல் |
| ம் | ■ | 20 கொ | டு | மை | ■ | 21 க | ல |
| ■ | 22 ச | டு | தி | ■ | 23 க | ல் | வி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 317

1. இ.மிராளினி,
இல.43/5, பிள்ளையார் கோயில் வீதி-02,
வேலூர்-கல்லாடி,
மட்டக்களப்பு.
2. வெ.செல்வநாயகம்,
Bp 1/8, மணிங் டவுன் பிளெட்ஸ்
மங்கள வீதி,
கொழும்பு-08.
3. திருமதி சந்திரா ரவீந்திரன்,
"திருவேரகம்"
199/57, தும்புறுகிரிய வீதி,
ஹட்டன்.

### பாராட்டுப் பெறுவோர்

1. ஏ.பி.யூ.லெவ்வை,
கொழும்பு-02.
2. ஜே.எச்.பாத்திமா முஹுசாஸ்,
புத்தளம்.
3. ஐஷா யூனுஸ் பிலால்,
பேருவளை.
4. பி.செளமியா,
மாத்தளை.
5. தினேஸ்குமார்,
முல்லைத்தீவு.
6. ச.சுரேந்தினி,
தெஹிவளை.
7. ரொமிலியா என்டனி,
கொழும்பு-08.
8. ஆ.விஜிதா,
கொழும்பு-06.
9. திருமதி வீ.ஹமீட்,
கொழும்பு-08.
10. ஏ.எவ்.ரிஷ்லா,
குருணாகல்.
11. திரு.செ.பெ.தெரன்ஸ்,
வத்தளை.
12. எஸ்.பிரணவகுலன்,
திருகோணமலை.
13. க.இராமச்சந்திரன்,
லுணுகலை.
14. திருமதி.எம்.ஆர்.பாலேந்திரா,
கொச்சிக்கடை.
15. பி.எம்.கலாமுத்தீன்
மருதமுனை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 319

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | ■ | 12 | | | ■ | |
| ■ | 13 | 14 | | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | ■ |
| | ■ | | ■ | 18 | | | 19 |
| 20 | | | | | ■ | 21 | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 319

**இடமிருந்து வலம்**

1. செய்தி/தகவல்/புதினம்.
4. ஒரு தானிய வகை.
6. ஒன்றின் பௌதீக அளவைக் குறிப்பது.
8. தட்டுப் போன்ற மெல்லிய உலோகப் படை.
10. தாமரை.
11. செல்வம்.
12. மாலை/தொடுக்கப்பட்டது.
13. வசனம்/வார்த்தைகளின் கூட்டம்
15. குத்து விழுவது இப்படி.
16. விரைவு சேவை.
17. எருது.
18. காற்று (மண்டலம்)/வாயு.
20. அரற்றல்/அலம்புதல்.
21. பாவம் செய்தவன்.

**மேலிருந்து கீழ்**

1. தலைமுறை.
2. தந்திரம்/வஞ்சகம்.
3. ஆணின் பெயரின் முன்னால் சேர்க்கும் மரியாதைச் சொல்.
4. வைராக்கியம்.
5. அப்பா, அம்மா, மகன், மகள் ஒன்று சேர.
7. (சுறாமீன்) இராசி.
9. உப்புப் போட்டு காய வைத்த மீன்.
12. சேறு.
14. எல்லாம்.
15. சிறிய கவிதை வடிவம்.
16. தடி.
17. பேசு/திட்டு/வைதல்.
18. முற்கால ஆயுதம் ஒன்று.
19. உலகம்.

## தமிழ்த்தேசியம்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரப் பகுதிகளைத் தாக்கி மக்களுக்கும் தேசத்திற்கும் அவலத்தைக் கொண்டுவந்தபோது, உள்ளம் துடித்தெழுந்து உதவிக்கரம் நீட்டியவர்கள் எமது புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் அல்லவா! இந்த ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்திற்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பினைக்கூட ஸ்ரீலங்காவின் நீதி(?)த்துறை புறம்தள்ளியபோது உலகத் தமிழர்கள் அயர்ந்துபோய் விடவில்லையே! அந்த ஆழிப்பேரலையின் வலிமையையும் விட எமது உலகத் தமிழர்களின் 'அன்புப் பேரலை' வலிமை கூடியது அல்லவா!

ஆகவே, போர்க்காலமாக இருந்தாலும் சரி, சமாதானத்திற்கான காலமாக இருந்தாலும் சரி, இயற்கை கொடுக்கக் கூடிய அழிவுக்காலமாக இருந்தாலும் சரி, புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் தங்களது தார்மீகக் கடமையைப் புரியத் தவறுவதேயில்லை. தமிழ்த் தேசியத் திற்காக உலகத் தமிழர்கள் வீறு கொண்டு எழுகின்ற போது, அவர்கள் யாருடைய தயவையும் எதிர்பார்த்து நிற்பதில்லை. 'ஒற்றுமையே பலம்--வலிமையே வாழ்வு' என்பதை அவர்கள் நிரூபித்தே வந்துள்ளார்கள்.

இவ்வாறாகத் தமது வலிமையூடாகத் தமிழ் தேசியத்திற்கு உறுதுணையாக இருக்கின்ற உலகத் தமிழர் சமூகம், ஒரு சில விடயங்களில் மட்டும் தளர்ந்து போவது ஏன்? அங்கலாய்ப்பது ஏன்? ஐயப்படுவது ஏன்?தமிழீழ மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் உள்நோக்கோடு உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முனையும்போதோ அல்லது தடைசெய்யும்போதோ எமது உலகத் தமிழர்கள் அடைகின்ற பரபரப்பிற்கு அளவேயில்லை. நிலைமை எல்லாம் சிக்கலாகப் போகிறதே என்ற அங்கலாய்ப்பும், தளர்வும் உடனடியாகத் தொற்றுநோய் போல் எம்மவரைத் தொற்றிக்கொள்ளும்! இப்படிப்பட்ட அழுத்தங்களும், தடைகளும் அதிருப்தியைத் தரக்கூடியவைதான்! இவற்றை நாம் கடுமையாகக் கண்டிக்கவும், எதிர்க்கவும் வேண்டும்தான்! இவற்றை அகற்றுவதற்காக நாம் முழு மூச்சாக உழைக்கவும் வேண்டும்தான்!

ஆனால் அச்சப்படத் தேவையில்லை. அங்கலாய்க்கத் தேவையில்லை. ஐயம் கொள்ளக்கூடிய அவசியமும் இல்லை. அன்புக்குரிய வாசகர்களே! நாம் பல காலமாகத் தாக்கித்து வந்துள்ள ஒரு க...த்தை இப்போது மீண்டும் தர வி...ழகின்றோம்.இந்தக் கருத்தில் உள்ள உண்மையும், யதார்த்தமும் பல விடயங்களைத் தெளிவுபடுத்தக்கூடியவை என்றே நாம் நம்புகின்றோம். உலக வரலாற்றில் எத்தனையோ உரிமைப் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. தற்போதைய காலத்திலும் எத்தனையோ உரிமைப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. உருவாகியும் வருகின்றன. இவ்வாறு உலகின் பல பாகங்களிலும் நடைபெறுகின்ற, நடைபெற்ற, உருவாகின்ற உரிமைப் போராட்டங்களைப் பொதுவாக மேற்குலகம் ஏற்றுக் கொண்டதில்லை.

மேற்குலகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக அந்த விடுதலைப் போராட்டங்கள் நடைபெறாமல் போனதில்லை. ஆகவே ஒரு யதார்த்தத்தை நாம் இங்கே உணரக் கூடியதாக உள்ளது. அதாவது மேற்குலகத்தினைக் கேட்டோ அல்லது மேற்குலத்தின் அங்கீகாரத்தைப் பெற்றோ, ஒரு மக்கள் சமுதாயம் தங்களுடைய விடுதலைப் போராட்டங்களை ஆரம்பிக்கப் போவதில்லை. இந்த மேற்குலக நாடுகளின் அங்கீகாரம் இல்லையென்பதால் அம் மக்கள் தங்கள் போராட்டத்தைக் கை விடவும் போவது இல்லை.

வரலாறு எமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது. மேற்குலக நாடுகளின் அழுத்தங்களையும் மீறி எத்தனையோ போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன.

அடிமைப்பட்டிருந்த நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன. ஒரு விடுதலைப் போராட்டம் பலம் வாய்ந்து- வலிமையோடு விளங்கினால், உலக நாடுகள் 'சமாதானம்' குறித்தும், 'தீர்வு' குறித்தும் பேசத் தொடங்கும். தமிழ்த் தேசியம் குறித்தும், அதன்பால் எழுகின்ற ஒருங்கிணைந்த உணர்வு குறித்தும் நாம் பல விடயங்களைத் தாக்கிதோம். இதன் காரணமாகப் பிறர் உதவியை எதிர்பாராது, உலகத் தமிழர்கள் தொடர்ந்தும் புரிந்து வருகின்ற தமிழ்த் தேசியத்திற்கான கடமையையும் தாக்கித்தோம். புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் வலிமையின் பரிமாணம் குறித்த கருத்துக்களைத் தந்திருந்தோம். எந்த விடுதலைப் போராட்டத்தின் வெற்றியும், தோல்வியும் அந்த இன மக்களின் எழுச்சியிலும், வலிமையிலும், தலைமையிலுமே இருக்கின்றது என்பதையும், அவை வேற்றுச் சக்திகளின் ஆதரவிலோ, எதிர்ப்பிலோ தங்கியிருக்கவில்லை என்பதையும் தாக்கித்திருந்தோம். ஆகையால் அன்புக்குரிய புலம்பெயர்ந்த தமிழீழ மக்களே! எம்முடைய வலிமை மகத்தானது. அதனையும் நாம் மீண்டும் மீண்டும் நிரூபித்தே வந்திருக்கின்றோம். உண்மையில் உலகம் எமக்கு வெளியே இல்லை. அது எங்களுக்குள்ளேதான் இருக்கின்றது. ஆகையால் வலிமையுள்ள நாம், எமது வலிமையின் பரிமாணத்தை நன்கு உணர்ந்து கொண்டு, அதன் வீச்சை உரிய முறையில் உபயோகிப்போம். அஞ்சற்க!

பொங்கு தமிழாய் வீறு கொண்டு எழுக!

## ராமதாஸ் - கருணாநிதி....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)


கணிசமான தொகையினராக இருக்கும் முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் பாரம்பரியமாக தி.மு.க.வையே ஆதரிப்பவர்கள். இவர்களையும் தனபக்கம் வளைத்துப் போட்டுக்கொள்ள பா.ம.க. திட்டமிடுகிறது. குறிப்பாக கலைஞர் முதுமையில் தள்ளாடி வரும் நிலையில் அவருக்குப் பின்னால் அவரது எல்லா வாககுகளையும் கட்டிக்காக்க ஸ்டாலினால் இயலாது போகலாம். அவ்வேளை தி.மு.க.வாக்குகளில் சொற்பத்தையாவது சூறையாடுவது பா.ம.க வுக்கு மிகவும் நன்மையான விடயமாகும். ஏறகனவே, காங்கிரஸ் ஆதரவு கொண்ட வன்னியர் சமூகத்தை சாதி வெறி பேசி ராமதாஸ் தனபக்கம் ஈர்த்துக்கொண்டார். அதாவது பா.ம.கவின் தோற்றத்தால் முதலில் பாதிக்கப்பட்ட கட்சி காங்கிரஸாகும். இப்போது இரண்டாம் இலக்கு தி.மு.க எனக் கருதப்படுகிறது.

இவ்வாரம் கூடிய தி.மு.கவின் செயற்குழு பா.ம.கவுடன் உறவைத் துண்டிப்பது என அறிவித்துள்ளது. எனினும், மத்தியில் ஆளும் கூட்டணியிலிருந்து ப.ம.க.வை வெளியேற்ற கோரமாட்டோம் எனவும் தி.மு.க. அறிவித்துள்ளது. இது ஒரு விசித்திரமான முடிவு. ஏனெனில், மாநிலத்தில் அடிபடும் தி.மு.க.வும், பா.ம. க.வும் டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் பங்காளிகளாக அமைச்சர் பதவிகளை இன்னும் ஓராண்டு வகிக்கவே இந்த விசித்திர முடிவு.

இதேவேளை -

எதிர்வரும் லோக்சபா தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார். அதாவது, தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய 2 அணிகளில் எதிலும் சேரப் போவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவரது கட்சி பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்குவதால் அ.தி.மு.கவின் வாக்கு வங்கிக்குத்தான் இவரால் ஆபத்து உண்டு. அந்தவகையில், இவரை வளைத்துப் போட ஜெயலலிதாவால் இயலுமாயின், அது அவரது வெற்றிக்கு வழி கோலும். ஆனால், அது அவரால் இயலவில்லை. தி.மு.கவும் விஜய காந்துடன் முட்டிமோதி வருகிறது. அதுமட்டு மன்றி, மாநில ஆட்சியை கைப்பற்றி முதலமைச்சராக வருவதே தனது இலக்கு எனவும் சமீபத்தில் பகிரங்கமாக கூறியுள்ளார். தாம் முதலமைச்சராவதை யாரும் தடுக்கமுடியாது என்று ஆவேசமாக கூறியதைப் பார்க்கும் போது ஜெயலலிதாவுக்கு நிச்சயம் வயிற்றைக் கலக்கும். தேசியக் கட்சிகளான பி.ஜே.பி அல்லது காங்கிரஸுடன் சேர விஜய காந்துக்கு ஆட்சேபனை இல்லை. எனினும், இக்கட்சிகள் அ.தி.மு.க. அல்லது தி.மு.க வுடன் சேர்வதால் இவற்றுடன் இணைவதும் சாத்தியமில்லை. எனவே, தனித்தே செல்வது உசிதமென கருதுகிறார் போலும்.

# கே.எஸ்.சிவகுமாரனின் நமது சிறுகதைகள், ஆசிரியர்கள் குறித்த பன்முகப்பார்வை




கே.வி.

'ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை'(1962-1979) எனும் நூலினை பத்தி எழுத்தாளரும் திறனாய்வாளருமான கே.எஸ். சிவகுமாரன் வெளியிட்டிருக்கிறார். சென்னை மணி மேகலைப் பிரசுரம் நூலினை பதிப்பித்துள்ளது.

ஆசிரியர் தமது முன்னுரையில் இந்நூல் முதலாம் பாகம் என்றும் இரண்டாவது பாகம் வெளிவரும் என்றும் குறிப்பிடுகிறார். 1962-1979 காலகட்டத்தில் வெளியான சில நூல்கள், ஆசிரியர்கள் குறித்த தகவல்கள் முதலாம்பாகமான இந்நூலில் அலசப்பட்டுள்ளன. அறிமுகக் குறிப்புகளும், விமர்சனக் குறிப்புகளும் தரப்பட்டிருப்பதனால் 'அலசல்' எனும் சொற்றொடரை பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது.

நூலாசிரியர் விளக்கம், பதிப்பாசிரியர் உரை, தமிழிற் புனைகதை என ஆரம்பித்து, இலங்கையர்கோனின் அழகியல் பாங்கு, செ.கணேசலிங்கனின் நிதர்சனக்கதைகள், வ.அ. இராசரத்தினத்தின் கட்டமைப்புத்திறன், டொமினிக் ஜீவாவின் அடித்தள மக்களின் விழிப்புகுரல், காவலூர் இராசதுரையின் மன அலைகள், நீர்வை பொன்னையனின் நிதர்சன நீட்சியழகு, வரதரின் முன்னோடிக்கதைகள், முகிழ்ந்த எழுத்தாளர் சிலரின் முதல் முயற்சிகள், பரிசுகள் பெற்ற முன்னைய சிறுகதைகள், கே.டானியலின் செக்ஸ் அக்கறைகள், நாவேந்தனின் தமிழ் தூய்மை வாதம், கல்லூரிச் சஞ்சிகைக்கதைகள், பவானியின் (ஆழ்வாப்பிள்ளை), பெண்ணியக் கதை முதல்வர், எம்.ஏ.ரஹ்மானின் முன்னோடி பரிசோதனைக் கதை, மட்டக்களப்புப் பிராந்திய பேச்சு வழக்கில் கதை, செ.கதிர்காமனின் மாக்ஷியத் தேடல் (கொட்டும் பனி), எம்.எஸ்.எம். ராமையாவின் தோட்ட வாழ்மக்களின் படப்பிடிப்பு, செ.யோகநாதனின் முன்மாதிரியான [illegible]தனைக் கதைகள், [illegible]தளைசிங்கத்தின் கதைகளில் செக்ஸ் ஒரு குறியீடு, பெண்நோக்கில் சில கதைகள், செ.யோகநாதனின் சமூகப்பார்வை, மண்டூர் அசோகாவின் பெண்மை நோக்கு, புலோலியூர் க.சதாசிவத்தின் சிறுகதை வடிவ அக்கறை, நெல்லை க.பேரனின் செய்தி ஆர்வம், அ.யேசுராசாவின் அனுபவ தரிசனங்கள், சாந்தனின் நையாண்டிக் கதைகள், மு.திருநாவுக்கரசின் சிக்கனச் செதுக்கல், நா.முத்தையாவின் தத்துவக் கதைகள், யோ.பெனடிக் பாலனின் மார்க்கசியத் தத்துவார்த்த கதைகள், சாந்தனின் மினிக் கதைகள், லெ. முருகபூபதியின் நீர்கொழும்புத் தமிழ், சுதாராஜின் நேர்மைத் திறன் கதைகள், மருதூர் மஜீத்தின் மட்டக்களப்புத் தமிழ் கதைகள், காவலூர் எஸ். ஜெகநாதனின் சிறுவர்களுக்கான கதைகள் என்ற தலைப்பிலான அம்சங்கள் நூலில் உள்ளடக்கமாகியுள்ளன.

சிறுகதை, கவிதை, புதினம் எனத் தமிழில் வெளிவரும் நூல்கள் குறித்த அறிமுகக் குறிப்புகளை தொடர்ச்சியாக பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் எழுதிவருபவர்களில் கே.எஸ்.எஸ். பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவர். நீண்டகாலமாக இவருடைய இப்பணி தொடர்கின்றது. சிலரின் படைப்புக்கள் தவறிப்போயிருக்கலாம். அது தவிர்க்கமுடியாதது. அவர் கைக்கு கிடைக்கும் அனைத்து நூல்களின் ஆசிரியர்களை அறிவாரோ இல்லையோ அவற்றை வாசித்து இலக்கிய [illegible]லகிற்கு அறிமுகம் செய்யும் பண்பாட்டினை ஒரு நெறியாகவே அவர் வளர்த்துக்கொண்டிருப்பது ஓர் உயர் பண்பாகும்.

எதற்காக இந்த அறிமுகங்களும், ஆசிரியரின் ஆக்கங்களின் சித்தாந்த போக்குகள் குறித்த தேடல்களும் என்ற வினாக்களுக்கு அவரின் முன்னுரையே விடை தருவதாக அமை கின்றது.

இந்த நூலிலே 1962-1979 இறுதிவரை சிறுகதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கதைகள் தொடர்பான விவரங்களை ஆய்வாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக விருக்கும். மூலநூல்களே இல்லாத நிலையில் அவற்றை எழுதியவர்கள் தமது கதைகள் மூலம் எதனை சித்திரித்தார்கள், ஈழத்துக் தமிழ்ச் சிறுகதை எவ்வாறு வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை ஆய்வாளர்கள் மாத்திரமன்றி, அக்கதைகளை எழுதியவர்களும் கூட சிலகணிப்புகளை அவதானிக்கக்கூடும்.' என குறிப்பிடுகின்றார்.

கதைகளை பற்றிய அறிமுகக் குறிப்புகள் மட்டும் அல்லாது, கருப்பொருள், அழகி யல் குறித்த விமர்சனக் கூறுகளையும் அவை கொண்டுள்ளன என்பதை காண முடிகிறது. அவை தத்துவரீதியான கார சாரமான தர்க்கங்களாக இல்லை. மயிலிற கால் தடவுவனபோல் அமைந்துள்ளன.

மு.தளையசிங்கம், செ.யோகநாதன் ஆகியோர் இருவேறு சித்தாந்தங்களைக் கொண்டவர்கள். இவர்கள் குறித்து சிவா வெளிப்படுத்தும் விமர்சனக் குறிப்புகள் பெரும் சமூக உரையாடல்களாக விஸ்வரூபம் கொள்ளாததினால்தான் நமது விமர் சனத்துறை வளர்ச்சி காணாமல் இருக்கிறது என்பதை அடித்துச் சொல்ல வேண்டும். 'இதென்ன சாமான்' என்று தலையை பிய்த்துக் கொள்ளக் கூடும். அதற்குக் காரணம் நம்மிடையே அதிகரித்துச் செல்லும் குழு வாதமும், சமூகமான விமர்சன உரையாடல் அற்றதன்மையும் ஆகும்.

ஒடுக்கப்பட்டோரின் மேம்பாட்டிற்குத் தேவையான ஐக்கிய நடவடிக்கை கள் வேண்டும்.


அவை வெறுமனே புகைப்பட யதார்த்தமாக காட்டப்படாமல் காரண காரியத்துடன் ஆய்வுமுறை ரீதியில் இந்த யதார்த்தத்தை யோகநாதன் கொண்டுவரு வது தனிச் சிறப்பு' என செ.யோ.கதை யொன்று குறித்து சிவா குறிப்பிடுகிறார்.

''வெளியில் வரும் கதாநாயகன் ஒரு வேதாந்தி, அவன் அமைதியாக இருக்கிறான். அதுவே ஆட்சேபணையைத் தெரிவிக்க உகந்த வழி. அதுவே பிரம்மம் என்று தளையசிங்கம் கருதினார்'' என குறிப்பு வைக்கிறார். மு.த.வின் கதை யொன்று குறித்து இந்நூலில் இவ்வாறு விமர்சனக் கருக்கல் விரவிக்கிடக்கின்றன. இவற்றை விருட்சமாக்கும் இலக்கியக் கருத்தாடல் நம்மிடம் முற்றாகவே அழிந்து வருகிறது. அவை உயிர்ப்பு பெறல் வேண்டும். இத்தகைய நூல்களில் இத்தகைய விமர்சனக் கூறுகள் விரிவாக முன் வைக்கப்பட வேண்டும். நமது கதைகள், கதாசிரியர்கள் குறித்த பன்முகப்பார்வைக்கு உகந்த உட்கருக்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்திருக்கின்றது. இலக்கிய ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் உசாத்துணை நூலாக அமையவல்லது.

ஆசிரியர் கே.எஸ்.சிவகுமாரன்.
இல: 21, முருகன் இடம்
பாமன்கடை, கொழும்பு-6
தொ. பே. 011 2587617 என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு நூலைப்பெறலாம்.



தயாரிப்பு: கே. விஜயன்



## ஸ்ரீமான் சுஞ்சாரி

### ''ரெண்டு முறை புரியாணி சாப்டுட்டேலே அதை என்னென்று நினைச்சேல்?''

''நாமதான் பண்பாடு, நாகரிகம் படைச்ச மனுஷால்ன்னு பீத்திக்கிட்டாலும் நம்ம பொஞ்சாதி, புருஷன் உறவெல்லாம் சிதைஞ்சிண்டே போவது ஓய்''

''என்ன ஏதும் குடும்ப உறவுகள், தாம்பத்ய உறவுகள் பத்தி ஆராய்ச்சி பண்ணிண்டு இருக்கேலா?''

''வருஷமா அமெரிக்காவிலே வாழ்ந்துண்டிருந்தேனில்லியோ அந்த அனுபவத்தைச் சொல்லுதேன்.''

''அடிசக்கை! தாம்பத்ய உறவுன்னு சொல்றேல். கொஞ்ச தெளிவாக சொல்லப்படாதோ!''

''நல்ல குடும்பமொன்னே தேடுரேன். காணமுடியலியேன்னு நாடகாசிரியர் பெர்னாட்ஷா சொல்லியிருக்கார். அந்த நெலமை தலைகீழா மாறின்னு இருக்கு. மேல்நாட்டுலே பொஞ்சாதியும், புருஷனும் ஒருத்தருக்கொருவர் மனம் விட்டுப் பேசி, உண்மையா நடந்துக்கிறா, ஆனால் நம்ம நாட்டு வெவகாரமே வேறே. இங்கே நம்ம ஊருலே ஒருத்தருக்கொருவர் உண்மை பேசாமலே கீரியும் பாம்புமா குடும்பம் நடத்தின்னிருக்கா''

''நல்ல சமாச்சாரத்தை தொட்டு இருக்கேல். ஆமா அப்பிடி என்ன பெருசா குடும்ப வாழ்க்கை விசுவாசமாக கொடி கட்டிப் பறக்குது''

''அமெரிக்காவிலே அவர்தான் நேக்கு நல்ல பிரண்டு. லவ்மெரேஜ் பண்ணிண்டார். ரெண்டுபேரும் படிச்சவா. தாம்பத்திய உறவு வைக்காமலே ஒரு வருஷம் வாழ்ரதா சங்கல்பம் பண்ணின்டா. அதுமட்டுமில்லே ஆளுக்கு ஒரு பாத்திரத்தை வைத்து யாராவது முறைதவறி வெளியாலே தாம்பத்யம் பண்ணிண்டா ஒரு அரிசி பருக்கையை பாத்திரத்துலே போட்டு ஒருவர் மேல் உள்ள விசுவாசத்தை மற்றவாளுக்கு காட்டுரதா தீர்மானம் பண்ணிண்டா''

'சபாஷ்! கலிகாலத்துலேயும் இப்படி சோடிகள்.''

''ஒரு வருஷம் ஓடிட்டுது. ஆத்துக்காரி அவனுடைய பாத்திரத்தை திறந்து பார்த்தாள். அடேயங்கப்பா பிரமிச்சே போனாள். புருஷனுடைய பாத்திரத்துலே ஏழே ஏழு அரிசி மணிகள் தான் கிடந்தன. புல்லரிச்சுப்போனாள். புருஷன் ஓடோடிப்போய் பொஞ்சாதி பாத்திரத்தை திறந்து பார்த்தான். டபுள் பிரமிப்பு. ஏன்னா அதுலே ஒரே ஓர் அரிசி மணிதான் கிடந்தது. மனைவியை கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்து மூச்சிரைக்க அவன் கேட்டான் 'கண்மணியே! உன் பாத்திரத்தில் ஒரேயொரு அரிசிமணிதான் இருந்தது. எப்படி இவ்வளவு கட்டுப்பாடா இருந்தாய்'.

அதற்கு அவள் சொன்னாள்.

'இல்லை கண்ணாளா! இந்த இரண்டு வருடத்தில் இரண்டுமுறை ஆசிய நாட்டு புரியாணி செய்து உங்களுக்குப் போட்டேன். நினைவிருக்கோ. அந்த அரிசி என் பாத்திரத்திலிருந்து எடுக்கப்பட்டதுதான்' என்று லஜ்ஜையுடன் சொன்னாள்''.

''அடி செருப்பாலே கலிமுத்திட்டுது வோய்!''

## விமர்சனமோ விமர்சனம் காலைவாரிப்போட்ட விமர்சனம்

"உதவி செய்ரவர்ன்ட தலையிலே கைவைக்கிற ஆசாமிகளோட வலு கவனமாக இருக்கவேணும்''.

''என்ன திடுதிப்பென்று ஞானோதயம் வந்தாப்போல கதைக்கிறியல்?''

"எல்லாம் அனுபவம்தான்''

''அட அப்ப சூடுகண்ட பூனை என்டு சொல்லுங்கோ''

''சரியா சொல்லிப்போட்டியல். பகிடி என்னென்றால் சூடுகண்ட பூனை நான் இல்லை''

''ஆர்? சொல்லுங்கோவன்!''

''ஒரு பாவப்பட்ட எழுத்தாளன். 'தன்ட பிரண்ட ஓஹோ'வென்று தூக்கி வைக்க கொண்டாடுனவர்''.

''அடடே!''

''விசயம் என்னென்றால், மனுஷன் ரொம்பவும் கஷ்டப்பட்டு ஒரு புத்தகம் போட்டவர். இவருடைய நெருக்கமான பிரண்ட் ஒருவன்ர அடிக்கடி கூட்டங்களுக்கு கூட்டிப்போறவர் எழுத்தாளர்தான். இவருக்கே தானொரு நல்ல விமர்சகன் என்று நினைப்பு. அப்படி காட்டிக் கொள்ளவும் துடிப்பு. எழுத்தாளரை ஒட்டுண்ணியாக ஒட்டிக்கொள்ள இவரும் அவரை அப்பிடி இப்பிடி என்று புகழ்ந்து தள்ளுரவர்''.

''அது கிடக்கட்டும். பிரண்ட் என்னவாம்?''

''நூல் வெளியீட்டுவிழாவிலே அவர்தான் நூல் விமர்சனம் செய்வாராம் என்று ஒரே பிடி. அதுக்கென்ன அதுக்கென்ன என்ட எழுத்தாளரும் தட்டி உற்சாகம் கொடுத்ததோட விடாமல் கடைசியாக அவரையும் சிவனே என்று இன்விடேசனிலே போட்டுட்டார். நூல் வெளியீட்டு விழாவிலே ஆரோ ரெண்டு புரோபஸர்மார் பேசுனவங்கள். அவங்கள் விசயம் தெரிஞ்சவங்கள். விமர்சனம் என்ற பேரிலே ரெண்டு புழுகுமூட்டையாய் புகழுரையாக அவிழ்த்துப்போட்டு நைஸாக நழுவிப்போட்டாங்கள். எங்கள்ன்ட விமர்சன ஆர்வலர் மேடைக்கு ஏறினார். புரபஸர்மாரை மிஞ்சவேணும் என்ற துடிப்போட ரெண்டு மூன்றுமுறை உருப்போட்டாரோ என்னவோ முதல்பக்கமிருந்து கடைசிப்பக்கம் வரை உள்ள எழுத்துப் பிழைகளையும் வசனப்பிழைகளையும் அக்கு வேறு ஆணி வேறாக்கோர்த்தாப்போல அளந்து தள்ளினார். அதுமட்டுமல்லாமல் சிறுகதை எழுதுவது எப்படி? நெடுங்கதை எழுதுவது எப்படி என்று ஒரு கதாப்பிரசங்கமே பண்ணித் தொலைத்தார். எழுத்தாளர் அதிர்ந்துபோனார். விமர்சகரின்ட காரசாரமான விமர்சனத்திற்குப் பிறகு ஆர்தான் புத்தகம் வேண்டப்போறாங்கள். அவர் கஷ்டப்பட்டு இழுத்துக்கொண்டு வந்திருந்த நூல் வாங்குவோர்களின் ஆசனங்களையெல்லாம் காலியாக்கி முழுசிக்கொண்டிருந்தால் மனுஷன் ஆடிப்போகமாட்டாங்கள்? நாசமறுப்பான் தாளிச்சுப் போட்டானே என்று தலைமுடியை பிச்சுக்கொண்டார்''.

''என்ட கதிரமலையானே!''

## ஓர் அறையே போன் ஆனது

''நேற்றுத்தான் வாங்கினேன்... புத்தப் புதுசு'' என்று யாரும் சொல்ல முடியாதபடி நிமிடத்துக்கு நிமிடம்



புதுப்புது மொபைல் போன்கள் அறிமுகமாகிக்கொண்டே இருக்கின்றன. எப்.எம் ரேடியோ, மியூசிக் பிளேயர், வீடியோ பிளேயர், கமெரா, ப்ளூடூத் என ஏராளமான வசதிகளும் அப்டேட் ஆகிக்கொண்டே இருக்கின்றன.லாண்ட் லைன் போனிலும் இப்போது ஏகப்பட்ட வசதிகள்...கலர் ஐ.டி., மியூசிக் ரிங்டோன், எஸ்.எம்.எஸ்., இணைய இணைப்பு வசதி என பல புதுமைகள். ஜப்பானிலுள்ள நிப்போன் டெலிகிராப் அண்ட் டெலிபோன் கம்பெனி இவற்றை எல்லாம் தாண்டி எங்கேயோ போய்விட்டது. இந்நிறுவனம் உருவாக்கியிருக்கிற டி-ரூம் என்கிற எதிர்கால போனை மற்ற நிறுவனங்கள் வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன. வெவ்வேறு இடங்களில் இருக்கும் மனிதர்கள் ஒரே அறையில் நேருக்கு நேர் அமர்ந்து பேசிக்கொள்வது போன்ற வசதியை அளிப்பதுதான் டி-ரூம். ஏற்கனவே வீடியோ, கொன்பரன்ஸ் வசதிகள் இருந்தாலும் அது ஏற்படுத்துகிற அந்நியத்தன்மையை போக்கியிருப்பதே டி-ரூமினின் விசேடம்.

எங்கோ இருந்து பேசுகிறவர்கூட, நிஜமாகவே நம் எதிரிலிருந்தே பேசுவதுபோல மாயத்தோற்றம் அளிக்கிறது இந்தத் தொலைபேசி அறை. பாம்புபோல நீளும் வயர்கள், கண்சிமிட்டும் கருவிகள் என தொழில்நுட்பச் சமாசாரங்கள் வெளிப் படையாகத் தெரியாமல் சாதாரண அறை போலவே காட்சியளிப்பது இன்னும் சிறப்பு.

டி-ரூம் சுவர்களில் பல திரைகளும், கமெராக்களும் மைக்ரோபோன்களும் சென்சார்களும் கண்ணுக்குத் தெரியாத வகையில் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், இன்னொரு இடத்திலிருந்து பேசுபவரையும் சரியான அளவில், சரியான கோணத்தில் பார்க்கமுடியும். அருகில்தான் இருக்கிறார் என்கிற உணர்வோடு தகவல் பரி மாற்றம்செய்யமுடியும். இதை பதிவுசெய்து மீண்டும் பார்வையிடும் வசதியும் உண்டு. எதிர்காலத்தில் முப்பரிமாண கமெரா போன்ற வசதிகள் மேம்படுத்தப்படும்போது மாயமனிதரோடு பேசுகிறோம் என்ற எண்ணமே ஏற்படாது. தமிழ் சினிமா வில் வருவது போல, பிரிந்த காதலர் கள் ஒன்றுசேரும்போது ஓடிவந்து அணைத்துக்கொள்வார்களே...! அது போல டி-ரூமில் செய்தால்தான் பிரச் சினை...சுவரில் மோதி மண்டை வீங்கிவிடும்.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

## இம்போர்ட்டட் சரக்கு



மிகப் பெரிய நகரம். பரபரப்பான வீதி. சிக்னலில் காத்திருக்கும் வாகனங்கள்.

நின்றுகொண்டிருந்த காரிலிருந்தவர்களிடம் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரன். அவனைப் பார்க்கவே எல்லாருக்கும் பரிதாபமாக இருந்தது.

காரில் கோட்டு சூட்டணிந்த ஒருவர் உட்கார்ந்திருந்தார். பிச்சைக்காரன் அவர் முன்பு கையேந்தி நின்றான்.

காரில் உள்ளவர் சொன்னார். ''நான் உனக்குக் காசு கொடுத்தால் நீ அந்தக் காசை வைத்து தண்ணியடிக்கப் போவே''.

''ஐயோ சாமி எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாதுங்க''.

''அப்போ நீ சூதாட்டத்துக்குப் போவே''

''நீங்கள் காசு கொடுக்காட்டாலும் பரவாயில்லை. இப்படி அபாண்டமாப் பேசாதீங்க. எனக்குச் சூதாடுறதென்றால் என்ன என்றே தெரியாது''.

''அப்பிடியா மிகவும் சந்தோஷம். உடனே காரில் ஏறு. தண்ணியடிக்காமல் சூதாடாம இருக்கிற ஒருத்தனின் நிலைமை எப்படியிருக்கும் என்று என் மனைவி யிடம்காட்டவேண்டும். அவ தினம் என்னைத் திட்டிக்கிட்டே இருக்கா''.

## நீண்டநாள் வாழ ஓர் ஈஸி வழி!

ஏழை, பணக்காரன் என்ற பேதம் இயற்கைக்கு இல்லை என்பது நூறு சத வீதம் உண்மை தெரியுமா? செலவே இல்லாமல் இயற்கை அன்னை, ஒரு சக்தியை எமக்கு வாரி வழங்கியிருக் கிறாள். அந்தச் சக்திதான் சூரிய ஒளி.



சூரிய ஒளி உங்கள் உடம்பின் மீது பட்டாலே போதும்... நீங்கள் நீண்ட காலம் வாழ்வீர்கள். என்ன ஆச்சரிய மாக இருக்கிறதா? விட்டமின் 'டி'க்கு மனிதனின் வாழ்நாளை அதிகப்படுத் தும் சக்தி இருக்கிறது. இந்த விட்டமின் 'டி' சூரிய ஒளியால் எமக்கு அபரிமிதமாகக் கிடைக்கிறது. எப்படி என்கிறீர்களா? சூரிய ஒளி எமது சருமத்தின் மீது படும்போது எமது சருமமானது விட்டமின் 'டி'யை உருவாக்குகிறது. அதனால்தான், இப்படி உருவாகும் விட்டமின் 'டி'க்கு ஸன் ஷைன் விட்டமின் என்று பெயர். இந்த ஸன்ஷைன் விட்டமினானது, புற்றுநோய், நீரிழிவு போன்ற நோய்கள் உருவாகாமல் தடுக்கும். அதனால், காசா, பணமா? சூரியக் குளியலை எடுத்திடுங்கள். நீண்டநாள் வாழுங்கள்.
















# தேகம் மினுமினுக்க...

'சிற்றின்பம்' என்று சற்று சிறுமைப் படுத்தியே வைத்திருக்கிறார்கள் தாம்பத்திய உறவை . ஆனால் உடல் ரீதியாகவும், உள வியல் ரீதியாகவும் இது புரியும் அற்புதங்கள் அனேகம்.

1.வலி நிவாரணம்

உறவின் உச்சபட்ச பரவச நிலையின் போது 'காதல் ஹோர்மோன்' என்றழைக்கப்ப டும் ஆக்சிடோசினை சிறிதளவு மூளை சுரக் கிறது. அன்புப் பிணைப்புக்குத் தூண்டு தலாக அமைவது இந்த ஆக்சிடோசின்தான். அது மட்டுமல்ல, வலி நிவாரணம் தரும் 'எண்டார்பினை'யும் வெளியிடுகிறது இந்த ஆக்சிடோசின். பெண்களில் 'ஈஸ்ட்ரோ ஜென்' சுரப்பைத் தூண்டுகிறது. மாதவிலக் கிற்கு முந்தைய வலியைக் குறைக்கும் ரகசி யத்தையும் இது கொண்டிருக்கிறது. ஆக, எல்லாவித வலிகளுக்கும் ஓர் அற்புத அரும ருந்து தாம்பத்திய உறவு.

02.நோய் எதிர்ப்புச்சக்தி

அடிக்கடி ஜலதோஷம் 'புளு' காய்ச்சல் என்று அவதிப்படுபவர்களுக்கு தாம்பத்திய உறவு சரியான தீர்வு என்கிறார்கள் செக்சோ லஜிஸ்டுகள். காரணம், உடம்பின் நோய் எதிர்ப்புதன்மையைத் தூண்டி, 'வேலை செய்' என்று உற்சாகப்படுத்துகிறதாம்.

03.மாயமாகும் மன அழுத்தம்

நல்ல தாம்பத்திய உறவை வழக்கமாகக் கொண்டிருக்கும் தம்பதிகள், படுக்கையில்



'புறமுதுகு' காட்டும் மற்ற தம்பதிகளைவிட நன்றாக, நிம்மதியாகத் தூங்குகிறார்கள் என் கிறது பாலியல் மருத்துவம். அதற்கும் ஆக் சிடோசினுக்குத்தான் நன்றி சொல்ல வேண் டும்.

04.மனஇறுக்கம் நீங்கும்

தாம்பத்திய உறவின்போது சுரக்கப்படும் எண்டார்பினை, தீயவிளைவுகள் இல்லாத இயற்கை போதைப்பொருள் என்று கூறுகி றார்கள் மருத்துவர்கள். ஒரு நல்ல, திருப்தி யான உறவுக்குப் பின், தம்பத்தியருக்குள் அவரவரைப் பற்றியும், துணைவரைப்பற்றி யும், தங்கள் வாழ்க்கை பற்றியும் ஆரோக்கிய மான, ஆக்கபூர்வமான எண்ணங்கள் நிரம்பு கின்றன.

05.உடல் கட்டுக்கோப்பு

உடம்பை கச்சிதமாக வைத்திருக்கச் செய்யும் உடற்பயிற்சிகளும், யோகாவும் தாம்பத்தியஉறவுக்கு முன்னால் தோற்றுப் போகும் என்பது பாலியல் மருத்துவர்களின் கருத்து. இது கலோரிகளை எரித்து எடைக் குறைவுக்கு உதவுகிறது. 30 நிமிடங்களில் 150 கலோரிகள் எரிக்கப்படுகின்றன. சராசரி யாக தம்பதிகள் வாரம் மும்முறை 25 நிமி டங்கள் வைத்துகொள்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால்கூட 450 கலோரிகள் எரிக்கப்படுகின்றன.

06.தேகம் மினுமினுக்கும்

தீவிரமான உறவுக்குப் பின், ஆரோக்கி யம்-அழகு தரும் எண்ணங்களால் உங்கள் தேகம் பூரிக்கிறது என்று செக்சோலஜி கூறு கிறது. அதிகரிக்கும் இரத்த ஓட்டம், தேகத் துக்கு ஓர் ஆரோக்கியமான மினுமினுப்பை தருகிறது.

07.புலன்கள் கூர்மையாகும்

உற்றுக் கவனித்தால், உறவுக்குப் பிறகு உங்கள் புலன்கள் கூர்மையாவதை உணர முடியும் என்று கூறப்படுகிறது. குறிப்பாக, உறவின் பின் ''புரோலாக்ஷன்' என்ற ஹோர் மோன் உற்பத்தி விறுவிறுப்படைகிறது. அது மூளையில் 'மோப்பம் பிடிக்கும்' ஏரிய வான ஆல்பாக்டரி பகுதியில் புதிய நியூரான்கள் தோற்றத்தைத் தூண்டுகிறதாம்.

08.இதயத்துக்கு இதம்

உறவின்போது நாடித் துடிப்பு 70 இல் இருந்து 150 வரை கூடுகிறது. இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பிக்கிறது. ஆக மூளைக்குப் பாயும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கிறது. உடம்பு முழுவதும் புத்துணர்வூட்டும் புது ரத்தம் பாய்கிறது. அதேநேரம், பழைய,கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன. அதனால் தான் இது இதயம் காக்கும், இதமளிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழா...

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சவீதிகளில்... மைதானங்களில்... மத்திய நூல் நிலையங்களில்...தேடித் தேடிக் களைத்தேன்.

ஒரு தினம் பிற்பகல் சோமம் கலக்காத பானம் பருகத் தாகநிலையத்தில் உட்கார்ந்திருந்தேன். உள்ளே நட்சத்திர கானங்கள் மெலிதாகக் கேட்க முட்டாள் இயந்திரங்கள், திறமையாகக் கேட்ட பொருள் கொடுக்க, மெதுவாக அந்த இனிய பானத்தைப் பருகிக் கொண்டிருந்தபோது எனக்கு அருகில் அமர்ந்திருந்தவர்கள் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"என்றைக்கு அவர்கள் வருகிறார்கள்?"

"இன்னும் இரண்டே தினங்களில்".

"செய்தி அனுப்பிவிட்டாயா?"

"ஆம். நல்ல கற்புள்ள தமிழில்!"

ஆம்! அவர்கள் இருவரும் கற்புள்ள தமிழில்தான் உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால்... அவர்கள் ஆத்மாவும் நித்யாவும் இல்லை வேறு எவரோ! அது எப்படிச் சாத்தியம்? என்னைத் தவிர மற்றொரு தமிழாசிரியன் இருக்கிறானா? என் மனதில் உற்சாகம் துள்ளியது.

அவர்கள் அருகில் சென்றேன். இளைஞர்கள்தாம். இருவரும் ஆண்கள். "குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும்" என்றேன். திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

"யார் நீர்?" என்றார்கள்.

"நீங்கள் பேசும் தமிழைக்கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு யார் கற்றுத் தந்தார்கள்?"

"உமக்கு இந்தத் தமிழ் புரியுமா?"

"நான்தான் இந்த உலகத்தின் இந்தத் தமிழின் ஒரே ஆசிரியன். அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். உங்களைப் பார்க்கும் வரை... என் இனிய நண்பர்களே, யாரிடம் நீங்கள் பாடம் கற்றீர்கள்? யார் சொல்லுங்கள்!"

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். மூத்தவன் பேசினான்.

"நீர்தானா அது?"

"எது?"

"ஆத்மாவுக்கும் நித்யாவுக்கும் பாடம் சொல்லித் தந்தது?"

"ஆம். ஆம். எங்கே அவர்கள்?"

"அவர்கள் இங்கே இல்லை. ஊருக்குப் போய்விட்டார்கள்.

"எந்த ஊருக்கு?"

அவர்கள் அதற்குப் பதில் சொல்லாமல் "ஆசிரியரே வணக்கம்! நாங்கள் ஆத்மா, நித்யாவிடம்தான் பாடம் பயின்றோம். உங்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறோம். எங்கள் இருக்கைக்கு நீங்கள் வருகை தரவேண்டும். ஆத்மாவும் நித்யாவும் திடீர் என உங்களிடம் சொல்லிக்கொள்ள நேரமில்லாமல் புறப்படவேண்டியிருந்தது. அவர்களுக்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் நீங்கள் கற்றுக்கொடுத்தபடி தமிழ் பரப்புகிறார்கள் என்பதற்கு நாங்கள் உதாரணம். என் பெயர் பாரி. இவன் பெயர் ஓரி".

"அடடா ! என்ன அழகான பெயர்கள்!"

"ஆசிரியரே, நாளை நீர் எம்முடைய விடுதிக்கு வரவேண்டும். முகவரி கொடுக்கிறோம்".

எங்களைச் சுற்றியிருந்தவர்கள் விநோதமான புரியாத உரையாடலை வியந்து பார்த்திருக்க, அவர்கள் தம் முகவரியைக் கொடுத்துவிட்டு பிரியாவிடை பெற்றுச்சென்றார்கள்.

நான் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தேன் என்றால் அது மிகையாகாது. உடனே முதல்வரிடம் சென்று இந்த இனிய செய்தியைச் சொன்னேன். அவர் முகத்தில் எள்ளளவும் நம்பிக்கை இல்லை. மறுபடி தமிழ் வகுப்பைத் தொடங்க என சாகசம் அது என்றார். நான் கோபத்தை அடக்கிக்கொண்டு மறுதினமே அந்த இருவரையும் அவர் முன் நிறுத்துகிறேன் என்று சவால்... மன்னிக்கவும் சூளுரைத்துவிட்டு வெளிப்பட்டேன்.

மறுதினம் சரியான கால அளவில் சரியான உடை அணிந்துகொண்டு கன்னித்தமிழ் பரப்பும் என் புதிய மாணவர்களைத்தேடி அந்த முகவரிக்குச் சென்றேன்.

பாரி, ஓரி! என்ன பெயர் அது? அப்படி ஒருவரும் அந்த முகவரியில் இல்லையாம். அரசாங்க கட்டடக்கலை நிபுணர் ஜான்சன் என்பவரின் வீடாம் அது. நான் தவறான முகவரிக்கு வந்திருக்கவேண்டும்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. முதல்வரின் முகத்தில் நான் எப்படி விழிக்கப்போகிறேன்...? அவரைப் பார்க்காமலேயே இருந்துவிடலாம். இருந்தும் என் மனத்தின் அடித்தளத்தில் இந்தச் சம்பவங்களில் ஏதோ வித்தியாசமான ஓர் இரகசியம் பொதிருந்திருப்பதாகத் தோன்றியது. அவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"செய்தி அனுப்பிவிட்டாயா?"

"ஆம் கற்புள்ள தமிழில்!"

என்ன செய்தி...? எதற்காக இருவர் திடீரெனத் தோன்றித் தமிழ்பயின்று திடீரென மறைந்து அந்தத் தமிழை மற்ற இருவருக்குக் கறபித்து... எல்லோரும் தம் அடையாளங்களை மறைத்து... ஏதோ ஒரு சூது இருக்கிறது இதில்.

முதல்வரைச் சந்தித்தேன்.

"எங்கே உன் மாணவர்கள்?"

நான் முதலிலிருந்து கடைசிவரை விவரித்தேன். அவர்கள் பேசிக்கொண்டதையும் சொன்னேன். அவர் புன்னகை மறைந்தது. இதை அமைதி இலாகாவுக்கு உடனே சொல்லவேண்டும என்றார். தலைகால் புரியவில்லை என்றார்.

என் இருப்பிடத்துக்குச் சென்று சற்றுநேரம் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் படித்தேன். மனம் அதில் படியவில்லை.

இருவர் வந்தார், தமிழைக் கற்றார்.

இருவர் சென்றார், இருவர் வந்தார் மற்று. ஆசிரியத் தளை தட்டியது. என் அறையில் இருந்த ஒலிப்படம் கூப்பிட்டது.

உடனே நான் மத்திய அமைதி இலா காவுக்கு வரவேண்டுமாம். மிக அவசர மாம்!

மத்திய அமைதி இலாகாவின் இயந் திரக் காட்டின் மத்தியில் மூன்று இளை ஞர்களும் பல்கலைக்கழக முதல்வரும் காத்திருந்தார்கள்.

என் தமிழ்ப்பாட விவகாரம் மிகவும் தீவிரமாகிவிட்டதா?"இது என்ன என்று உன்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா?" என்று காட்டினர்.

"மின்காகிதம்" என்றேன்.

"காகிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?" எனக் கேட்டார்கள். அவர்கள் கண்களில் ஆர்வம் கொப்பளித்தது.

நான் காகிதத்தைப் பார்த்தேன். உலகப் பொது எழுத்துகள் தாம். அவற்றைப் பயன்படுத்திப் பழந்தமிழை எழுதியிருந்தது.

"அளதமிள்" என்றேன்.

"என் லிக்? புரிவை புரிவை!" என்றார்கள் அவசரத்துடன்.

அந்தக் காதிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தது.

"யாவையும் நலம். நேரம் சரியானதே. படையெடுப்பு நேரம் பூமி நேரத்தின்படி இருபத்து மூன்று ஐம்பது. முதற்தாக்குதல் கருங்கடலின் நடுவே உலகத் தலைமைச் செயலகத்தில்... இயக்கம் வாழ்க!"

இரண்டு நாள்களுக்கு முன் இந்தச் செய்தி மெர்க்குரி கிரகத்துக்கு அனுப்பப்பட்டதாம். அத்தனை சாகசங்களையும் அத்தனை கம்ப்யூட்டர்களையும் வைத்துக்கொண்டு அதன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்தார்களாம். முடியவில்லையாம்.

என்னைக் கேட்டிருக்கலாம். ஆனால், பழந்தமிழ் அது என்பது அவர்களுக்குத் தெரிந்தால்தானே என்னைக் கேட்டிருப்பார்கள்? என்ன சொல்கிறது என்று அறியப் பரபரத்தார்கள். அதைப் புதுத் தமிழில் விளக்கினேன். அவர்கள் ஒருகணம் சிலைபோல் நின்றுவிட்டார்கள்.

படையெடுப்பு! மெர்க்குரி கிரகக் கொள்ளைக்காரர்களிடமிருந்து...உடனே அவர்களில் ஒருவன் எதிரே இருந்த இயந்திரத்தின் மீது.பாய்ந்து சிவப்புப் பொத்தான் ஒன்றை அழுத்தி 'அலார்ட்! அலார்ட்! படையெடுப்பு, எல்லா விண்வெளி நிலையங்களும் கவனிக்க...' என்று சங்கேத பாஷையில் அதிவேகத்தில் சொற்பொழிய ஆரம்பித்தான்.

மற்றொரு கிரகத்தின் ஒற்றர்களுக்குத் தமிழ்ப்பாடம் கற்றுக்கொடுத்து, அவர்கள் இந்த வழக்கொழிந்த மொழியில் செய்தி அனுப்பிக்கொண்டு... அதைக் கடைசிநேரத்தில் தற்செயலாகக் கண்டுபிடித்து, அந்தத் தாக்குதல் தவிர்க் கப்பட்டு, நம் உலகம் பிழைத்த செய்தி யெல்லாம் இனி பழைய செய்தி.

என் தமிழ் ஆசிரிய வேலைபோய் விட்டது. அதற்குப் பதில் அமைதித் துறையில் அசதிப்பிரிவில் பணிகொடுத்திருக்கிறார் கள். (சதி - அசதி)

நான் இன்னும் "இருவர் வந்தார் தமி ழைக் கற்றார்" எனகிற ஆசிரியப் பாவை முடிக்கவில்லை.

# ராசி பலன்

**23-06-2008 முதல் 29-06-2008 வரை**

(பொ.சந்திரலிங்கம்)

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை1.

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர்.தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## இடபம்



கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. சிறுபிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மிதுனம்



மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரியத்தடை நிலவும். அலைச்சல் இருக்கும்.பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகையை வெல்லலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கடகம்



புனர்பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினா, அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம்.எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிம்மம்



மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம்.தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கன்னி



உத்தரம் 2,3,4 அத்தம், சித்தம் 1,2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர்கள் அயலவர்கள் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைதூர விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## துலாம்



சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு.பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள்அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை பலமாக எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறைகாட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மகரம்



உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடையுண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிகஅக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கும்பம்



அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத் தடையுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும், திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடையுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்லவீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# பூமியை அச்சுறுத்தும் விண்கற்கள்!



50,000 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் அரிஸோனாப் பகுதியில் ஓர் அகிலக் குண்டு வீழ்ந்து பெருங்குழியை உண்டாக்கியது மூலம் இயற்கை தன் ஏகாதிபத்திய அசுர வல்லமையைக் காட்டியிருக்கிறது! இந்த அசுர விண்கல்லின் எடை 300,000 தொன் என்றும், அது விழுந்தபோது வேகம் மணிக்கு 28,600 மைல் என்றும் கணிக்கப்பட்டுள்ளது! இதனால் ஏற்பட்ட பெருங்குழியின் விட்டம் 4000 அடி, ஆழம் 570 அடி தெறித்த பாறைகள் தரைக்கு மேல் 150 அடி உயரம் குவிந்தன. விண்கல் விழுந்த தாக்க அதிர்ச்சி இரண்டரை (2.5) மெகாடன் டியென்டி ஹைடிஜன் அணுகுண்டு வெடிப்பு சக்திகொண்டது என்று கணக்கிடப்பட்டுள்ளது! அதாவது ஹிரோஷிமா, நாகசாகியில் போட்ட அணுகுண்டுகளை விட 150 மடங்கு தீவிர வெடிப்பு சக்தி கொண்டது. அதற்குமேல் சூழ்வெளி மீது தாக்கிய அதிர்ச்சி ஆற்றல் 6.5 மெகாதொன் வலுக்கொண்டது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது!

## பூமிக்குக் கேடு விளைவிக்குமா நேர்விழும் விண்கற்கள்?

பரிதி மண்டல வரலாற்றில் கோள்களைத் தாக்கிய விண்கற்களின் தடங்கள் கோடிக்கணக்கில் எமக்கு விஞ்ஞானக்கதைகள் சொல்கின்றன! சாதாரண ஒரு சிறு தொலைநோக்கி மூலமாக நிலவைப் பார்த்தால் தாக்குக் குழிகள் நிரம்பியிருப்பதைக் காணலாம். வாயுமண்டலம் இல்லாத நிலவின் மடியில் குழித்தடங்கள் அழியாமல் வரலாற்றைக் கூறும்போது பூமியில் பட்ட தடங்கள் யாவும் காற்று, வெப்பம், மழை, நீரோட்டம், பனி ஆகிய கால வெள்ளத்தில் உராயப்பட்டு சிதைவு செய்யப்பட்டு விடுகின்றன. பரிதி மண்டல ஆரம்பகாலத்தில் பேரளவு வடிவமுள்ள விண்கற்கள் அண்டக்கோள்களைச் சிதைவுகள் செய்தன. பிரபஞ்சத்தின் காலவெளிப்பயணத்தில் சில தாக்குதல்கள் பூமிக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளன.


# ஓராண்டு நினைவலைகள்



மண்ணில்
12-02-1928

விண்ணில்
20-06-2007

மலேசியாவில் பிறந்தவரான
லோண்டனில், இலண்டன்
ஆலே இடங்களில் வசித்தவரான

அமரர் கந்தப்பு பூதத்தம்பி
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

ஆதவனும் மேற்கினிலே
ஓய்வெடுத்தே வந்துதிப்பான்
ஆதரவாய் கிழக்கிருந்தே - எமை
ஓய்வின்றி காத்திருந்தீர்!
நொடிப் பிறப்பை செலவு செய்தான்
கொடுத்த உயிர் பறித்தெடுக்க!
கோடிப் பிறப்பினிலே வரவு வைத்தீர்
பதித்த நினைவுகளை பிரித்தெடுக்க!
போவதென்ன நாளும் பொழுதுகளே
போய்விடுமா வாழும் நினைவலைகள்!
மேற்கினிலும் ஒரு திசையுண்டு
நாமறிந்து ஆண்டொன்று ஆனதய்யா!

24 LAUNCESTON RD,
PERIVALE,
LONDON UB6 7EU.
(0044)208 9988450.


உள்ளத்தால் உணர்வால்
உங்களோடு வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.


உதாரணமாக 1908இல் சைபீரியாவில் ஏற்பட்ட காற்று வெடிப்பில் 1300 சதுரமைல்களில் 60 மில்லியன் மரங்கள் விழுந்தன. ஆகவே, ஆறு மைல் அகலமுள்ள ஒரு விண்கல் பெரும் நகர மையத்திலே விழுந்தால் என்ன நிகழும் என்பதைக் கற்பனை செய்ய இயலாது.

## பூமிக்கருகில் சுற்றித் திரிந்துவரும் விண்...

பரிதி மண்டலத்தில் காணப்பட்ட எண்ணற்ற சுற்று வீதி வி... குப்பைகள் ஆரம்ப காலத்திலே நீக்கப்பட்டாலும், இன்னும் ... எண்ணிக்கையில் பூமிக்கு நெருங்கிய விண்கற்கள் காணப்படு... கின்றன. அசுர வடிவ விண்கற்களைக் காட்டிலும் அதிகமாக பொடித்துண்டுகள் திரிந்து வருவதாக அறியப்படுகிறது. அ... சில புவிக்கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு வாயுமண்டலத்தில் க... எரியும்போது நாசா விஞ்ஞானிகள் அவற்றின் வெப்ப அள... துணைக்கோள் மூலம் உளவிக்கணித்துள்ளார்கள். கடந்த 30... களாக ஏற்பட்ட அத்தகைய கனல் விபத்துகளைக் கண்டு ஒ... ஆண்டும் குறைந்தது 5 கிலோ தொன் வெடிப்புகள் நேருகின்... என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளார்கள்.

அடுத்த ஒரு மில்லியன் ஆண்டுகளில் 300 அடி அகலமுள்... மீற்றர்) 100 விண்கற்கள் பூமியைத் தாக்கலாம் என்று விஞ்ஞ... யூகிக்கின்றனர்! அதேகாலத்தில் அரை மைல் அகல (ஒரு கி... மீற்றர்) இரண்டு விண்கற்கள் விழலாம் என்றும் எதிர்பார்க்கிற... அத்தகைய விண்கற்கள் தான் யுகடான் தீவகற்பத்தைத் தாக்... அபாயத் தீங்குகளை விளைவித்து மனித நாகரிக வாழ்க்கை... சிதைத்துள்ளன என்று கூறப்படுகின்றது.





# HOTEL WESTEERN PVT LT

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே
ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya,Colom
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteer
Website:www.hotelwesteern.com



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2008, ஜூன் 22 ஆம் திகதி வெளியிட...